www.padippakam.com

# என் இலக்கிய நண்பர்கள்

தி. ஜானகிராமன்
கா.நா.சு
மௌனி

எம்.வி. வெங்கட்ராம்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# என் இலக்கிய நண்பர்கள்

தி. ஜானகிராமன் — க. நா. சு. — மௌனி

## எம். வி. வெங்கட்ராம்

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

En Illakkiya Nanbargal :
Thi. Janakiraman — Ka. Na. Su. — Mauni
© M. V. Venkatram
First Edition : Feb. 1993
Printed at Suriya Achagam, Madras-17
Published by South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras - 600 002.
Rs. 20.00

என் இலக்கிய நண்பர்கள்
தி. ஜானகிராமன் — க. நா. சு. — மௌனி
© எம். வி. வெங்கட்ராம்
முதற்பதிப்பு: பிப்ரவரி 1993
அச்சு : சூர்யா அச்சகம் சென்னை-17.
வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை-600 002.
ரூ. 20.00

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 9 |
| 2. | தி. ஜானகிராமனுக்காக ஒரு கதை | 17 |
| 3. | க. நா. சு. வும் எம். வி. வி. யும் | 37 |
| 4. | மௌனியும் எம். வி. வி. யும் | 70 |
| 5. | முணுமுணுத்தலும் அலைதலும் | 105 |
| 6. | இலக்கியப் பேட்டி | 130 |
| 7. | மௌனியின் மௌனம் கலைகிறது | 158 |


படிப்பகம்

www.padippakam.com

தான் என்மீது கொண்ட பிரியத்தைக் காட்டிலும்,
என்மீது அதிகப் பிரியங்கொண்ட
மறைந்த இலக்கிய மேதை
திரு. கரிச்சான்குஞ்சுவிற்கு இந்நூல்
சமர்ப்பணம்

—ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

......வெங்கட்ராம் கும்பகோணத்தில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து வருகிறார். பள்ளிப்படிப்பு முடிந்து கல்லூரியில் சேர்ந்த உடன், பதினாறு வயதிலேயே அற்புதமான கற்பனையும் சிந்தனை ஆழமும் கொண்ட கதைகளை எழுதத் தொடங்கியவர். அக்கதைகளை 'மணிக்கொடி' அப்பொழுது வெளியிட்டுக் கொண்டிருந்தது. அவரோடு அதே கல்லூரியில் சகபாடியாக இருந்த என்னையும் இன்னும் சிலரையும் எழுதத் தூண்டின அவருடைய கதைகள். ரஞ்சகமான ஒரே ஒரு வாரப் பத்திரிக்கையும், ஆங்கிலத்திலிருந்து அஜாக்ரதையாகப் பெயர்த்து வைக்கப்பட்ட சில நாவல்களுமே வந்து கொண்டிருந்த 1930 - 40இல், நவீனத் தமிழில் இலக்கிய மதிப்புக் கொண்ட சரக்குகள் வெளிவருவதை அவர்தாம் எங்களுக்கு அறிமுகப்படுத்தியவர்; புதுமைப்பித்தன், கு. ப. ரா., பிச்சமூர்த்தி, பி. எஸ். ராமய்யா இவர்களின் கதையோடு இவருடைய கதைகளும் எங்களுக்கு வழி காட்டின.........

—தி. ஜானகிராமன்
(நித்தியகன்னி 'முன்னுரையில்)

படிப்பகம்

www.padippakam.com

......எனக்கு மிகுந்த ஆவல் தோன்றும் வகையில் "மணிக்கொடி" பற்றி (தி. ஜானகிராமன்) கூறுவான். மணிக்கொடியின் கடைசி வாரிஸான ஸ்ரீ எம். வி. வி. கும்பகோணம் காலேஜில் இறுதியாண்டு படித்தார். அப்போது ஓரிரு தடவை நானும் அவனும் எம். வி. வி.யைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்ததுண்டு. அவரை அப்போது பார்த்ததை நினைத்துப் பார்க்கும் போது மிகவும் இன்பமாய் இருக்கிறது. தூய வெள்ளை வேட்டி, முழுக்கைச் சட்டை, முகத்தில் அமைதி நிறைந்த, அறிவும் சிந்தனையாழமும் சேர்ந்த கம்பீரமான இளைஞன் - நல்ல சிவப்பு நிறம். செளராஷ்டிரர்கள் குடும்பத்தில் பிறந்தவர். அவர்களில் - மிகப் பெரிய பணக்காரர்களான புடவை உற்பத்தியாளர் - கோரா பட்டு வியாபாரிகள் ஒருபுறம் - நெசவு நெய்யும் தொழிலாளிகளான ஏழைகள் ஒருபுறம்: இந்த இரண்டு வகையினரிலும் எல்லோருமே காலேஜ் படிப்பு ஏன், ஹைஸ்கூல் படிப்புக்கூடப் படிக்காதவர்களே. பணக்காரர்களான மைசூர் குடும்பத்து ஸ்வீகாரப் பிள்ளை. எம். வி. வி. அந்த நாளில் அந்த வகையிலும் ஆபூர்வமானவர். ஒரே பிரக்ஞை மயமான வாழ்வில் இருந்தார் அந்த நாட்களில்.........

—கரிச்சான்குஞ்சு

('யாத்ரா' - தி. ஜா. நினைவு மலர் - 1983)

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

## கனவு நிறைவு பெறுகிறது

ஓர் ஏரிக்கறையில் நின்ற அரசமரத்தடியில் நான் உட்கார்ந்திருந்தேன். ஏரி என் முதுகுப்பக்கம் இருந்த தால், அதில் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. ஏரியைக் காத்த கரைமேடு நல்ல உயரம். என் கவனம் தெருப்பக்கம் இருந்தது.

நான் ஜானகிராமனை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன்.

இந்த இடத்தில், இந்நேரத்தில் என்னைச் சந்திக்கும் படி அவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். குறித்தநேரம் தவறிவிட்டது: அவர் வராததால் பொறுமை இழந்து கொண்டிருந்தேன்.

வாயிலிருந்த தாம்பூலத்தைத் துப்பினேன். எப்போ தும் என் கையில் இருக்கும் துணிப்பையிலிருந்த பெட்டியை எடுத்து வெற்றிலை போடலானேன். ஜானகிராமனுக்காக நான் கொண்டுவந்த கும்பகோணம் வெற்றிலையும் சுருள் சீவலும் வாசனைப் புகையிலையும் பையில் இருந்தன. ஆளைக்காணோமே என்று சலிப்போடு தெருவைப் பார்த்தேன்; வளைந்து நெளிந்த தெருவில் மனித நடமாட்டமே இல்லை.

எ—1

படிப்பகம்

www.padippakam.com



அலுப்புடன் எழுந்து தெருவில் நடந்தேன். தரையில் பிதுங்கியிருந்த மரவேர்களுக்கு இடையில் வெற்றிலைப் பெட்டியும், பையும் கிடந்தன. நான் கொஞ்ச தூரம் போவதற்குள் ஜானகிராமனே எதிரில் வருவதைக் கண்டேன்.

'இங்கே எங்கே?'— என்றார் அவர் வியப்புடன்.

'உங்களைப் பார்க்கத்தான்'— என்றேன்.

'என்னைப் பார்க்கவா?' நான் இந்தப்பக்கம் வருவேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் தற்செயலாக இங்கே வந்தேன்'.

'இங்கே, இந்த நேரத்தில் என்னைச் சந்திக்கும்படி உங்களுக்கு கடிதம் எழுதினேனே?'

'கடிதமா? எனக்கு வரவில்லையே?...சரி, கடிதம் இல்லாவிட்டால் என்ன? வாருங்கள், போகலாம்.'

'அரசமரத்தடியில் வெற்றிலைப்பெட்டியும் பையும் கிடக்கு; எடுத்துக்கொள்வோம்.'

இருவரும் அரசமரத்துக்குத் திரும்பினோம். அங்கு வெற்றிலைப் பெட்டியும் இல்லை; பையும் இல்லை.

'ஐயய்யோ, அதுக்குள் கிளப்பிக்கொண்டு போய் விட்டார்களே.' என்கிறேன் திடுக்கிட்டவனாய். 'வெற்றிலைப்பெட்டியில் பணம் வைத்திருந்தேன்; பையில் உங்களுக்காக வாங்கிய வெற்றிலை சீவல் ஸ்டாக் இருந்தது.'

வெற்றிலைப்பெட்டியின் அடிப்பகுதியில் ஓர் அட்டை போட்டு, அதனடியில் செக்குகளும் நோட்டுகளும் வைத்துக்கொள்வது என் வழக்கம். பெட்டி எப்போதும் என் கையிலோ, என் கண் முன்னாலோ இருக்கும் என்கிற என் வியாபார ஜாக்கிரதை ஜானகிராமனுக்குத் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



'பணம் எல்லளவு?' என்றார் தி. ஜா.

'ஐந்து நூறுருபா நோட்டுகள், என் கையில் சில்லரையாக பத்து பதினைந்துதான் இருக்கு......'

பெட்டியைத் தேடி இருவரும் அரசமரத்தை வலம் வந்தோம்; முயற்சி மலடாயிற்று.

'போகுது, விடுங்கள்' என்று அவர் என்னைத் தேற்றினார்.

'பணம் போனால் போகட்டும். வெற்றிலை சீவலுக்கு என்ன செய்வது'—என்று நான் கவலைப்பட்டேன்.

'வழியில் வாங்கிக்கொள்வோம்.'

இருவரும் உரையாடியபடி நாலடி எடுத்துவைத்திருப் போம்; எங்களுக்கு வலதுபக்கம் ஒரு சிறிய வீடு தெரிந்தது. கதவைத் திறந்து வைத்துக்கொண்டு வாசலில் க. நா. சு. நின்றிருந்தார். சீவாத தலையும் சிரிக்காத முகமுமாய்ப் பழைய க. நா. சு.

என்னைக் கண்டதும், 'என்னய்யா இவ்வளவு லேட்? உமக்காக ஒருமணி நேரமாய்க் காத்திருக்கிறேன்...ஜான்கி ராமனை எங்கே கண்டீர்?' என்றார்.

'நான் வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்கிறேன் வியப்புடன்.

'வருவதாய் லெட்டர் எழுதினீரே'ய்யா?

'லெட்டரா? நான் எழுதவில்லையே.'

'நீர் எழுதாமல் எனக்கு எப்படி'ய்யா லெட்டர் வரும்?'

லெட்டரை எடுத்து வருவதற்காகவோ என்னவோ, வீட்டுக்கு உள்பக்கமாய் திரும்பினார் க. நா. சு.

படிப்பகம்

www.padippakam.com



'க. நா. சு. சார், வெற்றிலை பாக்கு இருந்தால் கொண்டு வாருங்கள்' என்று குரல் கொடுக்கிறேன்.

* * *

க. நா. சு. திரும்புவதற்குள், எனக்கு விழிப்பு வந்து விட்டது......

இப்படி ஒரு கனவு கண்டேன், சில மாதங்களுக்கு முன். ஏதாவது தர்க்க நியாயத்துக்கு இந்தக் கனவு கட்டுப் படுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இக்கனவு இன்றும் எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது. நான் இவ்விருவரையும் பெரும்பாலும் மறந்துபோன வேளை யில் வந்ததுதான் இக்கனவின் பெருந்தன்மை.

தி. ஜா.வும் க. நா. சு.வும் இப்போது எங்கே இருக் கிறார்களோ, கனவில் அவர்களுடைய முகவரியை கேட்க தவறி விட்டேன். அவர்களுக்கு என்ன ஜோலிகளோ, அத்தனையையும் கைவிட்டு என்னை சந்திக்க கனவில் வந்தார்களே. இப்படி ஒரு சின்ன மகிழ்ச்சி எனக்கு.

இரவோ, பகலோ, தூங்குகையில் எனக்கு நிறையக் கனவுகள் வருகின்றன; இறந்தவர்கள் மட்டும் அல்ல, இருப்பவர்களும் என் சொப்பனங்களில் பங்கு கொள்வார் கள்; நவரசங்களும் அவற்றில் வழியும். யதார்த்தத்துக்கே ஓடி ஒளிகிற ஒரு சமுதாயத்தில் கனவுகளுக்கு செலாவணி ஏது? எனக்கோ வாழ்க்கையில் ஒரு முக்கியமான பகுதி— கனவுகள்; என் கனவுகளில் மூலஸ்தானம் வாழ்க்கை.

என் அகவாழ்க்கை அதிஅற்புதமானது; அதோடு அதி பயங்கரமானது. இந்த ரகசியம் என்னுடைய நண்பர்கள் மிகச் சிலருக்கு மட்டும் தெரியும்; இந்த நண்பர்களிலும் ஒருசிலர் இலக்கியப் படைப்பாளிகள்: ந. பிச்சமூர்த்தி, ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, கவிஞர் சாலிவாகனன், தஞ்சை பிரகாஷ் முதலியவர்கள். இவர்கள் நான்

படிப்பகம்

www.padippakam.com



சுயசரித்திரம் எழுத வேண்டும் என்று பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறார்கள்.

இந்த நண்பர்களில் மற்றொரு கோஷ்டியினர் இருக்கின்றனர். இவர்கள் கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி, க. நா. சுப்ரமணியன், ந. சிதம்பர சுப்ரமணியன், பி. எஸ். ராமையா, கி. ராமச்சந்திரன், ஆர். சண்முகசுந்தரம் (எல்லோரும் மணிக்கொடிக்காரர்கள்) தி. ஜானகிராமன், 'கரிச்சான்குஞ்சு' (ஆர். நாராயணசுவாமி), கவிஞர் திருலோக சீதாராமன், கவிஞர் சாலிவாகனன் (வி. ரா. ராஜகோபாலன்) முதலியோர்களோடு நான் பழகியதையும், விளையாடியதையும் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொண்டதையும், கருத்து வேறுபட்டு உரத்த குரலில் 'சண்டை' போட்டதையும் என்னுடனிருந்து நேரில் பார்த்தும் கேட்டும் ரசித்து மகிழ்ந்தவர்கள். எவ்வளவு கருத்து வேறுபாடு இருப்பினும், நாங்கள் பரஸ்பரம் காட்டிய மரியாதையையும், மதிப்பையும் கண்டு வியந்தவர்கள். இந்த நண்பர்கள் மற்ற படைப்பாளிகளோடு எனக்கு இருந்த நட்பு பற்றி விரிவாக எழுத வேண்டும் என்று வற்புறுத்தியபடி இருக்கிறார்கள். ஜானகிராமன் திடீரென்று விடைபெற்றபின் அவரைப்பற்றி ஒரு சிறு புத்தகமாவது நான் எழுதியாக வேண்டும் என்று நேரிலும் கடிதத்திலும் என்னை ஊக்கி வருகிறார்கள். ஒரு நண்பர் இதுபற்றி மாதம் ஒரு முறையோ, இரு முறையோ நாலு முதல் பத்துபக்க நீளம் கடிதம் எழுதிக் கொண்டே இருக்கிறார்.

எழுத வேண்டும் என்று எனக்கும் ஆர்வம்தான். என்னால் எழுதாமல் இருக்கவும் முடியாது. ஆனால் 1983க்கு பிறகு நரம்பு நோய் காரணமாக என் விரல்கள் எழுத மறுத்து விட்டன; பேனாவை எடுத்து எழுத முயன்றால் விரல்கள் 'மாடர்ன் ஆர்ட்' பாணியில் ஓவியங்களாக வரைந்து கொடுக்கின்றன. நாளுக்கு நூறு பக்கம் எழுதியது ஒரு காலம்; இப்போது ஒரு கையெழுத்துப்

படிப்பகம்

www.padippakam.com



போடுவதற்கு என் கையை நாலு கைகள் பிடித்துக் கொள்ள வேண்டியுள்ளன; எழுத்து என்னோடு பிறந்த வியாதி என்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னேன்; அது உண்மை ஆகி விட்டது.

இந்த நிலையில் நண்பர்கள் கொடுத்த உற்சாகம் என்னைத் தூண்டியபடி இருந்தது; எழுத வேண்டும் என்கிற இயல்பும் என்னை உந்தியது. கை வலியைப் பொறுத்துக் கொண்டு பிடிவாதமாக எழுதத் தொடங்கினேன். நாளுக்கு ஒன்றரைப் பக்கத்திலிருந்து மூன்று பக்கம் என்ற அளவில் க. நா. சு.வையும் மௌனியையும் பற்றித் தொடர்ந்து எழுதி முடித்தேன். முடித்தபின் இவ்வளவு நீண்ட கட்டுரைகளை எப்படி எழுதினோம் என்று எனக்கு ஒரே திகைப்பு—வலது கையோடு இடது கை மட்டும் அல்ல, என் கால்களும் வலித்தன. அதை நான் பொருள்படுத்தவில்லை.

பெரிய புத்தகமாக இனி என்னால் எழுத முடியாது. அதற்குப் பதிலாக, முடிந்தபோது முடிந்த அளவில் பிச்சமூர்த்தி, கு. ப. ரா., கரிச்சான்குஞ்சு முதலியவர்களை பற்றித் தனித்தனி கட்டுரைகள் எழுத வேண்டும் என்பது என் திட்டம். ஜானகிராமனைப் பற்றி மட்டும் ஒரு சிறிய புத்தகம் எழுத விரும்புகிறேன். காலம் இடம் தருகிறதோ இல்லையோ. புதுமைப்பித்தனை நான் சந்தித்ததே இல்லை.

நான் ஒருகாலும் என்னை விமரிசகனாய் கண்டு கொண்டதில்லை; படைப்பாளியாகவும், ரசிகனாகவும் இருப்பதையே விரும்புகிறேன். ஆனால், இலக்கியச் சங்கதிகளில் எனக்கென்று அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு மாறுபடும் நண்பர்களோடு நான் கட்சியாடுகிறேன். இப்படி கட்சி கட்டி பேசியதால் எங்கள் நட்பு ஒருபோதும் சேதப்பட்டதில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் என் சகாக்களின் படைப்புகளின்

www.padippakam.com



ஆய்வோ விமரிசனமோ அல்ல; எங்கள் நட்பு பற்றிய விவரமே இது. மேலே குறிப்பிட்டுள்ள என் இலக்கிய நண்பர்களும் நானும் ஒருவரை ஒருவர் மதித்தவர்கள்.

க. நா. சு., மௌனியைப் பற்றி நான் கூறியுள்ள சில தகவல்கள், அவர்கள் இருந்தபோதே 'கண்ணதாசன்' மாதப் பத்திரிகைக்கு நான் அளித்த ஒரு பேட்டியில் சுருக்கமாய்க் கூறப்பட்டவை. மௌனி என் பேட்டியில் உள்ள சில தகவல்களை மறுத்து 'கணையாழி'க்குப் பேட்டி கொடுத்தார். இந்த இரண்டு பேட்டிகளும் இப்புத்தகத்தில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன. க. நா. சு. என்னை நேரில் என் கண்ணதாசன் பேட்டி பற்றிப் பேசி விட்டார்; ஜானகிராமனைப் பற்றின என் கட்டுரை, எங்கள் நெருக்கத்தைத் தெளிவாக உரைக்கிறது; அவருக்கும் எனக்கும் இடையில் கூடச் சில கருத்து வேற்றுமைகள் இருந்தன; அவற்றை நாங்கள் சகஜமாகப் பேசிக் கொள்வோம்.

'முணுமுணுத்தலும்...' என்ற கட்டுரை நண்பர் வே. மு. பொதியவெற்பன் (சிலிக்குயில் பதிப்பகத்தின் உரிமையாளர்) தயாரித்த 'மணிக்கொடி' பொன்விழா மலரில் வெளிவந்தது; மலருக்கு நான் சிறப்பாசிரியன். என் இலக்கிய யாத்திரை ஆரம்பத்திலிருந்தே பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதை இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

ஒப்பீடு செய்து திருத்துவதற்குத் துணையாக புத்தகங்களோ, பத்திரிகைகளோ என்னிடம் ஏதுமில்லை. இக்காரணத்தால் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள சில நிகழ்ச்சிகள் சற்று முன்பின்னாகி இருக்கலாம்; ஆனால், எந்த நிகழ்ச்சியும் உண்மைக்குப் புறம்பானது அல்ல. தவிர, என்னோடு நெருங்கிப் பழகிய இலக்கியப் படைப்பாளிகளின் குடும்ப விஷயங்களைப் பற்றி நான் அவர்களிடம் கேட்பதில்லை. அவர்களாகவே ஏதாவது

படிப்பகம்

www.padippakam.com



சொன்னால் கேட்டுக் கொள்வேன். இம்மாதிரி தகவல் களைக் கட்டுரைகளில் தவிர்த்திருக்கிறேன்.

சில ஆண்டுகளாக நான் வீட்டோடு முடங்சிக் கிடக் கின்றவன். பல பத்திரிகைகளில் வெளிவந்த இதுவரை புத்தக வடிவம் பெறாத என் எழுத்துக்களைப் புத்தகங்கள் ஆக்கப் பெருமுயற்சி செய்து வருகிறேன். இந்த என் முயற்சிக்கு உற்சாகம் அளித்து உறுதுணையாக உதவிவரும் நண்பர்கள் வே. மு. பொதியவெற்பன் கவிதைக்காரர் ரவிசுப்பிரமணியன், இலக்கிய ஆர்வலர் அ. முத்து (தலைவர், இலக்கியச் சந்திப்பு,குடந்தை), எம். செல்வசேகரன், நல்லாசிரியர் எஸ். கலியமூர்த்தி, இலக்கியத் திறனாய்வாளர் 'தேனுகா' ஆகியவர் களுக்கு நான் நன்றிக் கடன்பட்டவன். வீட்டில் மூலவ ராக என்னை அமர்த்தி விட்டு, என் சார்பில் எனக்காக உற்சவ மூர்த்திகளாய் உலாவரும் இந்த இனியவர்களை நான் எப்படி போற்றாமல் இருக்க முடியும்?

இந்தப் புத்தகத்தை ஆர்வத்தோடு விரைவாகவும், அழகாகவும் வெளியிடும் சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவன உரிமையாளர் திரு. எம். பாலாஜி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

கும்பகோணம் எம். வி. வெங்கட்ராம்
6-10-92

படிப்பகம்

www.padippakam.com

# தி. ஜானகிராமனுக்காக ஒரு கதை

அன்புடையீர்,

18, 19—11—82-இந்த நாட்களில் எனக்கு ஏற்பட்ட அலைச்சல். ரேடியோ கேட்கவோ நியூஸ் படிக்கவோ நேரம் இல்லை. ஆகவே, ஜானகிராமனின் மறைவு பற்றி எனக்குத் தெரியாது. 19—11—82 பிற்பகல் 12-30 மணி அளவில் சைக்கிளில் வியர்க்க விறு விறுக்க வந்து கொண்டிருந்த என்னை ஒரு நண்பர் நிறுத்தி, "உங்கள் நண்பர் போய்விட்டாரே" என்றார் வருத்தமாக. ஒன்றும் புரியாமல் "யாரு?" என்றேன். "உங்களுக்குத் தெரிந் திருக்காதுன்னு நினைச்சேன், ஜானகிராமன் தான்" என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நம்பமுடிய வில்லை. "இதென்ன விளையாட்டு" என்றேன், கோபமாக. இல்லை, நிசந்தான் என்று தினமணி கொண்டு வந்து காட்டினார். இருவருக்கும் சில நிமிடம் மௌனம்.

இந்த நண்பர் ஜானகிராமனின் இலக்கிய ரசிகர் இல்லை. 27, 28 ஆண்டுகளுக்கு முன்னால் ஜானகிராமன் வீட்டில், அய்யம்பேட்டையில் என்னோடு அவர் வத்தக் குழம்புடன் சாப்பிட்டார். தி. ஜா. உடன் இருக்க, அவருடைய அக்கா பரிமாறினார். அந்த வத்தல் குழம்பு மணமும், அவர்களுடைய அன்பும், இன்னும் அவருக்கு நினைவிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



நம்புங்கள். வேறு எந்த மரணமும் என் மனதில் இப்படி ஒரு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஒரு மாதம் ஆகிவிட்டது. இன்றுவரை கலக்கமாகவே இருக்கிறது. சென்னைக்கு வந்த பிறகு அவர் எனக்குக் கடிதம் எழுதவில்லை. நானும் எழுதவில்லை. அவர்மேல் எனக்குக் கோபம். சென்னை சென்று அவரிடம் சண்டைபிடிப்பது என்று எண்ணியிருந்தேன். நான் சென்னை போகும்முன் அவர் புறப்பட்டுவிட்டார்.

இந்தக் கட்டுரை அவருடைய இலக்கியத் திறனாய்வு அல்ல. நண்பராக அவர் எவ்வளவு **Noble** ஆக நடந்து கொண்டார் என்பதைச் சொல்லவே இதை எழுதினேன். **Subjective** தான். நீங்கள் எதிர்பார்த்தது இதுதானே? என்னைப் பற்றி அவர் கூறியவற்றை இயன்றவரை சுருக்கிவிட்டேன். நிகழ்ச்சிகளையும் குறைத்துவிட்டேன்.

ஜானகிராமனுக்கும் எனக்கும் உள்ள நட்பு, எங்களுடைய கனவுகள் பற்றி ஒரு சிறு புத்தகமே எழுதலாம் போல இருக்கிறது. பார்க்கலாம்.

எம். வி. வெங்கட்ராம்.

△ △ △

திசைகள் எல்லாம் இருளடைந்து, போக்குவரத்துப் பாதைகள் யாவும் அடைபட்டுவிட்டால், இரவில் பயணம் செய்யும் பாதசாரிக்கு எப்படி இருக்கும்? அம்மாதிரி ஒரு சூழ்நிலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நான் சிக்கியிருந்தேன். செல்வமும், செல்வாக்கும் ஒரு வார்த்தை கூட சொல்லிக்கொள்ளாமல் என்னைவிட்டுக் கழன்று ஓடின; உடனே, உறவும் நட்பும் என்னிடம் முறைத்துக் கொண்டன. இது அதிசயமான செய்தி அல்ல; உலகம் தோன்றியது முதல் நடந்துவரும் சங்கதிதானே? ஆனால், என்னுடைய துன்பத்துக்கு விந்தையான ஒரு புதிய பரிமாணம் ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



முருகன் என்னும் தெய்வத்தைக் குருவாக வரித்து' அவரைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று எனக்குத் தெரிந்த வழிகளில் முயற்சி செய்துகொண்டிருந்தேன். அதனால் அவர் மகிழ்ச்சியுற்று, ஒரு கோஷ்டி பூதகணங்களை அனுப்பிவிட்டார் போல் இருக்கிறது. அவை என்னுடைய மூளையின் மரைகளை ஒவ்வொன்றாய்க் கழற்றத் தொடங்கிவிட்டன போலும்: வேறு யாருக்கும் கேளாத ஒலிகளை நான் கேட்க ஆரம்பித்தேன். வேறு யாராலும் கற்பனை செய்ய முடியாத காட்சிகள் எனக்குத் தெரிந்தன. எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, பிடிக்கிறதா, பிடிக்கப் போகிறதா என்று என்னாலேயே நிர்ணயிக்க முடியாத நிலைமை. ஆக, வறுமை காலைக் கவ்விக்கொண்டிருந்த அதே நேரத்தில் என் தலையை யாரோ திருகிக்கொண்டிருந்தார்கள்.

எனக்குப் பெரிய குடும்பம். உள்ளூரில் பிழைக்க முடியாது என்றாகிவிட்டது. மூலையில் முடங்கிக் கிடந்த என்னிடம் 'மதராஸ் போய்ப் பாருங்கள்' என்று மனைவி கெஞ்சிக்கொண்டிருந்தாள். மதராஸ் போனால், கதை எழுதியோ, வேலையில் அமர்ந்தோ குடும்பத்தைக் காப்பாற்றிவிடுவேன் என்று அவளுக்கு ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கை எனக்கு இல்லை; ஏனெனில், எனக்கு என் மீதே நம்பிக்கை இல்லை. சென்னைக்குப் போனால் எங்கே தங்குவது என்பதும் எனக்குப் பிரச்சினை. அதுவரையிலும் நான் எந்த நண்பரையும் நாடிப்போனதில்லை; ஏதாவது ஜோலியாக சென்னைக்குப் போனால் ஹோட்டலில் தங்கித் திரும்பிவிடுவேன். இப்போது நிலைமை மாறிவிட்டது. நான் என்னைத் தொலைத்து விட்டவன் என்ற அவலட்சணக் களை என் முகத்தில் ஏறி உட்கார்ந்திருந்தது; என் கண்ணாடியே எனக்கு அதைச் சொல்லியது. என்னைப் புரிந்துகொண்டு உதவி புரிய யாரால் முடியும்?

ஜானகிராமனின் ஞாபகம்தான் எனக்கு வந்தது. மயிலாப்பூரில் இருந்த அவருக்கு எழுதினேன். உடனே

www.padippakam.com



வருமாறு மறுதபாலில் பதில் வந்தது. மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டேன். சென்னைக்குப் பிழைப்புத் தேடிப் போவதாக நான் எண்ணவில்லை. பஸ்ஸிலோ, ரயிலிலோ அரைபட்டு விடுதலை பெறப் போகிறோம் என்ற எண்ணத்தோடு தான் புறப்பட்டேன். அண்ணன் தம்பி வீட்டில் இரண்டாவது வேளை சாப்பிடுவது என்றாலும், என் உடம்பு நடுங்கத் தொடங்கும். நல்ல நேரத்திலேயே என்காரியங்களை எனக்குச் செய்து கொள்ளத் தெரியாது: நாலு ஆள் உதவி தேவை-நான் அப்படித் தயாரானவன். நிலைகுலைந்த இந்நேரத்தில், ஜானகிராமன் எத்தனை நாள் என்னைக் காபந்தாக வைத்துக்கொள்ள முடியும்? இந்தச் சந்தேகம் என்னை அரித்தபடி இருந்தது.

ஜானகிராமன் வழக்கமான அன்போடு என்னை வரவேற்றபோது எனக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. என் தோற்றத்தைக் கண்டதுமே நான் கண்காணிப்பில் இருக்கவேண்டியவன், சுயேச்சையாக நடமாடத் தகுதி இல்லாதவன் என்பதை அவர் புரிந்துகொண்டார். மாடியில் அவர் படிப்பதற்கும், ஓய்வு எடுத்துக்கொள் வதற்கும் பயன்பட்ட அறையை என்னிடம் ஒப்படைத் தார். அங்கே ஒரு சிறிய லைப்ரரி இருந்தது.

மாடியில் தனிமைப்பட்டு அமர்ந்ததும் "என்ன நேர்ந்தது? ஏன் இப்படி ஆகிவிட்டீர்கள்?" என்று கவலையோடு கேட்டார். என் கதை முழுவதும் சொன்னேன். ஆன்மீக முயற்சியில் எனக்கு நேர்ந்த அதிபயங்கரமான அயிட்டங்களைக் கேட்டு அவர் அஞ்சிவிடுவார் என்று எதிர்பார்த்தேன். மாறாக அவருக்கு என்னிடம் இருந்த அக்கறை அதிகமாயிற்று.

"உங்களுக்கு இத்தனை தெய்வ பக்தி இருப்பது எனக்குத் தெரியவில்லையே?"

"தெய்வத்துக்கு என்மேல் பக்தி இருப்பதுபோல் என் கதை இருக்கிறதே?"

www.padippakam.com



"நீங்கள் இங்கேயே இருங்கள். நான் ரேடியோ ஸ்டேஷனுக்குப் போய் மாலையில் திரும்புவேன், ஏதாவது படித்துக் கொண்டு இருங்கள். கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்; அப்புறம் என்ன செய்வது என்று யோசிப்போம். தனியாக வெளியில் போக வேண்டாம்; மாலையில் இரண்டு பேரும் சேர்ந்து போவோம்" என்று பல தடவை எச்சரித்துவிட்டு அவர் ஆபீசுக்குப் புறப்பட்டார்.

காலையில் சாப்பிட்டுவிட்டு ஒன்பது ஒன்பதரை மணிக்கு ரேடியோ ஸ்டேஷனுக்குப் போவது அவருடைய பழக்கம். காலையில் சாப்பிட்டால் எனக்குத் தூக்கம் வரும். ஆகையால் எனக்கு மட்டும் ஹோட்டலிலிருந்து டிபன் வரும். காலையில் குளிப்பதற்கும் சாப்பிடுவதற்கும் மட்டும் நான் கீழே இறங்குவேன். மற்ற நேரம் எல்லாம் மாடியில்தான் வாசம். படித்துக்கொண்டோ, தூங்கிக் கொண்டோ இருப்பேன் மாலையில் அவர் திரும்பியதும் எங்காவது வெளியில் போவோம். எனக்கு ஒரு சிறு அசௌகரியமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அவர் மட்டும் அல்ல, குடும்பமே கவனமாக இருந்தது.

எனக்கு நான் காணாமல் போனவன்; என்னைத் தேடி என்னிடம் ஒப்படைத்ததற்காக அவர் மேற்கொண்ட முயற்சி மிகவும் சுவாரசியமானது.

* * *

**ஜானகிராமனுக்கு என்னிடம் இந்த சிரத்தை உண்டாகக் காரணம் என்ன?**

நாங்கள் இருவரும் கல்லூரி நண்பர்கள். 1936—37லிருந்து கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சக மாணவர்கள். முதல் ஆண்டிலேயே என் கதைகள் மணிக்கொடியில் வெளிவரத் தொடங்கி நான் எழுத்தாளன் ஆகிவிட்டேன். என் கதை வெளி வந்ததும் கல்லூரியில் என்னை மிகவும்

www.padippakam.com



சங்கோசத்துடன் அணுகிப் பாராட்டுவார். அவரைவிட அதி சங்கோசப்பட்டபடி அவருக்குப் பதில் கூறுவேன். இப்படி ஆரம்பித்தது எங்கள் தொடர்பு. நான் எழுது வதைப் பார்க்க அவர் எங்கள் வீட்டிற்கு வருவதும், நான் அவர் இருப்பிடம் செல்வதுமாக எங்கள் நெருக்கம் அதிகரித்தது. அவருக்கு அப்போதே எழுத வேண்டும் என்ற ஆவல்; இரண்டொரு கதைகளை எழுதி என்னிடம் காட்டினார். எனக்குத் தோன்றிய குறைகளைச் சுட்டிக் காட்டியதும், அவர் அவற்றை பத்திரிகை எதற்கும் அனுப்பாமல் இருந்து விட்டார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவரைப் போல் எனக்குக் கட்டுக்கோப்பான வாழ்க்கை அமையவில்லை. அவர் அய்யம்பேட்டையில் பள்ளி ஆசிரியரானார். நான் மிலிடரி அக்கவுண்ட்சில் சேர பூனாவுக்குப் போய் விட்டேன். அங்கே இருப்புக்கொள்ளாமல் 1943இல் நான் திரும்பியபோது கும்பகோணம் ஓர் இலக்கிய க்ஷேத்திர மாகி இருந்தது. துறையூரிலிருந்து வெளிவந்த "கிராம ஊழியன்" ஆசிரியராக கு. ப. ரா. கும்பகோணத்தில் இருந்தார். அவரைச் சுற்றிலும் ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, சாலிவாகணன், திருலோக சீதாராம், இன்னும் பல எழுத்தாளர்கள். என்னுடைய வருகையால் கு.ப.ரா. மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். புதிதாய் பத்திரிகை தொடங்க விரும்பிய என்னைத் தடுத்து தமது பத்திரிகை யைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கூறினார். இந்த கால கட்டத்தில் ஜானகிராமனுக்கும் எனக்கும் இருந்த நெருக்கம் மிகுந்தது. கு ப.ரா., ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, நான் ஆகிய நால்வரும் கும்பகோணம் தொண்டர் ஷாப்பிலோ, கு. ப. ரா. வீட்டு மாடியிலோ கணபதி விலாஸ் ஹோட்டலிலோ கூடிப் பேசிக் கழித்த மாலை களும், இரவுகளும் எத்தனை!

கு. ப. ரா. மறைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு என் வாழ்க்கையில் மற்றொரு திருப்பம். வியாபாரத்தில்

www.padippakam.com



இறங்கின எனக்குப் பெரிய வெற்றிகள் கிட்டின. ஜானகிராமன் அப்போதும் என்னை அடிக்கடி சந்திப்பது உண்டு. தீபாவளி, அமாவசையன்று நான் செய்யும் 'குபேர பூசை'யிலும் அவர் கலந்து கொண்டது உண்டு. அந்தக் காலத்தில் நான் இருந்த சூழலை வைத்துத்தான் அவர் 'மோக முள்'ளில் என்னை ஒரு கதா பாத்திரமாக்கிப் பார்த்தார். என்னுடைய சுபாவம் பற்றி அவர் இவ்வளவு சரியாகக் கணித்திருப்பதை இப்போதும் வியக்கிறேன்.

அப்போது 'மாதம் ஒரு புத்தகம்' வெளியீடுகள் பிரபலமாக இருந்தன. நான் அப்படி ஒரு வெளியீடு தொடங்க வேண்டும் என்று கரிச்சான் குஞ்சு சொல்லிக் கொண்டிருந்தார். ஜானகிராமனைக் கலந்தபோது மாதப் பத்திரிக்கையாக நடத்தலாம் என்று கூற அப்படியே முடிவு செய்தோம். 'தேனீ' இப்படித்தான் ஆரம்ப மாயிற்று. கரிச்சான் குஞ்சு உள்ளூர்க்காரர்; எனக்குத் துணையாக இருந்தார். ஜானகிராமன் அய்யம்பேட்டை யில் இருந்தார். விடுமுறை நாளன்று எங்கள் வீட்டில் தான் இருப்பார். தேனீக்காக நான் போட்ட திட்டத்தை விட, அவர் போட்ட திட்டம் மகாப் பெரிது.

தேனீக்காக விளம்பரம் சேகரிப்பதற்கென்று நான் ஜானகிராமனை அழைத்துக்கொண்டு பம்பாய் போனேன் வழியில், புனாவில் அவருடைய மாமனார்—ராணுவத்தில் காப்டன்—பங்களாவில் தங்கினோம். தேனீயில் மணிக் கொடி எழுத்தாளர்கள் பலரின் ஒத்துழைப்பு இருந்தது. புதுமைப்பித்தனையும் எழுத வைக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். அவர் தியாகராஜ பாகவதரின் 'ராஜ முக்தி' என்ற படத்திற்கு வசனம் எழுதப் புனாவுக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால், அவருடைய முகவரி எங்களுக்குக் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் புனாவில் சுற்றி அலைந்து புதுமைப் பித்தன் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடித்தோம்.

எங்களுடைய துர்பாக்கியம். இரண்டு நாளைக்கு முந்தித் தான் அவர் முற்றிய நோயாளியாகத் திருவனந்தபுரம் சென்று விட்டதாகத் தெரிந்தது. பிறகு நாங்கள் பம்பாய்க்குச் சென்று சில நாட்கள் தங்கி விளம்பர நிறுவனங்கள் சிலவற்றை அணுகினோம். நாங்கள் இருவருமே இத்துறைக்குப் புதியவர்கள்; யாருடைய ஆலோசனையும் கேளாமல் களத்தில் இறங்கியிருந்தோம். எங்களுக்கு விளம்பரம் கிடைக்கவில்லை; எங்களை விளம்பரம் செய்ய எங்களிடமே பணம் பறிக்க முயன்றார் கள். எல்லா வகையிலும் பம்பாய்ப் பயணம் படு தோல்வி. ஊருக்குத் திரும்பி விட்டோம்.

தேனீ பன்னிரண்டு இதழ்களே வெளி வந்தன. ஒவ்வொரு இதழிலும் அவருடைய கதைகள் இருக்க வேண்டும் என்று விரும்பினேன்; அவ்வாறே எழுதிக் கொடுத்தார். ‘தேனீயில் ஸீரியசான கதைகள் வருகின்றன லைட்டாக ஏதாவது எழுதுங்கள்’ என்றேன். அவரால் முடியாது என்பது என் எண்ணம்; ஆனால், அழகான நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதிக் கொண்டு வந்து என்னை திகைக்க வைத்தார். தேனீயில் நான் எழுதியது கொஞ்சம்; ஜானகிராமனின் கைவண்ணம்தான் அதிகம்.

தேனீ ஓராண்டுதான் வாழ்ந்தது. ஏராளமான நஷ்டம் மட்டும் அல்ல, கூட்டாளி ஒருவரின் துரோகமும் சேர்ந்து பத்திரிக்கையை நிறுத்த வேண்டியதாயிற்று. அதற்காக என்னோடு துக்கம் கொண்டாடியவர்களில் ஜானகிராமன் முக்கியமானவர். தேனீ பற்றி என்னிடம் பெரிய கனவு கண்டவர் அவரே.

பிறகு, அவர் ஆசிரியத் தொழிலை விடுத்து வானொலி நிலையத்தில் சேர்ந்தார். சேருவதற்காக அவர் சென்னைக்குப் போகும் முன், கும்பகோணத்துக்கு என் னிடம் விடைபெற வந்தார். அவர் வந்தபோது ‘304’ எட்டு பேர் சீட்டு ஆட்டத்தில் மெய் மறந்து இருந்தேன்.

www.padippakam.com



அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததையும் நான் கவனிக்க வில்லை. ஆட்டம் முடிந்து அவரை நான் கண்டபோது, அவர் முகம் வாடி விட்டது. என்னைத் தனியாக அழைத்துப் போய், 'இதை விட மாட்டேன் என்கிறீர்களே இந்தக் கும்பல் உங்களுக்குத் தேவையா?' என்று அவர் கோபித்துக் கொண்டார். சீட்டாடுவதற்காக அவர் என்னைக் கண்டிப்பது இது முதல் தடவை அல்ல, 'நான் சூதாடவில்லை, பொழுதுபோக்குக்காக ஆடுகிறோம், நாலு மணியானால் எல்லோரும் கலைந்து விடுவார்கள்' என்று அவரைச் சமாதானப்படுத்த முயன்றேன், அவர் சமாதானப்படவில்லை. 'உங்களுக்கு இது வேண்டாம்; உங்களுடைய Talentஐ இது வீணாக்கிவிடும்' என்று என்னை எச்சரித்த பிறகு, தாம் வானொலி நிலையத் திற்குப் போவதைத் தெரிவித்தார். நான் மகிழ்ச்சியோடு விடை கொடுத்தேன். சென்னைக்கு வரும்போது அவரைச் சந்திப்பதாய்க் கூறினேன்.

சில ஆண்டுகளில் என் வாழ்க்கையில் ஒரே அல்லோல கல்லோலம், நான் மிகவும் சாமர்த்தியமாகக் கட்டிய வியாபாரக் கோட்டை இடிந்து விழலாயிற்று. தெய்வத் தின்பால் எனக்கு இருந்த ஈடுபாடும், முயற்சியும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளும் ஆழம் தெரியாத ஆழத்திற்கு என்னை இழுத்துச் சென்று விட்டன. தலைமை குலைந்த தால் என் குடும்பம் தத்தளிக்கலாயிற்று.

இந்த இக்கட்டான நேரத்தில்தான் நான் ஜானகி ராமனைத் தேடிச் சென்றேன்.

* * *

நான் சென்னைக்கு வந்த இரண்டொரு நாளில் ஜானகிராமன் ஒரு தேர்ந்த சைக்கியாட்ரிஸ்டு போல் தம் வேலையை ஆரம்பித்து விட்டார்



படிப்பகம்

www.padippakam.com



அப்போது அவர் தம் 'நாலு வேலி நிலம்' படக்கதைக்கான வசனம் எழுதிக் கொண்டிருந்தார். ஆபீசிலிருந்து நடிகர் சகஸ்ர நாமத்தின் காரில் திரும்பினார். ஆபீஸ் உடைகளைக் களைந்து வேட்டி கட்டிக் கொண்டு, 'வாருங்கள், போவோம்' என்று என்னையும் அழைத்தார்.

'நான் எதற்கு? நீங்கள் போய் வாருங்கள்' என்றேன். வெளியில் அநாம தேயனாக அலைய எனக்கு ஆர்வம் இருந்ததே தவிர யாரையும் சந்திக்க வேண்டும் என்ற விருப்பமே எனக்கு இல்லை.

'இல்லை, சகஸ்ரநாமம் கட்டாயம் நீங்கள் சந்திக்க வேண்டிய ஒருவர். A Perfect Gentleman. அவர் உங்கள் ரசிகர். உங்களைச் சந்தித்தால் சந்தோஷப்படுவார்' என்று வற்புறுத்தி ஜானகிராமன் என்னை அழைத்துப் போனார். சகஸ்ரநாமத்தின் இல்லத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சகஸ்ரநாமம் நடிப்புப் பயிற்சி பள்ளி நடத்திக் கொண்டிருந்தார் என்று ஞாபகம். என்னை அறிமுகப் படுத்தியதும் மிகவும் மகிழ்ச்சியுற்றார். தம்முடைய சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு கற்றைக் கடிதங்களை என்னிடம் கொடுத்து, 'இதைப் பாருங்கள்' என்றார். மாசு படிந்து கிழியத் தொடங்கியிருந்த கடிதங்கள் சில ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய 'கோடரி' என்ற கதை 'கலைமகளி'லிருந்து கத்தரித்து எடுக்கப்பட்டது.

'இந்தக் கதை எப்போதும் என் பையில் இருக்கும். எனக்கு மனச் சோர்வு ஏற்படும்போது இந்தக் கதையை ஒரு முறை படிப்பது என் வழக்கம். உங்களைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை' என்றார் சகஸ்ரநாமம்.

'உங்களுடைய அடுத்த டிராமா எம். வி. வி.-யை எழுதச் சொல்ல வேண்டும்' என்றார் ஜானகிராமன்.

படிப்பகம்

www.padippakam.com



'அதற்காகத்தானே அவரைப் பார்க்க விரும்பினேன்' என்றார் சகஸ்ரநாமம்.

இப்படி எல்லாம் அவர்கள் பேசிய உற்சாகத்தில், நான் எழுத்தாளன் என்ற பிரக்ஞை என்னுள் மூண்டது. நாடகம் எழுதுவதாய் அவர்களிடம் ஒப்புக்கொண்டேன்.

ஜானகிராமன் யாரையும் எதனையும் மிகைப்படுத்தி வருணிப்பார். போற்றுவதும் அப்படித்தான், தூற்று வதும் அப்படித்தான். ஆனால், அவர் சகஸ்ரநாமத்தைப் பற்றிக் கூறியது சரியான உண்மை.

* * *

அடைமழையாகப் பிடித்துக் கொண்டிருந்தது. தெருக்களில் அதிகப்படியாகவோ அநாவசியமாகவோ நடமாட்டம் இல்லை. ஆகையால் நான் தனியாக வெளியே போய்விடுவேன் என்ற கவலை இல்லாமல் ஜானகிராமன் ஆபீசுக்குப் போகலானார். படிப்பதற்கு எனக்கு நிறைய நேரம் கிடைத்தது. எழுத வேண்டும் என்று தோன்றவில்லை.

"நீங்கள் ஏன் எழுத முயற்சி செய்யக் கூடாது? எழுத்தில் concentrate செய்தால் அது உங்களுக்கு ஒரு நல்ல distraction ஆக இருக்குமே?" என்றார் ஒரு நாள்.

'நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. என் மனத்தில் நடப்பதை டயரி போல் எழுதி வை என்று பிச்சமூர்த்தியும் சொன்னார். அது பிரசுரம் ஆகாவிட்டாலும் யாருக்கா வது பயன்படும் என்றார். ஆனால், எழுதுவதற்கான அமைதியை எனக்கு மனம் தரவில்லை.'

'மனக்குழப்பம் என்கிறீர்கள்; உங்கள் அனுபவங் களைக் கதைபோல் தெளிவாய்ச் சொல்கிறீர்களே, சொல்வது போலவே நீங்கள் ஏன் எழுதக்கூடாது?'

www.padippakam.com



'பேசுவது வேறு, எழுதுவது வேறு, எழுதுவதற்கு மிக அதிகமான concentration தேவைப்படுகிறது. எழுத உட்காராதபடி மனசில் குளறுபடி நடந்தபடி இருக்கிறதே!'

'concentration ஆல் அந்தக் குளறுபடியை அடக்க முயலுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.'

என்னுடைய சங்கடத்தை அவருக்குப் புரியும்படி சொல்ல என்னால் முடியவில்லை என்று தோன்றியது. 'என் நிலைமை எனக்கே வினோதமாக இருக்கிறது. மனசுக்குள் நான் பைத்தியம்; வெளியே சித்த சுவாதீனம் உள்ளவன் போல் நிர்வாகம் செய்கிறேன். இது எப்படி சாத்தியம் ஆகிறது என்று எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. எழுத்து மனத்தைப் பொறுத்த விஷயம் ஆயிற்றே!'

'இவ்வளவு தெளிவாய்ப் பேசுகிறீர்கள்; இந்த உறுதியோடு ஏன் எழுதக்கூடாது? நீங்களும், நானும் clarity யோடு எழுதக்கூடியவர்கள் communication கலையின் முதல் தேவை என்பதை தெரித்து எழுதுகிறவர்கள். நாம் இருவரும் சேர்ந்து எத்தனையோ திட்டம் போட்டோம். இப்போதும் நாம் அதைச் செய்ய முடியும்.'

பல ஆண்டுகளுக்கு முன் நாங்கள் கண்ட கனவுகளின் எதிரொலியாக அவர் பேசினார். கு.ப.ரா.-வைப் போல் ஜானகிராமனுக்கும் சன்னக் குரல். இருவருமே சற்றே நாசி வழியாகப் பேசுவது போல் இருக்கும். இருவருமே குரலைத் தூக்கிப் பேசியதை நான் கேட்டதில்லை. ஆனால், இருவருடைய பேச்சிலும் மென்மை இருந்தாலும் அழுத்தம் இருக்கும்.

எனக்குத் தூக்கம் கலைவதுபோல் இருந்தது, அவர் ஆபீசுக்குப் போன பிறகு, கடிதம் எடுத்துக் கொண்டு

எழுத முயலுவேன். கிறுக்குக்கிறுக்கிக் கிழித்துப்போட்டதுதான் மிச்சம். கொஞ்ச தூரம் மனம் என்னோடு வரும்; திடீரென்று தலையில் கை வைத்துக் கொண்டு ஒப்பாரி வைக்கும். ஆபாசமான காட்சிகளைக்காட்டி ஆனந்தப்படும். கையில் பேனாவும், எதிரில் கடிதமும் இருப்பதை மறந்துபோவேன்.

நாளாக ஆக, இது பெரிய தொல்லை ஆகிவிட்டது. மாலையில் திரும்பியதும் ஜானகிராமன், 'ஏதாவது எழுதினீர்களா?' என்று கேட்டால் என்ன சொல்வது என்று தப்பு செய்த மாணவன் போல் எனக்குச் சங்கோசமாக இருந்தது.

* * *

ஜானகிராமனுக்கும் தெய்வ நாட்டம் மிகுதி. அவருடைய வழி வேறு என் வழி வேறு.

இந்தோனேஷியாவில் (அப்படித்தான் ஞாபகம்) ஒரு குரு தேவராம்; எனக்கு அவர் பெயர் மறந்துவிட்டது. அவர் ஒரு புதிய தியானமுறை போதிக்கிறாராம். அவருக்கு உலகம் எங்கும் சீடர்களாம். அவருடைய ஆசியும் அங்கீகாரமும் பெற்ற ஒரு தலைமைச் சீடர் மயிலாப்பூரிலேயே இருக்கிறாராம். அவருக்குத் தியான முறை போதிக்கும் அதிகாரம் இருக்கிறதாம். அவரிடம் தீட்சை பெற்ற சென்னை சீடர்கள் வாரத்திற்கு ஒருமுறை அவர் இல்லத்தில் கூடித் தியானப் பயிற்சி செய்வது வழக்கமாம். ஜானகிராமனும் ஒரு சீடர். தியானக் கிழமையன்று புறப்பட்டார். என்னையும் கூப்பிட்டார்.

'அது என்ன புதிய தியான முறை?' என்று கேட்டேன். N. P. 'எல்லோரும் ஒரே ஹாலில் கூடுவோம். தனித்தனியாக் அமருவோம். ஆசனம் என்று எதுவும் கிடையாது. மந்திரம் இல்லை. சிரிப்பு வந்தால் சிரிக்க லாம்; அரிப்புவந்தால் சொரிந்துகொண்டே இருக்கலாம்.

www.padippakam.com



கொட்டாவியை அடக்கவேண்டாம். கவனம் மட்டும் அகத்தில் இருக்க வேண்டும், இருக்க முயல வேண்டும்.'

எனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை; 'இந்தோனேஷியக் குருவைப் பார்த்திருக்கிறீர்களா?'

'இல்லை, அடுத்த வருடம் இந்தியாவுக்கு வருகிறார்' பார்ப்பேன். தியானத்தில் கலந்து கொள்வதால் உங்களுக்கு நன்மை உண்டாகும்'.

'என்னை சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்'.

'நான் பேசி ஏற்பாடு செய்கிறேன்'.

இருவரும் சைக்கிளில் தலைமைச் சீடர் (வக்கீல் என்று ஞாபகம்) வீட்டுக்குப் போனோம். ஜானகிராமன் அங்கே கூடியிருந்த ஒரு டஜன் சீடர்களிடம் என் கஷ்டத்தைச் சொல்லி, என்னை அன்றைய தியானத்தில் கலந்து கொள்ள அனுமதி கேட்டார். என் கதையைக் கேட்டதும் தலைமைச் சீடர் உள்பட எல்லோரும் என்னைப் பீதியோடு பார்த்தார்கள். 'இது எங்களால் ஆகாத காரியம். குருதேவர் நேரில் பார்க்க வேண்டிய கேஸ்', என்று என்னை சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். நான் வீட்டுக்குத் திரும்பினேன்.

ஜானகிராமன் திரும்பியதும் சிரித்தபடி கேட்டேன். 'என்னய்யா'து? என்னைப் பார்த்து அவர்கள் இப்படி பயப்பட்டார்கள்?'

'இம்மாதிரி பயங்கரமான சமாசாரங்களை அவர்கள் கேட்டதில்லையாம். இந்தோனேஷியாவுக்கு எழுதி குருவின் யோசனையைக் கேட்பதாய்ச் சொன்னார்கள். நாளைக்கே எழுதி விடுவார்கள்'.

'நான் விழுங்கி இருப்பது கடப்பாறை: சுக்கு கஷாயம் என்ன செய்யும்?'

* * *

www.padippakam.com



கிழித்துப்போட்ட கடிதங்களை ஜானகிராமனிடம் காட்டி,

'நான் எழுத முயற்சி செய்து குப்பைதான் சேர்ந் திருக்கிறேன்' என்றேன்.

'அதனால் என்ன? உங்களால் முடியும், முடியும் என்ற நம்பிக்கையால் எழுதுங்கள். இது உங்களுடைய வளர்ச்சியில் முக்கியமான கட்டம். கட்டாயம் வெற்றி கிட்டும். பிச்சமூர்த்தி சொன்னபடியாவது, உங்கள் மனப் போக்குகளை எழுதலாமே'.

'எழுதி என்ன செய்வது? புராணக் கதை, புரியாத கதை என்பார்கள், அச்சேறாது'.

'வெளியாவதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? அது வேண்டாம், உங்களுக்குச் சுலபமாக, சிறுகதை, கட்டுரை எழுதுங்களேன்'.

மறுநாளே அவர் என்னைத் தம்மோடு ரேடியோ ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார். அங்கே மீ.ப. சோமு முதலிய நண்பர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். ஷேக்ஸ்பியரின் வெனீஸ் வர்த்தகன் கோர்ட் ஸீன் மொழி பெயர்ப்பு அவசரமாக மறு நாளே தேவை என்று என்னைச் செய்து தருமாறு கேட்டார்கள்.

அன்று இரவு வெகு நேரம் கண் விழித்திருந்து தமிழாக்கம் செய்து கொடுத்தேன். அவசரம், எழுதியாக வேண்டிய நிர்ப்பந்தம், மனம் ஒன்றி மூன்று மணிநேரம் எழுதிக் கொடுத்தேன். அடுத்த நாளே அது ஒலி பரப்பா யிற்று.

முயன்றால் என்னால் எழுத முடியும் என்ற நம்பிக்கை என்னுள் தழைத்தது.

* * *

படிப்பகம்

www.padippakam.com



‘சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள் இங்கே முகாமிட்டிருக்கிறார்கள். நாளைக்கு சோமுவோடு அவரைத் தரிசிக்கப் போவோம்’ என்கிறார் ஜானகிராமன்.

எனக்கு விருப்பம் இல்லை, ஆயினும் அவருடைய ஏற்பாட்டை மறுக்க முடியவில்லை. என் சித்தத்தை சேதப்படுத்த முயலும் தாமசத்தைக் களைவதற்காக அவர் செய்து வந்த முயற்சியின் ஒரு பகுதி இது. இந்த முயற்சியும் வெற்றி பெறும் என்று எனக்குத் தோன்றவில்லை.

மறுநாள், நாங்கள் மூவரும் சிருங்கேரி மடத்திற்குப் போனோம். சோமுவிடம் ஜானகிராமன் என் கதையை ஓரளவு சொல்லி இருந்தார். இருவரும் சுவாமிகளிடம் என் கஷ்டத்தை உரைத்துப் பரிகாரம் வேண்டினார்கள். பூசை செய்து ரட்சை தருவதாகவும், நாலைந்து நாள் கழித்து வருமாறும் சுவாமிகள் கூறினார்கள்.

நாலைந்து நாள் கழித்து ஜானகிராமன் என்னை மடத்துக்கு அழைத்தார். உறுதியாக மறுத்து விட்டேன். சென்னைக்கு வருமுன்பே நான் காஞ்சி பெரியவாளைத் தரிசித்து முறையிட்டேன். அவர்கள் ரட்சை தருவதாய்ச் சொல்லவில்லை. ‘பயப்படாதே, உன் குரு உன்னை ரட்சிக்கிறார்’ என்று ஆசி கூறினார்கள். இதை ஜானகிராமனிடம் சொன்னேன்.

‘தெய்வத்தைக் கும்பிட்டதால் வந்த வினைதானே இது? இதை தீர்க்க வேண்டிய பொறுப்பு அவருக்குத் தானே? எனக்கு ரட்சை, கவசம், மந்திரம், யந்திரம், தந்திரம் எல்லாம் கந்தரநுபூதி தான். எனக்கு வேறு ரட்சை வேண்டியதில்லை...என்ற என்னுடைய முரட்டுப் பிடிவாதத்தைக் கேட்டு, அவர் மடத்துக்கு வருமாறு என்னை வற்புறுத்தவில்லை.

* * *

www.padippakam.com



ஓர் இரவு ஜானகிராமன் நாற்பது பக்கம் நோட்டு ஒன்றை என்னிடம் கொடுத்தார். என் சாத்திரப்படி (Numerology) அவருடைய வாழ்க்கையைக் கணித்து யாரோ ஒருவர் எழுதிக் கொடுத்த குறிப்புகள் நோட்டில் இருந்தன.

எனக்கு ரொம்பக் கொஞ்சம் நியூமராலஜி தெரியும், ஜானகிராமனின் பெயர் 28 எண்ணில் இருந்தது. 28=2+8=10=1; 1 எண் சூரியனைக் குறிப்பது; இந்த எண்ணின் ஆதிக்கத்தில் உள்ளவர்களுடைய வாழ்க்கை பிரகாசமாக இருக்கும். ஆனால் 28 எண்ணுக்கு ஒரு பலவீனம் உண்டு; புகழின் உச்சிக்குத் தள்ளிச் சென்று திடீரென்று கீழே தள்ளி விடும். தளபதி MAC Arthur பதவியிலிருந்து திடீரென்று விலக்கப்பட்டதை ஒரு புத்தகம் 28 எண்ணுக்கு உதாரணமாய்த் தருகிறது. இதை ஜானகிராமனிடம் கூறினேன்.

அவர் சிரித்தார்; 'இதை எழுதித் தந்தவரும் அதைச் சொன்னார். புகழின் உச்சியில் இருக்கும்போது பெயர் Spellingஐ மாற்றிக் கொள்ளும்படி ஒரு தந்திரமும் சொல்லியிருக்கிறார்.'

'புகழின் உச்சியை எப்படிக் கண்டு கொள்வீர்கள்?'

'புகழ் வந்தாகட்டும்; பிறகு உச்சியைத் தேடலாம்' என்றார் அவர்.

புகழ் வந்தாயிற்று; ஆனால் இதுதான் அவருக்கு உச்சியா? இதற்கும் மேலே ஏற வல்லவராயிற்றே அவர்?

* * *

மழை கொட்டிக் கொண்டே இருந்தது, வெட்ட வெளி தண்ணீரைக் கொட்டி பூமியைக் குட்டை ஆக்கி விடும் போலிருந்தது. எனக்கு மழை எப்போதும் வசீகரம். அதனுடைய மெல்லிசை எனக்குப் பிடிக்கும்;

www.padippakam.com



வல்லிசையும் பிடிக்கும். அதற்குப் பயந்து கூரையடியிலும், மரத்தடியிலும் பதுங்கியவர்கள் பரிகசிக்கும்படி கொட்டு மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி மெல்ல நடந்து போவதென்றால் மிகவும் பிடிக்கும். இன்று ஜானகிராமனின் வீட்டு மாடியிலிருந்தபடி மழையின் ஆர்ப்பாட்டத்தோடு ஒன்றிப் போகிறேன். கீழே இறங்கி ரயில்வே ஸ்டேஷனுக்கு நடக்கலாமா என்றோர் எண்ணம் வருகிறது.

ஒரு காரணமும் இல்லாமல் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் நினைவு வந்தது. கணவனை இழந்து வேறொருவனை ஏற்றவள்; பல ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு குழந்தைகளுடன், இப்படி ஓர் அடைமழையில் மின்சாரம் செத்த நள்ளிரவில், கதவைத் தட்டி என்னை எழுப்பி உதவி கேட்டாள். இயன்றதைச் செய்தேன். மடியும் ஆசாரமுமாக அவள் நடந்து கொண்டதால் எனக்கு அவளிடம் அப்போது கோபம் உண்டாயிற்று.

அந்த நள்ளிரவு நாடகம் இப்போது தரிசனம் ஆயிற்று. அப்படியே கதைக் கருவாய் உருவாயிற்று; உடனே பிறப்பதற்காக வழி தேடி உதைத்தது, ரிஷி கர்ப்பம்!

கடிதத்தை எடுத்துக் கதையைக் கிறுக்கத் தொடங்கினேன்.

ஜானகிராமன் எதையும் ஒரே முறை எழுதுவார்; எழுதியதைப் படித்தும் பார்க்க மாட்டார். Processing பூராவையும் மனதிலே செய்து கொண்ட பிறகே எழுத உட்காருவார். எனக்கு அப்படி அல்ல, எதையும் 2, 3, 10, 20 தடவை எழுதியாக வேண்டும்; படித்துப் படித்துச் செதுக்கியபடி இருப்பேன். அவருடைய கைப் பிரதியைப் பார்த்தால் ஆயிரக்கணக்கான எட்டுக்கால் பூச்சிகள் ஒன்றின் மீது ஒன்று விழுந்தடித்துக் கொண்டு

ஓடுவதுபோல் இருக்கும். எனக்கு கைப்பிரதி பார்க்க அழகாக இருக்க வேண்டும்.

அப்பாடா, நான் ஒரு சிறுகதை எழுதி விட்டேன்! உலகத்துக்கு விமோசனம் பிறந்து விட்டது!

அவருக்கு கதை மிகவும் திருப்தியாக இருந்தது; 'இந்த talentஐ வீணாக்குகிறீர்களே?' என்று வழக்கம்போல் வருந்தி விட்டு, 'யாருக்கு அனுப்பலாம்?' என்று கேட்டார்.

'கல்கிக்கு'

கதையை அவர் எடுத்து வைத்துக் கொண்டார்.

'காலையில் நான் போஸ்ட் செய்கிறேனே?'— என்றேன்.

'ஆபீஸ் போகும்போது நான் செய்கிறேன்'—நான் தபாலில் சேர்க்கமாட்டேனோ என்ற சந்தேகம் அவருக்கு.

கல்கியில் 'மழை' என்ற பெயரோடு அந்த கதை வெளிவந்தது.

ஜானகிராமன் வீட்டில் சுமார் இருபது நாள்கள் தங்கியாகி விட்டது. இப்படித் தங்குவது என் இயற்கைக்கு ஒவ்வாத காரியம்; இப்படித் தங்க முடிந்தது என்றால் அவர் மட்டும் அல்ல, குடும்பத்தினர் எல்லோருமே அவ்வளவு அன்போடு பழகினார்கள். ஆனால், தீபாவளி நெருங்க, நெருங்க, 'இவர்களை அளவு மீறி தொல்லை படுத்துகிறோம்' என்ற எண்ணம் வலுத்து வந்தது. தீபாவளிக்கு ஒரு வாரம்தான் இருக்கிறது என்றதும், ஜானகிராமனிடம், 'நாளைக்கு ஜனதாவில் ஊருக்குப் புறப்படுகிறேன்' என்றேன்.

திகைத்துப் போனவர், என்னது, ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கே மித்திரனில்

www.padippakam.com



சொல்லி இருக்கிறேன். எங்காவது வேலையில் சேர்ந்து விடலாம்', என்று அப்போதும் கட்டாயப்படுத்தினார்.

நான் இணங்கவில்லை; 'தீபாவளிக்கு நான் இல்லாமல் குழந்தைகள் தவித்துப் போவார்கள்', என்று நான் சொன்னது ஓர் உண்மை. ஊரில் புதுமையான அல்லல்களும் என்னை எதிர்பார்த்து தவிக்கின்றன என்ற மற்றோர் உண்மையை நான் அவரிடம் சொல்லவில்லை. மறுநாள் ஊருக்குப் புறப்பட்டேன்.

* * *

இந்த நண்பர் இப்போது எனக்கு இல்லை என்றாகி விட்டார். என்னைப் பற்றி அவர் எழுதுவார் என்று நான் எண்ணியிருந்தேன்; கெட்டிக்காரரர், என்னைவிட இளையவர், என்னை முந்திக் கொண்டு விட்டார்.

* * *

யாத்ரா
தி. ஜானகிராமன் நினைவு மலர், 1983.

படிப்பகம்

# க. நா. சு.வும் எம். வி. வி.யும்

'உமக்குத் தெரியாதா, ஓய்? க. நா. சு. வுக்கு ஹார்ட் அட்டாக். ஆசுபத்திரியிலே...' என்று சுதேசமித்திரன் வாரப்பதிப்பு ஆசிரியர் சீ. சீநிவாசன் தொடருவதற்குள் நாங்கள் இருவரும் பதறிவிட்டோம்; தற்செயலாக சென்னை வந்திருந்த தஞ்சை பிரகாஷ் என்னோடு இருந்தார். எங்கள் இருவருக்கும் க. நா. சு. விடம் ஓர் ஈடுபாடு.

'என்னய்யா, நிசமாகவா சொல்கிறீர்? போன வாரம் அவரோடு பேசிக்கொண்டிருந்தேன்......'

'அதனால்தான் ஹார்ட் அட்டாக் வந்ததோ என்னவோ' பயப்படாதீர், க. நா. சு. இன்று காலையில் வீட்டுக்கு வந்துவிட்டார். ரெஸ்ட் எடுக்கிறார். ஒரு வாரமாவது பெட்டில் இருக்க வேண்டும்; மனுஷன் கேட்பாரா? போனதடவையைவிட இந்த தடவை சீரியஸ்,' என்றார் எஸ். எஸ்.; அவரும் நானும் இருக்கிற இடத்தில் ஒரே கலகலப்பாக இருக்கும். அன்று எனக்குப் பேசத் தோன்றவில்லை. க. நா. சு. வைப் பார்க்க பிரகாஷோடு புறப்பட்டேன். பொடிநடையாக நடந்தாலும் மித்திரன் ஆபீசிலிருந்து க. நா. சு. வின் வீடு பத்து நிமிட தூரம்.

க. நா. சு. இரண்டாவது மாடியில் குடியிருந்தார். படி ஏறவேண்டிய தொல்லை இருப்பினும் சௌகரியமான இடம். அவருக்கு அடக்கமான குடும்பம்: ஸ்ரீமதி க. நா. சு., ஒரே மகள், ஆக மூன்றேபேர். மகள் பி. எஸ். சி., படித்துக் கொண்டிருந்தாள்; மிகவும்

www.padippakam.com



அறிவுக்கூர்மை உடைய பெண். க. நா. சு, வுக்கு மகளிடம் அளவில்லாத வாஞ்சை. என்னைச் சந்திக்கும் போதெல்லாம் பாப்பாவின் அசாதாரணமான புத்தி சாலித்தனம் பற்றிப் பேசுவார். அப்பா கூறியதை அப்படியே மகளிடம் சொல்லுவேன். அப்போது பாப்பா அப்பாவைப் பரிகாசம் செய்வதைக் கேட்டு சிரிக்காமல் இருக்க முடியாது. நான் க. நா. சு. வின் வாயைக் கிளறிக்கொண்டிருப்பதை மிகவும் ரசிப்பாள்.

ஸ்ரீமதி க. நா. சு. தமிழ்நாட்டில் முழுநேர எழுத்தாள னாக வாழ்வது ஓர் அசட்டு வீரதீரச் செயல் என்ற உண்மைக்குப் பழகிவிட்டவர். நானும் சுயேச்சை எழுத்தாளனாக **(Freelancer)** சென்னையில் சுற்று வதைக்கண்டு, என்னிடம் ஏகப்பட்ட அனுதாபம் அவருக்கு; குடும்பத்தைக் கும்பகோணத்தில் விட்டு நான் சென்னையில் தனியாக இருப்பது பற்றியும் அவருக்குப் பெரிய கவலை. நான் அவர்கள் வீட்டுக்குப் போகும்போது எல்லாம், ‘ஏன் மாமா, இன்னும் ‘ஃபாமிலி’யைக் கூட்டி வரலையா?’ என்று கேட்கத் தவறுவதில்லை. ஆர். சண்முகசுந்தரமும் நானும் சிலமுறை க. நா. சு, வை பார்க்கப்போயிருக்கிறோம். அவரிடமும் ஸ்ரீமதி க. நா. சு. அதையே வற்புறுத்துவார். க. நா. சு. வோடு நாங்கள் மணிக்கணக்கில் பேசினாலும் தாயாரோ மகளோ குறுக்கிடமாட்டார்கள். சில ஆண்டுகள் நான் அக்குடும் பத்தாருடன் பழக நேர்ந்தது. எனக்குத் தெரிய அபஸ்வர மாக அங்கே ஏதும் நடந்ததில்லை: கோபம், கூப்பாடு என்பது கிடையாது; எப்போது போனாலும் மூவரும் சிரித்த முகத்துடனேயே என்னை வரவேற்பார்கள்.

அதெல்லாம் சரி, குடும்பத் தலைவருக்கு இப்படி மாரடைப்பு போன்ற விபத்து ஏற்படும்போது அந்த தாயும் பெண்ணும் எப்படி தவித்திருப்பார்கள்? அதை நினைக்கவே எனக்குக் கவலையாக இருந்தது. பிரகாஷும் நானும் மாடியை அடைந்தபோது க. நா. சு. தரையில்

www.padippakam.com



பரப்பிய மெத்தைமீது படுத்திருந்தார்; மூன்று நாள் தாடிகூட அவருடைய இயல்பான புன்சிரிப்பை மறைக்க முடியவில்லை. 'வாரும்'ய்யா', என்றார் பொதுவாக. அடுக்களையிலிருந்து வெளிப்பட்ட பாப்பா, 'வாங்கோ, மாமா, சார், என்றாள். 'அம்மா இல்லையா?' என்ற என் கேள்விக்கு 'வெளியிலே போயிருக்கா... அப்பாவோடு பேசிண்டிருங்கோ, எனக்கு வேலை இருக்கு', என்று கூறியபடி அடுக்களைக்கு ஓடினாள்.

நாங்கள் படுக்கையை நெருங்கியதும் க. நா. சு. எழுந்திருக்க முயன்றார். அவருடைய தோள்களை மெல்ல அழுத்திப் படுக்கவைத்து, 'நீங்கள் படுத்திருந்தபடி பேசுங்கள்', என்றபடி நானும் பிரகாஷும் தரையில் உட்கார்ந்தோம்.

'என்ன நடந்தது?'

'என்ன நடக்கும்? திடீரென்றுதானே அட்டாக் வருகிறது? முன்னைவிட சீரியஸ்தான். இந்த தடவையும் பிழைச்சிட்டேன். ஜாக்கிரதையா இருக்கனும் என்று டாக்டர்கள் 'வார்ன்' செய்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்', என்று அவர் சிரித்தார்.

'நீங்கள் அலைகிறதைக் குறைக்கணும்', என்கிற வழக்கமாக அறிவுரை வழங்கினேன்.

'நடக்கிற காரியமா'ய்யா? வீட்டிலேயே இருந்தால் ஹார்ட் அட்டாக் வராது' என்று டாக்டர்கள் கியாரண்டி தருவார்களா, என்ன?'

க.நா.சு. விபத்தைக் கடந்தவராய்த் தெரியவில்லை; விபத்து அவரைக் கடந்து ஓடி விட்டதாய்த் தோன்றியது; உற்சாகமாய்ப் பேசினார்; எனக்கும் உற்சாகம் உண்டாயிற்று. இடையிடையில் பிரகாஷ் பேசினார்.

'நீங்கள் தமிழுக்கு செய்ய வேண்டியது நிறைய இருக்கு', என்றார் பிரகாஷ்.

படிப்பகம்

www.padippakam.com



'என்னாலானதைச் செய்து விட்டேன். சிறுகதை, நாவல் துறையில் நிறையவே செய்திருக்கிறேன். நாடகத் துக்கு முன்னோடிகளாகப் பல நாடகங்கள் மொழி பெயர்த்து விட்டேன். கவிதைக்கும் ஏராளமாய்ச் செய்தாயிற்று, விமரிசனத் துறையில் வழிகாட்டியாக இருக்கிறேன்...'

க. நா. சு. இவ்வாறு சுதந்திரமாய்ப் பேச நான் விடுவதில்லை; அவருக்குக் கோபம் உண்டாகும்படி ஏதாவது கூறுவேன்; அவர் சினமாகப்—பேசுவதைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருப்பேன். இப்போது அவர் இதய நோயாளி என்பதை மறந்து போனேன். என் விஷம் புத்திதான் பேசியது: 'நீங்கள் செய்ய வேண்டிய காரியம் ஒன்று பாக்கி இருக்கு, சார்' என்றேன்.

'என்னய்யா சொல்கிறீர்?' என்றார் க. நா. சு.

'நம்ம மௌனிக்கு ஒரு மாடம் கட்டி, ஆறுகால பூசைக்கு...' நான் வாக்கியத்தை முடிக்கவில்லை. ஒரு தப்பான நேரத்தில் தகாத முறையில் ஜோக் அடிக் கிறோமே என்று எனக்கே 'சொரேர்' என்றது. ஆனால் வெளிவந்த சொற்களை விழுங்கவா முடியும்?

கிடந்தவாறே துள்ளி எழுந்தார் க. நா. சு.: மௌனிக்குப் மாடம் கட்டக் கூடாதோ? சிலைகூட....'

அவருடைய மகள் உள்ளேயிருந்து ஓடி வந்தாள்: என்னைப் பார்த்து, 'சார், இந்த நேரத்தில் ஜோக் அடிக் கிறீர்களே?...இந்தத் தடவை அட்டாக் சீரியஸ் சார்!' என்று தவித்தாள்.

நானோ மறுபடியும் அவர் தோள்களைப் பற்றி படுக்க வைத்தபடி, 'நான் உங்களுக்கு கோபம் வரவேண் டும் என்று ஜோக் அடித்தால், நீங்களும் ஏமாந்து விட்டீர்களே! பாப்பா சொல்வதைக் கேளுங்கள்! என்று படபடத்தேன்.

www.padippakam.com



இப்படி நான் வம்புக்கு இழுக்கிறவன் என்று க.நா சு.வுக்கே தெரியும; எளிதில் அடங்கி விட்டார், மேலும் அரைமணிக்கு மேல் அவரோடு பேசிய பிறகு நானும் பிரகாஷும் விடைபெற்றோம்,

நல்லவேளை, இந்த நிகழ்ச்சியின்போது ஸ்ரீமதி க. நா. சு. அங்கே இல்லை. அதற்குப் பிறகு சுமார் 25 ஆண்டுகள் வாழ்ந்து க. நா. சு. தமிழ் இலக்கிய உலகில் ஒரு கலகம் செய்தாரே, அதுவும் என் அதிர்ஷ்டமே!

நானும் மௌனியின் ரசிகர்களில் ஒருவன் என்று க. நா. சு.வுக்குத் தெரியும். ஆனால், அவருக்கு மௌனி ஒரு பூசைப் பொருள் ஆகி விட்டார்; இதனால் நான் அவரை அவ்வப்போது பரிகாசம் செய்வது வழக்கம். க. நா. சு.வும் இம்மாதிரி விளையாடுபவரே.

* * *

க. நா. சு.வை நான் முதன்முறையாகச் சந்தித்தது 1943இல் நான் தேனீ மாத இதழ் நடத்திய போதுதான். 'மணிக்கொடி' மறைந்த பிறகு அவர் சந்திரோதயம் இதழை நடத்தினார். கதை, கட்டுரை கேட்டு எனக்கு எழுதினார்கள். என் இரண்டு கதைகள் வெளியான பிறகு 'மேனகை' என்ற மகாபாரதக் கதையை அனுப்பினேன். க. நா. சு. அதைத் திருப்பி அனுப்பியதால் நான் சினமுற்று 'சந்திரோதய'த்துக்கு எழுதுவதில்லை. 'மேனகை' கலைமகளில் வந்தது. அவர் ஆசிரியராக இருந்த 'சூறாவளி'க்கும், 'விஷயதானம்' கேட்டார்; நான் ஒன்றும் எழுதவில்லை.

கு. ப. ரா.வும், அவருக்குப்பின் வல்லிக்கண்ணும் ஆசிரியராக இருந்த கிராம ஊழியனும், கவிஞர் சாலிவாகனன் ஆசிரியராக இருந்த கலாமோகினியும்



படிப்பகம்

www.padippakam.com



ஓய்ந்துபோன பிறகு, 'மணிக்கொடி' எழுத்தாளர்களுக்கு எழுதுகளம் ஏதுமில்லை. தி. ஜானகிராமன், கரிச்சான் குஞ்சுவும் ஒரு பத்திரிகை தொடங்கும்படி ஓயாமல் என்னை வற்புறுத்தி வந்தார்கள். தி. ஜா. அய்யம் பேட்டையில் பள்ளி ஆசிரியராக இருந்தார். கரிச்சான் குஞ்சுவேலை இழந்து உள்ளூரில் இருந்தார். அவரைத் துணை ஆசிரியராய்க் கொண்டு 'தேனீ'யைத் தொடங்கினேன்.

தேனீக்கு இரண்டு இலட்சியங்கள்: 1) மணிக்கொடி அதன்வழி எழுத்தாளர்கள் படைப்புகளை வெளியிடுவது, 2) புதிய எழுத்தாளர்களின் தரமான எழுத்துக்களைத் தேடுவது. இரண்டுமே எவ்வளவு சிரமமான வேலைகள் என்பதை விரைவில் புரிந்து கொண்டேன்!

தேனீக்கு ஒரு தொடர்கதை தேவை. முழு நாவலாக இருந்தால்தான் பிரசுரிப்பது என்று உறுதியாக இருந்தேன். கரிச்சான்குஞ்சு சிதம்பரத்துக்குச் சென்று க. நா. சு.வைச் சந்தித்து 'நாவல்' கேட்டார். முழுசாக எழுதியான ஒரு நாவல் இருப்பதாகவும், திருத்தமாக எழுத வேண்டியதுதான் பாக்கி என்றும் கூறிய க. நா. சு. ஒரு கூடைக் காகிதங்களைக் கரிச்சான்குஞ்சுவிடம் காட்டினார். கரிச்சான்குஞ்சுவுக்கு ஒரே ஆனந்தம்! ஒரு வாரத்தில் 2, 3 மாதங்களுக்கான கைப்பிரதி அனுப்பி வைப்பதாகவும் மற்ற முழுப் பகுதியையும் ஒரே மாதத்தில் அனுப்பி விடுவதாகவும் க. நா. சு. அளித்த உறுதியை ஒப்புக் கொண்டு கரிச்சான்குஞ்சு திரும்பினார். அவர் என்னிடம் விவரம் கூறியபோது எனக்கு சந்தேகமாக இருந்தது. 'நாவலின் ஆரம்பத்தையும், முடிவையும் படித்தீர்களா?' என்று அவரைக் கேட்டேன். 'ஆரம்பம் ஜோராக இருந்தது'—கரிச்சான்குஞ்சு ஜாதிமுத்து என்கிற அந்த நாவலின் தொடக்கத்தை உற்சாகமாய் கூறினார். 'முடிவு படித்தீர்களா'ய்யா? என்றேன். 'பார்த்தேன், படிக்கவில்லை; எறும்பு சாரிசாரியாகப் போவதுபோல்

www.padippakam.com



நுணுக்கி எழுதியிருக்கார். கவலைப்படாதேய்ங்க. கூட்டாயம் முழு நாவலும் வந்து விடும்!' என்று துணை ஆசிரியர் ஆசிரியருக்குத் தைரியம் கூறினார். எனக்கு கவலையாகத்தான் இருந்தது. ஆயினும் க. நா. சு.வின் தொடர்கதையோடு தேனீ வெளிப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்ற பேராசையால் ஒப்புக் கொண்டேன்.

முதல் இரண்டு இதழ்களுக்கான தொடர் கதைப் பகுதியை க. நா. சு. வே நேரில் கொண்டுவந்து கொடுத்தார். அப்பால், அவர் அடிக்கடி-மாதம் இரண்டொரு முறை-தேனீ அலுவலகத்துக்கு வரத் தொடங்கினார். தொடர்கதை முழுவதையும் தராவிட்டாலும், ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் கைப்பிரதி வந்துவிடும். 'தொடர்கதை பூராவையும் எழுதிக் கொடுங்கள், சார்' என்று அவ்வப்போது நினைவூட்டுவேன். 'அதைப்பற்றி கவலைப்படாதீர்'ய்யா, எல்லாம் 'பிராம்ப்டா' நடக்கும்! என்று ஆறுதல் கூறுவார்.

க. நா. சு. கும்பகோணத்துக்கு விஜயம் செய்வதே ஒரு தடபுடலான விஷயம். ரயிலில் மூன்று வகுப்புகள் இருந்த காலம். இரண்டாம் வகுப்பில்தான் வருவார்-திரும்புவார். நேராக எங்கள் ஆபீசுக்கு வரமாட்டார். ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள ஒரு லாட்ஜில் தங்குவார். குளித்து, சாப்பிட்டு முற்பகல் 11 மணி அளவில் எங்களைச் சந்திக்க வருவார். பிறகு இரவு 12 மணிக்கு மேல்தான் லாட்ஜுக்குத் திரும்புவார். மறுநாள் 11 மணிக்குள் கையில் ஒரு காகிதச் சுருளோடு தான் எங்களிடம் வருவார். 'நேற்றைய கோட்டா 20 பக்கம் எழுதிவிட்டுத்தான் படுத்தேன்' என்பார். எங்களால் நம்ப முடியாது. ஒருமுறையாவது அந்த 20 பக்கங்களை அவர் எங்களிடம் படிக்க கொடுத்த தில்லை. 'நாளுக்கு 20 பக்கம்கூட எழுத முடியாதவனை எப்படி எழுத்தாளன் என்பது?' என்று எங்களைச் சாடுவார். சிலசமயம் நானும் கரிச்சான்குஞ்சுவும்—

www.padippakam.com



எப்போதாவது தி. ஜானகிராமனும்—இரவு ஒரு மணிக்கு மேல் க. நா. சு. வோடு பேசியபடி அவருடைய லாட்ஜ் வரை போவோம்; மறுநாள் காலையில் அவர் கையில் கட்டாயம் கடிதச் சுருள்!

தேனீ முதல் இதழிலிருந்தே க. நா. சு. வின் வருகை தொடங்கியது. 'தேனீ'யின் வளர்ச்சிக்காக யோசனைகள் செய்வோம். முதல் இதழுக்காக தொ. மு. சி. ரகுநாதன் ஒரு கதை அனுப்பினார். அது பி. ஸ்ரீ. ஆச்சார்யாவின் அந்தரங்க (பகிரங்கமும்) வாழ்க்கை பற்றிய கதை. பெரும்புலவரான அவர் மனசைப் புண்படுத்த விரும்பாத நான் அதை வெளியிடத் தயங்கினேன். அது முதல் இதழில் சேரவில்லை. க. நா. சு. இரண்டாம் இதழில் அதைப்போடும்படி, வற்புறுத்தினார். 'ஒரு காண்டிரவர்சி உண்டாகட்டுமே!' என்றார். தயக்கத்தோடு அதை வெளியிட்டேன். 20 ஆண்டுகளுக்குப் பிறகு தி. ஜானகிராமன் வீட்டில்—மயிலையில்—மணிக்கொடி சீனிவாசனை சந்தித்தேன். 'தேனீ ஆசிரியர்' என்ற என்னை தி. ஜா. அறிமுகப்படுத்தினார். 'தேனீ உயர்தரமாக இருந்தது. ஆனால், ஞானமணி பதிப்பகம் கதையை நீங்கள் வெளியிட்டிருக்கக் கூடாது' என்றார் அவர்.

க. நா. சு. வின் தொடர்கதை ஆறேழு மாதம் ஒழுங்காய் வந்தது. பிறகு, ஏனோ, க. நா. சு. கும்பகோணம் வருவதில்லை. தொடர்கதை தடைக்கதை ஆயிற்று. தேனீ தமிழ் மாதந்தோறும் வெளிவந்தது. 15—ஆம் தேதி அளவில், 'தொடர்கதையை விரைவில் அனுப்பவும்', என்று கடிதம் எழுதுவோம். பதில் வராது. இரண்டு மூன்று நாளுக்கு ஒரு நினைவூட்டுக் கடிதம் போகும். பதில் வராது. தந்தி கொடுப்போம். 'இன்று அனுப்பிவிட்டேன்', என்று பதில் தந்தி வரும். மறுநாள் கைப்பிரதியை எதிர்பார்த்து ஏமாறுவோம். தமிழ் மாத முடிவு நெருங்கிவிட்டதால், கரிச்சான்குஞ்சு சிதம்பரம் சென்று, க. நா. சு. எழுதிக் கொடுப்பதை வாங்கி

படிப்பகம்

www.padippakam.com



வருவார். ஒரொரு சமயம் கரிச்சான்குஞ்சுவிடம், 'நேற்றே அனுப்பிவிட்டேன், நீர் போஸ்ட்மானை பார்க்கவில்லையா?' என்று கூறி அனுப்பிவிடுவார். 'கைப்பிரதி வந்திருக்குமே!' என்றபடி சிதம்பரத்திலிருந்து கரிச்சான்குஞ்சு வருவார். 'உங்களையும் ஏமாத்திட்டாரா?' என்று தலையில் அடித்துக்கொள்வேன்.

இறுதியில், எனக்கு தொடர்கதை என்றாலே வெறுப்பாகிவிட்டது. கரிச்சான்குஞ்சுவை சிதம்பரத்துக்கு அனுப்புவதில்லை என்று தீர்மானித்தேன். இரண்டொரு கடிதங்கள் எழுதிய பிறகும் க. நா. சு. கைப்பிரதி அனுப்பாவிட்டால், தொடர்கதையை நிறுத்திவிடுவது என்று முடிவெடுத்தேன். அதன்படி, அவருக்கு கடிதம் எழுதினேன்; பதில் வராமற்போகவே, 'நிறுத்துகிறேன்' (Discontinuing) என்று மட்டும் தந்தி கொடுத்தேன். அதற்கும் அவர் மௌனம் சாதிக்கவே, ஜாதிமுத்து என்கிற க. நா. சு. வின் தொடர்கதை தொடராது என்று தேனீயில் அறிக்கை இட்டேன்.

க. நா. சு. இவ்வாறு தொடர்கதை (Blitz) அதிரடி தாக்குதல்—நடத்தியது ஏன் என்று நான் அவரை ஒருபோதும் கேட்டதில்லை. 'சோம்பல்' என்பதன்றி வேறு காரணம் எனக்குத் தோன்றவில்லை. அவர் இப்படி வெளித்தாக்குதல் நடத்திய அதே நேரத்தில், தேனீயில் கூட்டாளிகளாக பிடிவாதமாக வந்து சேர்ந்த இரு சகோதரர்கள் உள்ளிருப்பு நாசவேலை செய்து வந்தார்கள்.

இடையில். எங்கள் ஊருக்கு ஒரு சர்க்கஸ் வந்தது. சிறுவனான என் மகனை அழைத்துப்போனேன். காட்சி முடிந்து எழுந்தபோது, க. நா. சு. பத்து சீட்களுக்கு அப்பாலிருந்து வருவதைக் கண்டேன். சர்க்கஸ் சுவாரசியத்தில் நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ளவில்லை.

'உமக்கு இதுக்கெல்லாம் எப்படி ஒழிகிறது?' என்றார் க. நா. சு. சிரித்தவாறு.

www.padippakam.com



'இவன் ரொம்ப தொந்திரவு செய்தான், அழைத்து வந்தேன்', என்று மகனைக் குற்றம்சாட்டினேன்.

'கண்கொட்டாமல் நீரும் பார்த்துக்கொண்டிருந்தீரே. என்ன வயசானாலும் நம் சிறுபிள்ளைத்தனம் போகவில்லையே'!

'சிறுபிள்ளைத்தனத்தால் மட்டும் நான் சர்க்கஸ் பார்க்க வரவில்லை. இங்கே நம் நண்பர்கள் விளையாடுவதை பார்க்கவும் வந்தேன்...நீங்கள் ஏன் வீட்டுக்கு வரவில்லை?'

'அவசர ஜோலியாக கும்பகோணம் வந்தேன். அப்புறம் வீட்டுக்கு வருகிறேன்; வரட்டுமா?'

அப்புறம் அவர் — பிற்காலத்தில் — எவ்வளவோ ஆசைப்பட்டும்—எங்கள் வீட்டுக்கு வர முடியவில்லை!

சில மாதங்களில், தேனீக்கும் இனிய மங்களம் பாடி முடித்தேன்.

பிறகு, சில ஆண்டுகள் வரை நான் க. நா. சு. வைச் சந்திக்கவில்லை. 1954 அக்டோபரில் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நடந்தது. பழைய மாணவர்கள் என்கிற உரிமையோடு நானும், ஜானகிராமனும் அதில் கலந்துகொண்டோம். ஏதோ ஒரு நேரத்தில், திடீரென்று க. நா. சு. எங்களோடு வந்து சேர்ந்துகொண்டார். மூவரும் அப்போது விஸ்தாரமாக இருந்த கல்லூரியில் சுற்றியபடியும் அமர்ந்தபடியும் அரட்டை அடித்துக்கொண்டிருந்தோம். பேச்சுக்கிடையில் ஜானகிராமன், 'ஜாதிமுத்துவை எழுதி முடித்து விட்டீர்களா?' என்று கேட்டுவைத்தார்.

'நேரமே கிடைக்கவில்லை...' என்றார் க. நா. சு.

'நாளுக்கு இருபது பக்கம் எழுதும் உங்கள் திட்டம் என்ன ஆயிற்று?' என்று நான் கேட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



'அதை நான் ஒருநாளும் விடமாட்டேன்......'

'அந்த திட்டத்தின் கீழ் ஜாதிமுத்துவை எழுதி முடித்திருக்கலாமே!' என்றார் தி. ஜா.

'பார்க்கலாம்......'

'உங்களால் 'ஜாதிமுத்து'வை முடிக்க முடியாது. தேனீயில் கதை வந்தவரை, திருமணத்துக்கு வந்த கிழவிகளில் நாலில் ஒரு பங்குபேரின் வரலாறு மட்டும் சொல்லி முடித்திருக்கிறீர்கள். மற்ற நூற்றுக்கணக்கான கிழவிகள், பிறகு கிழவர்கள் ஒவ்வொருவர் சரித்திரத்தை யும் சொல்ல 5000 பக்கமாவது வேண்டும்......'

'தி. ஜா. வோடு க. நா. சு. வும் சிரித்தார். அவர் முடிக்காத கதை இப்போது ஹாஸ்யக்கதை ஆகி விட்டது

* * *

க. நா. சு.வை மறுபடியும் சந்திப்பதற்கு மேலும் சில வருடங்கள் ஆயின. நான் இலக்கிய உலகத்திலிருந்து முற்றிலும் விலகியிருந்தேன் கதையோ, கட்டுரையோ, எதை எழுதினாலும் விரைவில் நான் அதை அச்சில் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், மேற்கொண்டு எழுத என் பேனா உடன்படாது. எழுதி என்ன செய்வது? என்று நான் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் சுதேசமித்திரன் வாரப் பதிப்பிலிருந்து கதை வேண்டி மேலும்மேலும் கடிதங்கள் வந்தன; ஓராண்டுக்கு மேலாக மித்திரன் (வாரப்பதிப்பு) தி. ஜா., க. நா. சு. போன்ற மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் கருவியாக மாறியிருந்த விஷயம் எனக்குத் தெரியாது. மாதம் இருமுறை மித்திர னுக்கு எழுதலானேன். பல சிறுகதைகளும் சில குறு நாவல் களும் எழுதினேன். அடிக்கடி மித்திரனில் என் கதைகள் வருவதைக் கண்ட 'கல்கி' டைரக்டர் ஒருவர்— (அவர் பெயர் ஆத்மநாதன் என்று ஞாபகம்) பலதடவை என்னை நேரில் கண்டு கதை கேட்டார். கல்கியிலும் பல கதைகள் எழுதினேன்.

படிப்பகம்

www.padippakam.com



என் இலக்கியப்பணி இவ்வாறு இருக்க, என் செல்வத்தையும், செழுமையையும் பறிப்பதற்கு சிலமனிதர்களும், பல மனிதர்கள் அல்லாதவர்களும் சூழ்ச்சி செய்து வெற்றியும் அடைந்தார்கள், வியாபாரம் என்கிற பெரிய தலைவலியைத் தீர்த்துக் கட்டி விட்டேன், ஒரு நெருக்கடியில் சிக்கியிருந்த நான் சென்னை சென்று எழுத்தாளனாக பிழைப்பு தேட எண்ணினேன். சென்னையில் சௌகரியமாய்த் தங்கி எழுத்துப் பணியாற்ற நீலமணி—ஜானகி தம்பதிகள் எனக்குப் பெரிதும் உதவினார்கள். நீலமணி தினமணியில் பணி புரிந்தவர்.

சென்னைதான் தமிழ் எழுத்தாளர்களின் தலைநகரம். அங்குதானே பலவிதப் பத்திரிகைகள் உள்ளன? பலவகை எழுத்தாளர்களும் உள்ளனர். பாங்கு, ரேடியோ நிலையம், ஏ. ஜி. ஆபீஸ் போன்ற நிறுவனங்களில் பாதுகாப்பாக இருந்து கொண்டு எழுதுகிறவர்கள் முதல், கொடிய கோடை வெயிலில், காலில் செருப்பு இல்லாமல் மயிலாப்பூரிலிருந்து மாம்பலம் வரை கால்நடையாக வந்து இரண்டொரு ரூபாய் கைமாற்று கேட்கும் எழுத்தாளர்கள் வரை எத்தனை வகை! பதிப்பகங்களும் அச்சகங்களும் எத்தனை!

சுதேசமித்திரன் என் தாய் வீடு போல் ஆகிவிட்டது. நான் எழுதுவதை உடனுக்குடன் வெளியிடுவதற்கு மட்டும் அல்ல; பல நண்பர்களும் கிடைத்தனர். மித்திரன் ஆபீசில் க. நா. சு., அசோகமித்திரன், ஆர். வி., லா. ச. ரா. முதலிய நண்பர்களை அடிக்கடி சந்திப்பேன்.

க. நா. சு. வுடன் பேசியபடி சிலதடவை அவருடைய வீட்டுக்குப் போனேன்; பிறகு, எனக்கு அவகாசம் கிடைக்கும்போதெல்லாம் போகத் தொடங்கினேன் சென்னையில் நான் சந்தித்த எழுத்தாளர்களில் பலர்

www.padippakam.com



குறிப்பாக, மணிக்கொடி எழுத்தாளர்கள்—மற்றவர்களின் எழுத்துக்களைப் படிப்பதில்லை என்று சபதம் செய்தவர்கள்; தம் எழுத்துக்கு அப்பால் உலகத்தில் ஏதுமில்லை என்று எண்ணியவர்கள் போலும். க. நா. சு. இந்த அவலத்துக்கு ஆளாகாத விதிவிலக்கு. வீட்டில் இருக்கும்போது எந்நேரமும் படித்துக்கொண்டிருப்பார். அவருடைய விஸ்தீரமான படிப்பு என்னை அவர்பால் ஈர்த்தது. குழம்பாமல் பேசுவார், எழுதுவார். ஆனால், இப்போது அவருடைய இலக்கிய அந்தஸ்து மாறி இருந்தது. இலக்கியப் படைப்பாளியாக அவரை யாரும் கண்டு கொள்ளவில்லை; பட்டியல் போடும் ஓர் இலக்கிய விமர்சகராகவே பேசப்பட்டார்; அடிக்கடி பட்டியலில் பெயர்கள் மாறியதால் அவர்மீது பல எழுத்தாளர்களுக்கு வெறுப்பும் இருந்தது. அதை அவர் பொருட்படுத்துவதில்லை; விவாதங்களைக் கிளப்பி விடுவதே தன் பணியாக அவர் கருதியதாய் தோன்றியது. அவர் விமரிசனத் துறைக்குச் சென்றதால், தமிழ் ஒரு தேர்ந்த படைப்பாளியை இழந்து விட்டதாக நான் நினைத்தேன்.

நான் சென்னைக்கு வந்த சிலமாதங்களில், மித்திரனில் க. நா. சு. என்னைப்பற்றி 'தரக்குறை'வாய் ஏதோ எழுதியிருப்பதாக ஒரு நண்பர் கூறினார். மித்திரனை நான் பார்க்காத காலத்தில் 'தமிழில் சிறுகதைகள்' என்ற தலைப்பில் க. நா. சு. எழுதிய கட்டுரையை மித்திரன் ஆபீசிலேயே படித்தேன். அதில் ஓரிடத்தில் 'எம். வி. வி. யின் மகாபாரதக் கதைகள் இலக்கியத் தரமானவை என்றாலும், பழைய கதைகளின் புது மெருகுதானே?' என்று குறிப்பிட்டிருந்தார்; அடுத்த வாரமே ஏகப்பட்ட கண்டனக் கடிதங்கள் வந்திருந்தன. 'காசு மாலையை அழித்து அட்டிகை செய்தால்—அது புது மெருகு ஆகிவிடுமா?' என்று ஒரு நண்பர் க. நா. சு. வைக் கேலி செய்திருந்தார்... இவையெல்லாம் வெளிவந்த ஓராண்டுக்குப் பிறகு நான் படித்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



எனக்கு க. நா. சு. விடம் வருத்தம் ஏற்படவில்லை. 'சந்திரோதயம்' காலத்தில் மகாபாரதக் கதையான மேனகையைத் திருப்பி அனுப்பியவர் தானே! அவரிடம் நான் மித்திரன் கட்டுரை பற்றி ஏதும் பேசவில்லை, அப்போது.

அவருக்கும் எனக்கும் பல கருத்து வேற்றுமைகள். சென்னை மவுண்ட்ரோட், லஸ், பாண்டி பஜார் நடைபாதைகளில் நடந்துகொண்டோ, அல்லது நின்றபடி கூட 'சண்டை' போடுவோம்.

அவருடைய விமரிசன அணுகுமுறையே எனக்குப் பிடிக்கவில்லை; விநோதமாகவும் தோன்றியது.

'நான் இலக்கியப் பரிச்சயமும் பயிற்சியும் உள்ளவன். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம்—இலக்கியத்துறை எதுவானாலும், நல்லது எது அல்லாதது எது என்று எனக்குத் தெரியும். நான் கூறுவதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று பலமுறை அவர் என்னிடம் கூறியதுண்டு.

'நானும் இலக்கியப் பரிச்சயமும் பயிற்சியும் உள்ளவன்; ஆகவே, நீங்கள் சொல்வதை ஏற்க முடியாது', என்று நான் கட்சியாடுவேன்; 'ஒரு சிறுகதை சிறந்தது என்று நீங்கள் எண்ணினால், அதற்கான காரணங்களை சொல்லவேண்டும். உங்களுக்கு வேண்டியவர்களை அளவுகடந்து புகழ்ந்தாலும், உங்களுக்கு பிடிக்காதவர் களை இகழ்ந்ததும்தான் இதுவரை நீங்கள் புரிந்துள்ள சாதனை!' என்று குற்றம்சாட்டுவேன்.

* * *

'இலக்கிய வட்டம்' என்றொரு மாத இதழ் தொடங்குவதாய் அவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு வியப்பாக இருந்தது. இரண்டு பத்திரிகைகள் நடத்தி சேதப்பட்டவர் அவர். தேனீ மாத ஏடு நடத்தியதால்

படிப்பகம்

www.padippakam.com



எனக்கு உண்டான நஷ்டத்தின் அளவு அவருக்குத் தெரியும். படைப்பாளிகளின் கலை ஆர்வம் அவர்களின் குடும்பத்தாருக்கு எவ்வளவு கொடிய சோதனைக்குக் காரணம் ஆகிறது என்று எனக்கு மட்டும் அல்ல, அவருக்கும் தெரியும். இலக்கிய வட்டத்தால் உடனடியாகப் பாதிக்கப்படப்போகிறவர்கள் ஸ்ரீமதி க. நா சு. வும், மகளும்தான். ஆனால் அவரோ உற்சாகமாய்ப் பேசினார்: 'எம். வி. வி., முதல் இதழிலிருந்தே நீர் எழுத வேண்டும்.'

எழுதுவதைக் காசாக்க வேண்டிய இக்கட்டில் இருந்தவன் நான். என் இலக்கியப் படைப்புகளை உடனடியாக வெளியிட்டு உரிய சன்மானம் கொடுக்க சுதேசமித்திரன் இருந்தது. ஆனால் அந்த வருவாய் கொண்டு ஒரு பெரிய குடும்பத்தைக் காக்க முடியாது. சமையல் குறிப்புகள் முதல் என்சைக்ளோபிடியா வரை— பதிப்பகத்தார் வேண்டுவதை எல்லாம் என் பேனா நாளுக்கு 12 மணி நேரம் உழைத்து உற்பத்தி செய்து வந்தது. இலக்கிய வட்டத்தில் இரண்டு கட்டுரைகளும், ஒரு கவிதையும் எழுதியதாய் ஞாபகம்.

ஒருமுறை அவர் வீட்டுக்குப் போனபோது, 'ஓய், இலக்கிய வட்டம் சர்க்குலேஷன் 7000 தாண்டிவிட்டது. இனி சந்தா வாங்கமாட்டோம் என்று அறிவிக்கப்போகிறேன்', என்றார்.

அந்த சுகமான கற்பனையின் அடிச்சுவட்டினில் நானும் நடந்தேன்: 'க. நா. சு., 5000 பிரதிகள் அச்சானாலே உங்களுக்கு ஏக நஷ்டம் ஆகும். 7000 என்றால் தாக்குபிடிக்க முடியாது; உடனே அறிக்கை வெளியிடுங்கள்' என்றேன்.

சில நாளுக்குப் பிறகு மறுபடியும் அவரைப் பார்க்கப் போனேன். க.நா.சு. நாற்காலிகளுக்கு அப்பால் தரையில்

www.padippakam.com



அமர்ந்து ஒரு சிறு கட்டு 200, 300 இதழ்கள் இருக்கலாம்—இலக்கிய வட்டம் இதழ்களை 'ஸ்டெபிள்' செய்து கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், கடிதக் கட்டு மேல் ஒரு டவல் போட்டு விட்டு, நாற்காலிக்கு வந்தார்.

'பிரஸ்காரனோடு பெரிய தொல்லையாய் போச் சுய்யா'—என்றார்.

'பில் பாக்கியா, சார்?' என்று பரிவோடு விசாரித் தேன்.

'பாக்கியா? ஃபுல்பேமெண்டும் அட்வான்சா வாங்கிக் கொண்டுதான் அச்சடிப்பான். கொஞ்சம் பாக்கி என்றாலும் பேப்பரைத் தொட மாட்டான். 7000 காபியும் பிரிண்ட் ஆகி நாலு நாள் ஆகிறது. ஸ்டெபிள் பண்ணித் தராமல் நடையாக நடக்க வைக்கிறான். 200 காபி கொடு மெட்ராசிலே மட்டும் டிஸ்டிரிப்யூட் செய்கிறேன் என்று வாங்கி வந்தேன்', என்று அவர் சமாளித்ததை நான் மிகவும் ரசித்தேன். உள்ளொன்று இருக்க, புறமொன்று பேசும் இலக்கியவாதியின் அழகான பாசாங்கு! அது ஒரு மகாவித்தை! அந்த வித்தையில் க. நா. சு. மட்டும் அல்ல, நானும் வல்லவனே!

* * *

பிறகு ஒரு நாள் என் மயிலை முகவரிக்கு இலக்கிய வட்டம் இதழ் ஒன்று வந்தது. க. நா. சு.வின் விமர்சனப் பாணி பிடிக்கா விட்டாலும், அவருடைய விமர்சனங் களை—என் பார்வைக்கு வருவதை—நான் தவறாமல் படிப்பேன். அவருடைய நடையும் சொல்லழகும் எனக்கு சுகமானவை. வீடு தேடி வந்த இலக்கிய வட்டத்தைப் புரட்டியபோது, 'நித்ய கன்னி' என்ற தலைப்புக் கண்டு எனக்கு வியப்பு உண்டாயிற்று. இந்த என் நாவலின் நடையழகு, சீரான பாத்திரப் படைப்பு முதலியவை பற்றி ஏராளமாகப் பாராட்டியிருந்தார். என்ன எழுதி யிருந்தார் என்று எனக்கு நினைவில்லை. எனக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஆச்சரியம் என்னவென்றால், சந்திரோதயம் காலத்தில் மேனகையை நிராகரித்தவர், மித்திரனில் ஓராண்டுக்கு முன் என் மகாபாரதக் சிற்பங்களை 'பழைய கதைகளின் புது மெருகுதானே' என்று கேலி செய்தவர் திடீரென்று நித்ய கன்னியின் இலக்கியத் தரத்தை எப்படி உணர முடிந்தது? க. நா. சு. என்னைப் பாராட்டி எழுதிய முதல் கட்டுரை இதுதான்; ஒரு பக்கமோ, ஒன்றரைப் பக்கமோ இருந்தது. முதல் பக்கத்தில் ஓரமாகப் பாத்தி கட்டி என்னைப் பற்றி ஒரு சிறு குறிப்பும் எழுதியிருந்தார். 'இந்த இலக்கிய ஆசிரியர் மணிக்கொடிக்காரரர்' என்று 10, 12 வரிகள் எழுதி, 'இவர் ஒரு சௌராஷ்டிரர்' என்று முடித்திருந்தார். இந்த முடிப்பு எனக்கு ஆத்திர மூட்டியது; அவரைப் பார்த்து சுட்டுத் தள்ளிவிடுவது என்று தீர்மானித்தேன்.

ஆனால், ஒரு வாரம், பத்து நாள் வரை நான் அவரை சந்திக்க முடியவில்லை. அப்புறம் ஒரு நாள் அவர் வீட்டுக்குச் சென்றபோது, 'உம்ம நித்திய கன்னியை பத்தாவது முறையாக இப்போதுதான் படித்து முடித்தேன்' என்று என்னை ஆரவாரமாய் வரவேற்றார்.

அவரைச்சுட விரும்பிய துப்பாக்கி இந்த முகஸ்துதியைக் கேட்டதும் என் பையில் விழுந்து விட்டது.

'எதுக்கு சார் இந்த ஃப்ளாடரி' என்றவாறு உட்கார்ந்தேன்.

'உம்மை முகஸ்துதி செய்வதால் எனக்கு என்னாய்யா லாபம்? நாவல் எனக்கு ரொம்ப பிடித்திருக்கு. எப்போது எழுதினீர்?'

'1944இல் கு. ப. ரா. சாகும்போது நாலைந்து அத்தியாயம் எழுதியிருந்தேன். அவர் படித்து விட்டு ரொம்பவும் உற்சாகப்படுத்தினார். கவிஞர் திருலோகசீதாராம் சிவாஜி வார ஏட்டில் பிரசுரித்தார். முழுசாக ஒரு நூறு ரூபாய், அதுவும் இரண்டு தவணையாய் கொடுத்தார்...'

படிப்பகம்

www.padippakam.com



'ஏன்'ய்யா, சிவாஜி 500 காபிதானே போகும்? அதிலேயா...'

'இல்லை, சிவாஜி சர்க்குலேஷன் இலக்கிய வட்டத்தை விட அதிகமாக இருக்கும்' என்று சிரித்தேன்.

'அது இருக்கட்டும். யயாதி கேரக்டரை இன்னும் கொஞ்சம் விரிவு பண்ணி இருக்கலாமே?'

'விரிவு பண்ணினால் நித்யகன்னி கதை ஒரு கையோ காலோ வீங்கின மனுஷன் மாதிரி அவலட்சணமாகி இருக்கும். நாவலுக்கு எந்த அளவு யயாதி பாத்திரம் தேவையோ அந்த அளவுதான். அது சரி, நித்ய கன்னியும் பழைய கதையின் புதிய மெருகுதானே? இதைப் பாராட்டி பேசுகிறீர்களே!'

'என் மித்திரன் கட்டுரையை வைத்துக் கேட்கிறீரா? நாம் வளர்ந்து கொண்டுதானே இருக்கிறோம்?'

'போன வருஷம் தரமில்லை என்றீர்கள். இந்த வருஷம் தரமானது என்கிறீர்கள். அடுத்த வருஷம் என்ன சொல்வீர்களோ? பெர்மனன்ஸ் இல்லாத உங்கள் விமர்சனத்தை எப்படி ஏற்பது?'

'உம்ம மகாபாரதக் கதைப்புத்தகம் தாரும்; விமர்சனம் செய்கிறேன்'.

'இலக்கியம் படைக்க வராத மணிக்கொடிக்காரர்கள் விமர்சனம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள் என்று சென்னை எழுத்தாளர் வட்டாரத்தில் பேசிக்கொள்வதை கேட்டிருப்பீர்களே!'

'பேசட்டுமே! யார் எது பேசினால் என்ன? எனக்கு அதுபற்றிக் கவலை இல்லை!' என்றார் க. நா. சு. கோபமாய்.

'ஜாதி பற்றி—ஸ்பெஷலா பாக்ஸ் கட்டி எழுதுகிறீர்கள்...'

படிப்பகம்

www.padippakam.com



என்னாய்யா தப்பு அதிலே! ஒரு சௌராஷ்டிரர் இவ்வளவு அழகான தமிழ் எழுதுகிறார் என்று பாராட்டினா, அது தப்பாய்யா?'

'விமரிசனத்தில் ஜாதி பற்றிப் பேசுவது தப்பாகத் தான் படுகிறது'

'சண்டைபோடுவதற்கு என்றே வந்தீரா'ய்யா?'

'உங்களோடு சமாதானமாய் இருப்பதைவிட சண்டையாக இருப்பது மேல் என்று ரொம்ப நாளைக்கு முந்தி நீங்களே சொல்லியிருக்கிறீர்களே!' என்று சிரித்தேன்.

'நான் எப்போ'ய்யா சொன்னேன்?'

'கல்கி விஷயம் நீங்கள்தானே சொன்னீர்கள்?'

'அதுவா!' என்று அவரும் சிரித்தார்.

ஒரு தீபாவளி மலரைத் தயாரிக்கும் பொறுப்பை கல்கி க. நா. சு.வுக்குக் கொடுத்திருந்தார். அதற்காக க. நா. சு.வுக்கு ஒரு தொகை கிடைக்கும். ஒரு நாள் மாலை நேரத்தில் கல்கியும், க. நா. சு.வும் காபி சாப்பிட போகிறார்கள். போகும் வழியில் கல்கி, 'நான் யாரிடமும் விரோதம் பாராட்டுவதில்லை' என்று கூறினாராம்; க. நா. சு.விடம் மலர்த் தயாரிப்புப் பணியை ஒப்படைத்ததைச் சுட்டுவதுபோல் 'விரோதம் இருந்தாலும் காபி வாங்கிக் கொடுத்து சமாதானம் செய்து விடுவீர்களே என்றாராம் க. நா. சு.

* * *

ஓர் எழுத்தாளனின் தனித்தன்மை (Individuality) பற்றி அவருக்கும் எனக்கும் பலத்த கருத்து வேற்றுமை இருந்தது. இதைப்பற்றி எங்களுக்குள் அடிக்கடி வாக்குவாதம் நடக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



'ஒரே மாதிரி நடை, ஒரே உத்தி, ஒரே மாதிரி சொல்லாட்சி வைத்து கதையும் நாவலும் எழுதுகிறவர்களை நீங்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்கிறீர்கள். பெர்ரீமேசன் நாவல்கள் மாதிரி இல்லையா?' என்று ஒரு சமயம் பேச்சு எழுந்தது.

'ஓர் இலக்கிய ஆசிரியனை இணம்கான ஓர் அடையாளம் வேண்டாமா?'

'தியாகராஜ சுவாமிகள் செய்ததுபோல் ஒவ்வொரு கதையின் முடிவிலும், ஒரு கதாபாத்திரமே 'என்னைப் படைத்தவர் க. நா. சு. வாக்கும்' என்று சொல்லி முத்திரை வைத்துவிடலாமே!'

அவர் சிரித்தார்: 'அப்படி செய்தாலும் தப்பு இல்லை! அது ஒரு புதிய உத்தி!'

'என் கேள்விக்கு இது பதில் இல்லை... உங்கள் விமரிசனம் ஒரு நாசவேலைதான் செய்கிறது நித்தியத்துவத்துக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதற்கு நீங்கள் யார்?' (Who are you to issue passport to posterity)...........' இந்தக் கேள்வியை நான் அவரிடம் பலமுறை கேட்டது உண்டு.

இலக்கிய வட்டம் எத்தனை இதழ்கள் வெளிவந்தன என்று எனக்கு நினைவில்லை. ஆனால், மித்திரனிலும், பிறகு இலக்குய வட்டத்திலும் அவர் எழுதிய கட்டுரைகளும், விமரிசனங்களும், பட்டியல்களும் உலகத்தைத் தலைகீழாகப் புரட்டிவிடவில்லை; ஆனால், சென்னையில் எழுத்தாளர் வட்டாரத்தில் ஒரு பரபரப்பு ஏற்படுத்தியது என்னவோ உண்மை. சென்னையில் பல பகுதிகளில் நான் அலைந்துகொண்டு இருந்தவன்; நாலு எழுந்தாளர்கள் சந்திக்க நேருகிற இடத்தில் க. நா. சு. பற்றி ஆத்திரமான பேச்சு நடந்ததை அறிவேன். க. நா. சு., மற்றொரு விமரிசகர் ஆகிய இருவரின் வலதுகை கட்டை விரலையும் சுட்டு விரலையும் நறுவிசாக நறுக்கிவிட வேண்டும் என்று

www.padippakam.com



வன்முறையில் நம்பிக்கையுள்ள சில எழுத்தாளர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பிரபல எழுத்தாளர், 'ரெண்டுபேரையும் தெருவிலேவிட்டு உதைக்கிறேன்' என்று என்னிடம் கூறினார். 'மணிக்கொடிக்காரர்கள் அப்படி என்ன செய்து கிழித்துவிட்டார்கள்? புதுமைப்பித்தன், கு. ப. ரா. போல இரண்டு மூன்றுபேர் நல்ல சிறுகதைகள் எழுதினார்கள் என்பது உண்மை. இவன்கள் வேறே என்ன சாதித்துவிட்டான்கள்?' என்றொரு கட்சியும் இருந்தது. இப்படியே போனால், மணிக்கொடிக்காரன் என்றாலே கல்லால் அடிக்கும் நிலைமை உருவாகுமோ என்று நான் சிலசமயம் அஞ்சுவதுண்டு. க. நா. சு. வின் பட்டியலில் இடம்பெற்ற எழுத்தாளர்களோ, வேதாந்திகள் ஆகிவிட்டனர்; அவர்கள் பட்டியல் பெறாத துரதிர்ஷ்டசாலிகளை நோக்கி, 'கோபம் பாபம், ஆசை விடுமின்' என்று உபதேசம் செய்யலானார்கள். இந்த சுகமான, சூடான சூழலில் சிறிது காலம் சென்றது.

என்றோ ஒருநாள் மவுண்ட் ரோடில், மித்திரன் ஆபீஸான 'வெற்றி இல்லத்'துக்கு (Victory House) அருகில் என்று ஞாபகம், க. நா. சு. வைக் கண்டேன்.

'ஏன்ய்யா, ஆளையே காணோம்?'

'வேலை சார்'

:ஃப்ரீலான்சர்ஸ்லே நீர் ஒருத்தர் தான் ய்யா பிஸீயாக இருக்கிறீர்......'

'வேறு வழி இல்லை. நீங்கள் சிக்கனமாக ஒரு குழந்தையோடு நிறுத்திட்டீங்க. நான் அப்படி இல்லையே சார்!... எனக்கு இலக்கிய வட்டம் வரல்லையே!'

'நிறுத்திட்டேன்... நாங்கள் எல்லாரும் தில்லிக்கு போகிறோம்; வீட்டை காலிசெய்துவிட்டு'.

எ—4

படிப்பகம்

www.padippakam.com



'டில்லிக்கா?' எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது. 'அங்கே என்ன செய்வீர்கள்? பாப்பாவோட படிப்பு...'

'இங்கே செய்வதைத்தான் அங்கேயும் செய்யப்போகி றேன். பாப்பா மேல்படிப்புக்காக அமெரிக்கா போனா லும் போவாள்... வரட்டுமா ய்யா?'

நானே விண்வெளியில், ஒரு கிரகத்திலிருந்து மற்றொரு கிரகத்துக்குப் பறந்துகொண்டிருந்தவன். க. நா. சு. பற்றி அதிகமாய்க் கவலைப்பட எனக்கு நேரமில்லை; என்னிடம் சொல்ல அவருக்குப் மனமில்லை. ஒரே ஒரு கவலை எனக்கு, சென்னையில் பொருள் செறிவுடன் பொழுதுபோக்க இனி க. நா. சு. இருக்க மாட்டார்.

என் சென்னை மாநகர விஜயமும் இரண்டொரு ஆண்டுகளுக்குப் பிறகு முடிவு கண்டது.

* * *

1973-இல், கும்பகோணத்தில், ஐந்து எழுத்தாளர்கள் என்னிடம் ஒரு நீண்ட பேட்டி எடுத்தனர்: தஞ்சை பிரகாஷ், பிரபஞ்சன், சூரியராஜா, இருளாண்டி, செந்தமிழன் ஆகியோர்தான் அந்த ஐவர். அது அந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கண்ணதாசனில் வெளி வந்தது. க. நா. சு. பற்றின கேள்விகளையும் என் பதில் களையும் சுருக்கித்தருகிறேன்.

கேள்வி : இலக்கிய ஆசிரியர் க. நா. சு., விமரிசகர் க. நா. சு., ரசிகர் க. நா. சு. என்று மூவர் இருப்பதாக நீங்கள் எழுதியதாய் ஞாபகம். இந்த மூவரில் நீங்கள் விரும்பிய க. நா. சு. யார்? வேண்டிய க. நா. சு. யார்?

என் பதில் : க. நா. சு. வை இப்படி கூறுபோட்டு எப்போது எழுதினேன் என்று எனக்கு நினைவில்லை. மூவரையும் நான் விரும்புகிறேன்; மூவரும் எனக்கு

www.padippakam.com



வேண்டியவர்களே. அவருடைய இலக்கியத்தை நான் ரசித்திருக்கிறேன். அவருடைய விமரிசனக் கருத்துகளை நான் பெரும்பாலும் ஏற்றதில்லை; அவரோடு கடுமையாக விவாதித்ததுண்டு, எந்நேரமும் படிப்பும் இலக்கிய விசாரமாகவும் இருக்கிற க. நா. சு. வையும் நான் மதிக்கிறேன்.

கேள்வி : விமரிசகர்களால் நீங்கள் இருட்டடிப்பு செய்யப்படுகிறீர்கள் என்று நாங்கள் கருதுகிறோம்...... சமீபத்தில் பம்பாயில் ஒரு இலக்கியக் கூட்டத்தில், 'பிராமணர் அல்லாதார் புதுமைப்பித்தனைக் கொண்டாடுவதுபோல் பிராமணர்கள் மௌனியைக் கொண்டாட வேண்டும்' என்று க. நா. சு. பேசினார் என்று பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு இலக்கிய மதிப்பீடு செய்யத் தகுதி வாய்ந்தவர்கள்?

என் பதில் : வேண்டும் என்றே என்னை இருட்டடிப்பு செய்கிறார்கள் என்ற எண்ணம் எனக்கு இதுவரை உண்டானதில்லை. ஜாதிக்காகவும், கட்சிக்காகவும், இனத்துக்காகவும், நட்புக்காகவும் இலக்கிய ஆசிரியர்களைப் பாராட்டி விமரிசனம் செய்துவிடும் போக்கு இங்கே சகஜமாக இருக்கிறது, என்ன செய்வது? அது சரி, யாரோ சில விமரிசகர்களுக்காகவா நாம் எழுதுகிறோம்?... க. நா. சு. அப்படி பேசியிருக்கமாட்டார் என்றே நான் நினைக்கிறேன். cosmopolitan views—உள்ளவராகவே நான் அவரைக் கண்டிருக்கிறேன், என்றாலும் (பிரகாஷை நோக்கி) 'ஒரு Brahmin-ஐ நாவலிஸ்டு என்றால் தமிழ் நாடு ஏற்காது என்பதால் ஒரு 'நான்பிராமினை' நாவலிஸ்டு, நாவலிஸ்டு என்று சொல்லிச் சொல்லியே தமிழ்நாட்டை நம்பவைத்துவிட்டேனே! அது பெரிய சாதனைதானே!' என்று க. நா. சு. நம்மிடம் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லையா? இலக்கிய வட்டத்தில் என்னை இலக்கிய

படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியன் என்றதோடு, 'இவர் ஒரு சௌராஷ்டிரர்' என்று மறக்காமல் குறிப்பிடவில்லையா?... க. நா. சு. இப்படி சொல்லிவிட்டார், அப்படி சொல்லிவிட்டார் என்று நீங்கள் கோபமாய்ப் பேசுகிறீர்கள்! எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. நீங்கள் க. நா. சு. வை இவ்வளவு சீரியஸாக எடுத்துக்கொள்ளக்கூடாது— வேண்டியதில்லை. அவருடைய கருத்து மாறிக்கொண் டிருக்கும்... க. நா. சு. வைப் பற்றியோ, மற்ற விமரிசகர் களைப் பற்றியோ நான் ஒருநாளும் கவலைப்பட்ட தில்லை. ஜாதி, மத, இன, கட்சி, நட்பு அடிப்படையில் இலக்கிய மதிப்பீடு செய்கிறவர்களால் என்னையோ, உங்களையோ, வேறு இலக்கியப் படைப்பாளிகளையோ இருட்டடிப்பு செய்துவிட முடியாது.

கேள்வி : க. நா. சு. — மணிகொடி கோஷ்டியைச் சேர்ந்தவர் அல்ல என்கிறார்களே!

என் பதில் : மணிக்கொடியில் சொந்தப்படைப்புகள் எழுதியவர்களை நீங்கள் மணிக்கொடி கோஷ்டி என்கிறீர் கள், இல்லையா? மணிக்கொடி ஆசிரியர் பி. எஸ். ராமையா எழுதிய 'மணிக்கொடி காலம்' என்ற நூலில் கூறியுள்ளபடி, என் முதல் சிறுகதை வெளியான அதே மணிக்கொடியில் க. நா. சு. வின் 'ரங்கம்' என்ற கதை வந்துள்ளது; 'பேசாமடந்தை' என்ற மற்றொரு கதை பிறகு வந்தது; இந்த இரண்டும் க. நா. சு. வின் படைப்பு கள் என்று ராமையா குறிப்பிட்டுள்ளார். 'ரங்கம்' என்ற கதை ஜேம்ஸ் ஜாய்சின் கதை ஒன்றின் தழுவல். 'பேசாமடந்தை' எந்தக் கதையின் தழுவல் என்று எனக்கு நினைவில்லை... மணிக்கொடியில் எழுதாவிட்டால்தான் என்ன? அதனால் அவர் இலக்கிய ஆசிரியர் அல்ல என்றாகிவிடுமா......?

* * *

இந்தப் பேட்டி 'கண்ணதாசனில்' வெளியாகி ஐந்தாறு மாதங்கள் ஆகியிருக்கும். ஒருநாள் முற்பகலில்

படிப்பகம்

www.padippakam.com



தஞ்சை பிரகாஷுடன் க. நா. சு. எங்கள் வீட்டுக்கு வந்தார். எனக்கு ஒரே மகிழ்ச்சி, ஆச்சரியம்.

'வாருங்கள் சார். தில்லியிலிருந்து எப்போது வந்தீர்கள்?'

'ஒரு வேலையாக தஞ்சாவூர் வந்தேன். இரண்டு நாளாகிறது. எழுதுகிறீரா'ய்யா?'

'நாளுக்கு 20 பக்கம் முடியாவிட்டாலும் கொஞ்சம் எழுதுகிறேன்... தில்லி எப்படி இருக்கு சார்?'

'இப்போது ஆங்கிலத்தில்தான் நிறைய எழுதுகிறேன்', என்று அவர் கூறியதை நான் அப்போது நம்பவில்லை. ஆனால் அது உண்மை என்று பிறகு தெரிந்தது. மிர்ரர் முதலிய இங்கிலீஷ் ஏடுகளில் அவருடைய சில கட்டுரைகளைப் படித்தேன். அவருடைய இங்கிலீஷ் நடை ஆற்றொழுக்குபோல் இருந்தது. 'மிர்ரர்' ஆசிரியர் குழுவிலும் அவர் கொஞ்ச காலம் இருந்ததாய் ஞாபகம்.

தஞ்சாவூர் கலைகளைப் பற்றி ஆய்வு செய்து நூல் எழுத சாகித்திய அகாதமி அவரை அனுப்பியிருந்தது. அவர் சர்வே செய்ய வந்திருந்தார். அவருடைய இந்தப் பணி நிறைவேறவில்லை.

'ஏன்ய்யா, என்னை மணிக்கொடிக்காரன் இல்லை என்று ஒதுக்கி விட்டீரே!' என்று பேச்சுக்கு இடையில் சிரித்தபடி கேட்டார் அவர்.

'இரண்டு தழுவல் கதைகளை எழுதினால் போதுமா?'

'ஏன் போதாது?'

'உங்களால் மணிக்கொடி கோஷ்டியின் புகழ் அதிகமாகிறது. நீங்கள் மணிக்கொடிகாரரே!' என்றேன் சிரித்தவாறு.

மணிக்கொடியை அழகுபடுத்தியவர்களில் என் ஹிந்தி ஆசிரியர் பி. எம். கிருஷ்ணசாமி ஒருவர். ஹிந்தியிலிருந்து

படிப்பகம்

www.padippakam.com



நரமான சிறுகதைகளைத் தமிழாக்கித் தந்தார். அவர் தன்னை மணிக்கொடிக்காரரர் என்பார், என்ன தவறு?

'நீங்கள் என்ன சார் ஜாதி வாரியாக எழுத்தாளர் களைக் கொண்டாட வேணும் என்று பம்பாயில் பேசி யிருக்கிறீர்களே, நிசம்தானா சார்!'

'நம்பவே முடியல்லே. எங்களுக்கு ரொம்ப வருத்தமா யிருக்கு!' என்றார் பிரகாஷ்.

'ஏதோ லைட் மூடிலே பேசின பேச்சு. அதை யாரோ பெரிசு பண்ணிட்டா', என்று வழக்கம்போல் சிரித்தார் அவர்.

மூவரும் வெளியில் எங்கெங்கோ சுற்றிவிட்டு ஹோட்டலில் சாப்பிட்டோம். வெளியில் வந்ததும் க. நா. சு., 'இன்று இரவு மெட்ராஸ் போகிறேன். நாளைக்கு தில்லி புறப்படுகிறேன்', என்று விடைபெற் றார். சுமார் மூன்று மணி நேரம் சேர்ந்திருந்தோம்.

* * *

'சிரியாத முகமும், சீவாத தலையுமாக, கோபக்கார ராய் அட்டைப்படத்தில் காட்சி அளிப்பவர் க. நா. சுப்பிரமணியம்', என்று அட்டைப்படத்தில் புகைப்படம் அச்சிட்டு 'கலாமோகினி' வாசகர்களுக்கு அதன் ஆசிரியர் கவிஞர் சாலிவாகனன் (வி. ரா. ராஜகோபாலன்) க. நா. சு.வை அறிமுகப்படுத்தினார், சுமார் அரை நூற்றாண் டுக்கு முன். இந்தக் கோலத்திலேயே நான் பழகிய காலம் எல்லாம் க. நா. சு. காட்சி அளித்தார். அவர் தலையில் சீப்பு போட்டதை நான் கண்டதில்லை. முழுக்கை சட்டை அணிந்திருப்பார்; ஆனால் முழங்கை வரை சுருட்டி விட்டிருப்பார்; பெரும்பாலும் பனியன் இராது. அவருக்கு புதிய தமிழ் இலக்கியம் போதுமான அளவு வரவில்லையே என்று கோபம், தமிழ் வாசகர்கள் உண்மையான இலக்கி யத்தைக் கண்டுகொண்டு சுவைக்கக் கற்கவில்லையே

www.padippakam.com



என்கிற கோபம். இன்றைய பத்திரிகைகள் வாசகர்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்கின்றனவே என்று கோபம். எல்லாமே தமிழ் வளர்ச்சியைச் சார்ந்த கோபம். இந்தக் கோபத்தால்தான் அவர் தம் தோற்றம் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று எண்ணியிருந்தேன். ஆனால் எவ்வளவு கோபக்காரர் ஆனாலும் அவரும் தம் தோற்றம் பற்றிக் கவலைப்படுபவரே என்பதைக் கண்டேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஜெயகாந்தனுக்கு ராஜ ராஜன் விருது அளிக்கப்பட்டபோது, க. நா. சு.வைச் சந்தித்தேன். முற்றிலும் புதிய தோற்றத்தில் க. நா. சு.! தலைமுடி வளர்ந்து பிடரிவரை புரண்டது, அக்காலத்து தியாகராஜ பாகவதர் மாதிரி. அவர் தலை திருப்பும் போது, நரைமுடி கற்றையாகத் திரண்டு கழுத்தில் உருண்டது. கைகளை மறைக்கும் தொள தொள ஜிப்பா. பழைய சோடாகோலி மூக்குக் கண்ணாடி; கைத்தடி தேவையாகி விட்டது. காதுகள் என் காதுகளை விடக் கொஞ்சம் மோசம். எந்நேரமும் இடது தோளில் தொங்கும் ஷோல்டர் பேக்—ஒரு கிழ ஹிப்பியின் சித்திர மாக அவரை ஆக்கியது. தஞ்சை இலக்கிய ரசிகர்கள் மட்டும் அல்ல, வெளியூரிலிருந்தும் சில ரசிகர்கள் அவரை பார்க்க வந்திருந்தனர்.

க. நா. சு. தில்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பி அதே மயிலை, டீ. எஸ். வி. கோயில் தெரு வீட்டில் குடி யேறியதும், குங்குமம், துக்ளக் முதலிய பெரிய பத்திரிகை களிலும் சிறிய பத்திரிகைகளிலும் சரமாரியாகப் போலி இலக்கியவாதிகளையும், பேராசிரியர்களையும் தாக்கி எழுதிக் குவித்து கலவரம் செய்து வந்ததை நான் எப்படி கவனியாமல் இருக்க முடியும்? ஆனால், விமரிசனங்களில் முன்னைய கூர்மை இல்லை. 'மூன்றில்' என்றொரு பத்திரிகைக்கும் ஆசிரிய ரானார். தில்லியிலிருந்து திரும்பிய அவரைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்தான் முதன் முதலில் சந்தித்தேன்.

www.padippakam.com



என்னோடு பழகுவதிலும் ஒரு மாறுதல்; அவர் என்னுடனேயே ஒட்டிக் கொண்டிருந்தார். கைத்தடி இருந்தும் அவர் தடுமாறியதால் நான் அவருக்குத் துணையாக இருந்தேன்.

நண்பர்களும் ரசிகர்களும் எங்களைச் சூழ்ந்திருந்த ஒரே நேரத்தில் அவரைக் கேட்டேன்: 'ஏன் சார், உங்கள் விமரிசனங்களில் இப்போதெல்லாம் உறுதியாக எதையும் சொல்லுவதில்லையே! 'சொல்லலாம் என்று தோன்றுகிறது' 'கூறினாலும் கூறலாம்' என்பது போல எழுதுகிறீர்களே?'

'இதுக்கே கையை, காலை வெட்டுவேன்னு பயமுறுத்துகிறான். நான் உறுதியாக ஏதாவது எழுதினால் நிசமாகவே வெட்டிவிடுவான்!' என்றார் அவர்.

அவர்தான் அன்றைய நட்சத்திரப் பேச்சாளர். நான் பார்வையாளனாக அழைக்கப்பட்டவன். யாரோ வராததால், நான் கட்டாயம் பேசவேண்டும் என்று துணைவேந்தர் வற்புறுத்தியதால் உடன்பட வேண்டியதாயிற்று.

க. நா. சு. வழக்கமான கருப்பொருள், கருத்துடன் ஒரு மணி நேரம் பேசினார். சிலபேர் பேசிய பிறகு என் முறை வந்தது. தயாரிப்பு இல்லாமலே நான் பேசுகிறவன். முன் வரிசையில் அமர்ந்திருந்த க. நா. சு., பாட்டு கேட்பவர்போல் முடிபுரளத்தலையாட்டி என் பேச்சை ரசிப்பதைப் பார்த்ததும் எனக்கு உற்சாகமாகிவிட்டது. ஜெயகாந்தனின் சில கதைகளில் உள்ள நிறை குறைகளைச் சுட்டிப் பேசியிருந்தேன்.

மாலையில் விருது வழங்கும் விழாவில் நாங்கள் இருவரும் சேர்ந்து அமர்ந்திருந்தோம். எங்களுக்குப் பக்கத்தில் ஒலிபெருக்கி இருந்தது; ஆனால், சரியாக இயங்கவில்லை. விருது பெற்றவருக்கும் விருது வழங்கிய

www.padippakam.com



அமைச்சர் பெருமக்களுக்கும் இடையில் சுவையான சொற்போர் நடந்ததாய் வெளியில்தான் கேள்விப்பட்டோம். ஆனால், ஒலிபெருக்கி திடீரென்று 'அஹம் பிரம்மாஸ்மி' என்று ஓங்கி ஒலிக்கவே எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு நொடி ஒன்றும் புரியவில்லை; பிறகு இருவருக்கும் சிரிப்புவந்தது.

* * *

எங்களுடைய இறுதிச் சந்திப்பும் சுவாரசியமானதாகவே ஆயிற்று. க. நா. சு. பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் 'எமரிடஸ் புரப்பச'ராக நியமனமான செய்தி எனக்குத் தெரியும். புகழ்பெற்ற கலைத்திறன் ஆய்வாளரான 'தேனுகா' (எம். சீனிவாசன், பாரத வங்கி, கும்பகோணம்) அவ்வப்போது பாண்டிக்குச் சென்று க. நா. சு. வுடன் பேசிவிட்டு வருவார். ஒவ்வொரு முறை தேனுகாவைப் பார்க்கும்போதும் 'எம். வி. வி. யை அழைத்துவாருமய்யா!' என்று க. நா. சு. சொல்லியபடி இருந்தார்.

தேனுகா என்னிடம் அதைக் கூறுவார். அடுத்த முறை இருவரும் சேர்ந்து போவதென்று பேசிக்கொள்வோம். அவர் புறப்படும்போது எனக்கு உடல்நலம் இராது. நான் தயாராக இருந்தால் அவருக்கு சௌகரியம் இராது. இரண்டு கண்களிலும் எனக்கு 'காடராக்ட்! ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும்: ஆக, நான் தனியாகப் போக முடியாது. எப்படியோ மாதக்கணக்கில் தாமதம் ஆகிவிட்டது. ஒருமுறை தேனுகா போனபோது, க. நா. சு., 'என் ஒப்பந்தம் முடியப்போகிறது. எப்போது எம். வி. வி' யை. அழைத்துவரப் போகிறீர்?' என்று அலுத்துக் கொண்டதை தேனுகா என்னிடம் தெரிவித்தார்.

இருவரும் விரைவில் பாண்டிச்சேரி போனோம். க. நா. சு. அப்போதுதான் ஹோட்டலில் சாப்பிட்டு

www.padippakam.com



விட்டுத் தடுமாறியபடி திரும்பிக் கொண்டிருந்தார். நான் அவரை எதிர்கொண்டு, 'எம். வி. வி. வந்திருக்கிறேன்; சார்,' என்றேன்.

'வாருமய்யா, எத்தனை மாதமாக சொல்லி அனுப்பு கிறேன்; வரவே இல்லை... முதலில் இரண்டுபேரும் சாப்பிட்டு வந்துவிடுங்கள். நேரமானால் சாப்பாடு சுகப்படாது' என்று ஹோட்டலுக்கு வழி கூறினார்.

'சார், நாங்கள் அப்புறம் சாப்பாடு இல்லை என்றால் டிபன் சாப்பிடுகிறோம்' என்று அவருடன் அறைக்குச் சென்றோம்.

'என்ன சார், அவசரமாய் கூப்பிட்டீர்களாமே?'

'அவசரம் என்றால் ஆறுமாசம் கழித்து வருகிறீரே. இந்த யுனிவர்சிடியோடு என் கான்ராக்ட் இன்று முடிகிறது. என் ஸ்தானத்தில் நீர் இங்கே வரவேணும் என்று எனக்கு ஆசை. உம்மை வி. சி. யிடம் நேரில் அறிமுகப்படுத்தி உம்மை புரஃபசராக அப்பாயின்ட் பண்ணச் சொல்லப்போகிறேன்', என்றார் க. நா. சு.; வி. சி. ஆபீசில் இருக்கிறாரா என்று பார்த்துவரச் சொன்னார், யாரோ ஒருவரிடம்.

எனக்குத் திகைப்பாக இருந்தது இந்த மனிதருக்கு என்னிடம் இவ்வளவு பிரியமா! நான் பேசவில்லை.

போனவர் சில நிமிடங்களில் திரும்பினார். 'சார், வி. சி. நேற்று குடும்பத்தோடு ஃபிரான்ஸ் போயிருக் கிறார். தீபாவளிக்கு முன்னால்தான் திரும்புவார்'.

எனக்கு ஏமாற்றமே இல்லை. பழுதான கண்களோடு ஒரு பெரிய பொறுப்பை ஏற்க எனக்குத் தயக்கமே. க. நா. சு.வுக்குத்தான் ஏமாற்றம். உடனே மாற்றுத் திட்டம் இட்டார்: 'உம்மாலேதான் இந்த தடங்கல். நான் ஒரு வேலை செய்கிறேன். வி. சி. திரும்பும்போது நான் வி. சி.யை மெட்ராஸ் ஏர்போர்ட்டில் பார்ப்பேன்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போது உம்மைப் பற்றி பேசுகிறேன். அப்புறம் தேவை யானால் நான் நேரில் வருகிறேன்!

இந்த நேரத்தில் சில பேராசிரியர்கள் அவருக்கு மாலை போட்டு வணங்கி விடைபெற்றார்கள். தேனுகா வும் நானும் வெளியே போய் சாப்பிட்டு வந்தோம்- நாங்கள் திரும்பியதும் இந்திரா பார்த்தசாரதியும் வந்து சேர்ந்தார். அவரிடம் க. நா. சு. நான் காலதாமதம் செய்ததால் வி. சி.யைப் பார்க்க முடியாமல் போனது பற்றிக் குறை கூறினார்.

பின்னர், நால்வரும் ஏதேதோ பேசினோம். கல்வாணி இலக்கியம் பற்றி க. நா. சு., இ. பா.விடம் கடுமையாகக் கண்டித்தார். நான் க. நா. சு.வுடன் சேர்ந்து கொண் டேன். பேச்சுக்கு இடையில் க. நா. சு., 'சில எழுத்தாளர் களைப் பற்றி நான் ரொம்பவும் அதிகமாய் பேசி விட்டேன். மௌனி ஒரே கதையைத்தான் திரும்பத் திரும்ப எழுதினார்......'

'அவருடைய மிஸ்டேக். குடும்பத்தேர் வேறு வகை... அது சரி, இதை எங்களோடு பேசும்போது சொல்லுகிறீர் கள், எழுத மாட்டேன் என்கிறீர்களே,......'

'எழுதாமல் எங்கே போகிறேன்?......அது சரி, எம். வி. வி., நான் உம்மோடு நாலு நாள் தங்க வேண்டும்......'

'நாலு நாள் என்ன, எத்தனை நாள் வேண்டுமானா லும் தங்கலாம். எங்கள் வீட்டில் நாங்கள் இரண்டு பேர் தான். ஊர் சுற்றுவோம், ரசிகர்கள் கூட்டம் போட்டால் பேசுவோம், நண்பர்களோடு அரட்டை அடிப்போம். வீட்டுக்கு வந்தால் ஒரு சந்தடி இராது. நம் இஷ்டத்துக்கு ரெஸ்ட் எடுக்கலாம்.'

'தீபாவளிக்கு தில்லி போகிறேன். திரும்பியதும் எழுதுகிறேன்'.

www.padippakam.com



மாலையில் க. நா. சு.விடமும், இ. பா.விடமும் விடை பெற்றுத் திரும்பினோம்.

* * *

க. நா. சு. தில்லிக்குப் புறப்படுமுன் தஞ்சையில் பிரகாஷ் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தார், க. நா. சு. பேசுவதற்கு. மழை பெய்து கொண்டிருந்தது. அவர் இந்தப் பெருமழையில் வரமாட்டார் என்று எண்ணி நானும் கரிச்சான்குஞ்சுவும் தஞ்சைக்குப் போகவில்லை. ஆனால், அவரோ மழையை லட்சியம் செய்யாமல் கைத்தடியே துணையாகத் தஞ்சைக்கு வந்து விட்டார்.

வந்ததும் அவர் பிரகாஷிடம் கேட்ட கேள்வி: 'எம். வி, வி.யும் கரிச்சான்குஞ்சுவும் வரவில்லையா?' இல்லை என்று தெரிந்ததும், அவரே, 'ஏன் வரவில்லை என்று கேட்கிற வயசில்லை. இந்த மழையிலே வெளியே கிளம்ப எப்படி மனசு வரும்?' என்றாராம்!

அப்பால், மகளோடு தீபாவளி கொண்டாட அவர் தில்லிக்குச் சென்றார். திரும்பியதும் செயல்படுத்த ஒரு பெரிய திட்டம் வைத்திருந்தார். ஆனால், மரணம் அவருடைய ரசிகன் போலும்; தில்லியில் பொறுமையாய் காத்திருந்தது; மென்மையாகப் பறித்துச் சென்றது. கனிந்த கனி; குடும்பத்தினருக்கு மத்தியில் உயிர்பிரிந்ததே பெரிய பாக்கியம்தானே!

செய்தி கேட்டதும் மிகவும் கலங்கிப் போனேன். என்னோடு சில நாள் தங்க வேண்டும் என்னும் அவருடைய ஆசையும், அவரோடு சிலநாள் இருக்க வேண்டும் என்னும் என் ஆசையும்...ஒரு நாளும் நிறை வேற முடியாத ஆசை ஆயிற்று.

மணிக்கொடி 'ஜயண்டு'களில் ஒருவரின் வெற்றி உலா இவ்வாறு நிறைவு பெற்றது. புதிய தமிழ் இலக்கிய

படிப்பகம்

www.padippakam.com



துறைகள் அனைத்திலும் அவருடைய கைவண்ணத்தைக் காண்கிறோம். எனினும் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளியான அவர் ஒரு தேர்ந்த விமரிசகராய் அதிகம் பேசப்படுகிறார்.

அவருடைய விமரிசன அணுகுமுறையை நான் ஏற்காவிடினும், என் பார்வைக்குக் கிடைக்கும் அவருடைய விமரிசனக் கட்டுரைகளை நான் படிக்கத் தவறுவதில்லை. மித்திரனில் ந. பிச்சமூர்த்தியின் 'வானம்பாடி' என்னும் சிறுகதைக்கு அவர் எழுதிய விமரிசனம் அவர் எழுதிய விமரிசனங்களில் தலைசிறந்தது என்பேன்.

'இந்த சிறுகதைக்கு விமரிசனமாக, இக்கதையை மீண்டும் மீண்டும் படிக்குமாறு வாசகர்களிடம் சொல்லத்தான் என்னால் முடிகிறது' என்று 2, 3 வரிகள் எழுதிய க. நா. சு. 'வானம்பாடி', சிறுகதை முழுவதும் அப்படியே கொடுத்திருந்தார்!

விமரிசனத்தின் பண்பும் பயனும் அதுவே. உயர்ந்த இலக்கியத்தைக் கண்டு கொண்டு, அதைச் சுவைக்க வாசகர்களைத் தூண்டுவதானே விமரிசனத்தின் லட்சியம்?

படிப்பகம்

www.padippakam.com

# மௌனியும் எம். வி. வி.யும்

விளக்கேற்றி வெகுநேரமாயிற்று. மணி ஏழரை எட்டுக்குள் இருக்கும். வீட்டில் மின்சாரம் வராத காலம்; அகல் விளக்குகள், பவர்லைட், அரிக்கேன் லைட், சிம்னி விளக்குகளை ஏற்றி வெளிச்சத்தை வரவேற்போம்; ஆயினும் வெளிச்சம் வீட்டின் சில பகுதிகளுக்குப் போதாது.

வீட்டின் நடுப்பகுதியில் தரையில் உட்கார்ந்தபடி ஏதோ படித்துக் கொண்டு இருந்தேன். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நான் இரண்டாம் ஆண்டு மாணவன். எங்கள் காலத்தில், எஸ். எஸ். எல். சி.யில் தேறியதும் பட்டப்படிப்புக்கு நாலு ஆண்டுகள் ஆகும். இரண்டு ஆண்டுகள் இடைநிலை (Intermediate) வகுப்பு, பட்டப்படிப்பு இரண்டு ஆண்டுகள். கல்லூரியில் சேர்ந்த ஆண்டிலேயே என் சிறுகதைகள் மணிக்கொடியில் வெளி வரத் தொடங்கின. அதனால், கல்லூரி பாடப்புத்தகங் களைவிட அதிகமாய் அப்போதைய பத்திரிகைகள், ஆங்கிலச் சிறுகதைகள், நாவல்களைப் படிப்பது என் வழக்கம். 1937ஆம் வருடத்தில் நடந்ததைக் கூறுகிறேன்.

எங்கள் தெரு நண்பன் ஒருவன் என் படிப்பில் குறுக் கிட்டான். 'டேய் வெங்கட்ராம், உன்னைப் பார்க்க என் கணித ஆசிரியர் வருகிறார்...'

'கணித ஆசிரியர் என்னை எதற்குப் பார்க்க வேண்டும்?' என்றபடி நான் தலை நிமிர்ந்தபோது, நண்ப னுக்குப் பின்னால் ஓர் இளைஞர் வருவதைக் கண்டேன்

படிப்பகம்

www.padippakam.com



அவசரமாக எழுந்து, 'வாருங்கள் சார்!' என்று கைகுவித்தேன்.

'நீதானே வெங்கட்ராம்? நான் எதிர்பார்த்ததைவிட சின்ன பையனாக இருக்கிறாயே! என்னைத் தெரியவில்லையா? நான் மௌனி......'

அவ்வளவுதான்; அந்தப் பெயர் காதில் விழுந்ததும் என் கைகால்கள் நடுங்கத் தொடங்கின.

'உட்காருங்கள் சார்!' என்று சொல்லவே குரல் தடுமாறியது. எங்கள் வீட்டில் நாற்காலி—மேஜை என்கிற ஆடம்பரம் கிடையாது. பட்டுசேலை வியாபாரம் என் தந்தையாருக்கு; தரையில் நீளமான கடையப் பாய் விரித்திருக்கும்; யார் வந்தாலும் அதன்மேல்தான் அமர வேண்டும். மௌனி உட்கார்ந்ததும் என் நண்பன் அவரிடம் விடைபெற்றுப் போய் விட்டான். அவருக்கு முன்னால் உட்காரத் தயங்கிய என்னை அவர் வற்புறுத்தி உட்கார வைத்தார்.

சமீபத்தில்தான் வயது கணக்குப் பார்த்தேன். அப்போது எனக்குப் பதினேழு வயது; அவருக்கு முப்பது. பதின்மூன்று வருட இடைவெளி எங்களுக்குள் எவ்வளவு பெரிய வேற்றுமையைக் கற்பித்து விட்டது! ஒல்லியாக, சிவப்பாய் 'பையன்' எண்ணும்படியாகவே என் உடல் வளர்ச்சி இருந்தது; அதற்கு ஒரு கம்பீரம் கொடுப்பதற்காக 'நேவிகட்' என்று அந்தக் காலத்தில் பிரபலமான துளிர் மீசை வைத்திருந்தேன். என் தோற்றம் பற்றி நான் மிகுந்த அக்கறை காட்டுகிறவன்; கிராப்பை விதவிதமாக வாரிக் கொள்வேன். அல்லது யாராவது வாரி விடுவார்கள். பெரும்பாலும் அரைக்கை சட்டையே அணிவேன்; ரோல்டு கோல்டு பொத்தான்கள் தான் போடுவேன். சட்டையின் ஒரு காலரில் ரோல்டு கோல்டு 'பின்' ஒன்று வழியும். என்னுடைய இந்த

படிப்பகம்

www.padippakam.com



கவனம் எல்லாம் என்னை ஒரு மாணவனாகக் காட்டிக் கொடுத்தது.

அவருடைய தோற்றம் எனக்கு நேர்மாறு. அதுபற்றி அவர் கவனம் கொண்டவராய்த் தோன்றவில்லை. அவரும் ஒல்லி—கறுத்த கிராப், இடது பக்கம் வகிடு எடுத்து சீவப் பெற்றாலும், அவர் தன் கையாலேயே ஒதுக்கி விட்டாற்போல் இருந்தது. நீண்ட மூக்கும், கரிய கண்களும், சதையில் செதுக்குண்ட கிரேக்கச் சிலை போல. வெள்ளை அரைக்கைச் சட்டை; அதற்குமேல் கதர் துண்டு போர்த்திருந்தார். அவருடைய உருவம் என் மனத்தில் பதிவு பெற, எங்கள் வீட்டில் போதுமான வெளிச்சம் இருந்தது.

மணிக்கொடியில் கதை எழுதியவர்கள் எல்லோரிடமும் எனக்கு ஆழ்ந்த பக்தி உண்டு, அரை நூற்றாண்டுக்கு முன்னால், பிச்சமூர்த்தியும், கு. ப. ரா.வும் எனக்கு மணிக்கொடியில் இடம் கண்டவர்கள். புதுமைப்பித்தன், மௌனி, ஆசிரியர் பி. எஸ். ராமையா, உதவி ஆசிரியர் கி. ராமச்சந்திரன், சிதம்பர சுப்பிரமணியன், சிட்டி ஆகியோரின் பெயர்களோடு என் பெயரும் சேர்ந்து வருவதை நான் பெரும்பேறாக மதித்தவன். மணிக்கொடி இதழ் ஒவ்வொன்றையும் பல தடவை படிப்பேன். இந்த இலக்கியப் படைப்பாளிகள் அனைவருமே வானத்திலிருந்து வந்த தேவப்பிறவிகளாக எனக்குத் தோன்றினார்கள். இவர்களிலும் புதுமைப்பித்தன், மௌனி இருவரின் படைப்புகளைச் சிறப்பாகப் போற்றினேன்.

மௌனியின் முதல் கதை மணிக்கொடியில் வந்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு என் முதல் கதை வந்தது. தொடர்ந்து அவருடைய சிறுகதைகளைப் போலவே என் கதைகளும் வெளிவந்தன. நானும் வாசகர்களின் கவனத்தைப் பெற்றிருந்தேன். முதல் கதைக்குப் பிறகு, ந. பி. யிடமோ, கு. ப. ரா. இடமோ நான் என் கதை

படிப்பகம்

www.padippakam.com



எதனையும் காட்டியதில்லை. என் சங்கோச குணம் காரணமாக, அவர்களை கண்டாலே ஒதுங்கி விடுவேன். மௌனியும் கும்பகோணத்துக்காரர் என்பதையும், அவரும் ந. பி.யும், கு. ப. ரா.வும் அடிக்கடி சந்தித்துப் பேசுவார்கள் என்பதையும் அவர்களுடைய நண்பரான என் ஹிந்தி ஆசிரியர் சொல்லியிருந்தார். ஆனால் நானாகச் சென்று அவர்களுடன் பேச, எனக்குத் தைரியம் இல்லை. இன்று மௌனியே என்னைத் தேடி வந்திருக்கிறார்; நான் அவருக்கு முன்னால் உட்கார்ந்திருக் கிறேன் என்பதே எனக்கு அதிசயமாக இருந்தது.

'நிறைய எழுதுகிறாயா?'

'இல்லை சார். படிப்பு நேரத்துக்குப் பிறகு...எழுது வேன்.' என்று பொய் சொன்னேன். 'உங்கள் காதல் சாலையை இருபது முப்பது தடவை படித்தேன்......உங்க ளுடைய 'ஸ்டூடன்ட் எப்படி சார்?' என்று என் தெரு நண்பனைப் பற்றிக் கேட்டேன்.

'ஒன்றும் இல்லாத இடத்தில் சாமான்களை வைப்பது சுலபம்; ஆனால் தேவையில்லாத சாமான்களும் குப்பை கூளமும் நிறைந்த இடத்தில் சரியான சாமான்களை எப்படி வைப்பது? உன் சிநேகிதன் நிறைய தெரிந்து வைத்திருக்கிறான்—தப்பு தப்பாக! முதலில் அதை எல்லாம் கூட்டித் தள்ளி சுத்தம் செய்ய வேண்டியிருக் கிறது. பிறகுதான் புதிதாய் சொல்லித்தர வேண்டி இருக் கிறது. ஆக, இரண்டு வேலை எனக்கு!

என் நண்பனைப் பற்றிய இந்த வருணனையைக் கேட்டு எனக்கு சிரிப்பு வந்தது.

'சரியானது எதையும் அவன் மூளை ஏற்க மறுக்கிறது. அவனோடு இது வேறே கஷ்டம். மேத்ஸ் மட்டும் வரவில்லை என்று என்னை டியூடராக வைத்தார்கள்.

எ—5

www.padippakam.com


ஆனால் அவன் எந்த சப்ஜெக்டில் கெட்டிக்காரன் என்று அவனுக்கே தெரியவில்லை!'

என் நண்பன் பணக்கார வீட்டுப் பிள்ளை; அவனைப்பற்றி மௌனி ஜோக் அடிப்பதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'உங்களுக்கு எப்படி சார் இவன் பழக்கம்?'

'எனக்குப் பழக்கம் இல்லை. ஒரு சிநேகிதன் சிபாரிசு செய்தான்; ஒப்புக்கொண்டேன். எனக்கும் பொழுது போகுமே என்று நினைத்தேன்... நிறைய படிக்கிற வழக்கம் இருக்கிறதா உனக்கு? அதென்ன புத்தகம்?' என்றபடி நான் படித்துக்கொண்டிருந்த 'த கிரேட் ரஷ்ஷியன் ஷார்ட் ஸ்டோரீஸ்' என்ற புத்தகத்தைக் கையில் எடுத்தார்; அதைப்பற்றி ஏதோ கூறினார்; எனக்குப் புரியவில்லை.

ஒரு பெரிய ஆச்சரியத்துக்கு எதிரில் அமர்ந்திருப்பது போன்ற பரவசத்தில் நான் சிக்கியிருந்தேன். எனக்கு அவருடைய கதைகளில் ஈடுபாடு இருந்தது. ஆனால், அக்கதைகளின் சிறப்பு என்ன என்று விண்டுநோக்கும் பக்குவம் எனக்கு இல்லை. மணிக்கொடி ஆசிரியர் பி. எஸ். ராமையா 'முதல் அத்தியாயம்' என்ற தலைப்பில் ஒவ்வொரு இதழிலும் எழுதியுள்ள ஆசிரியர்களைப் பற்றியும் கதைகளைப் பற்றியும் சிலபல வரிகள் எழுதுவது வழக்கம். மௌனியின் முதல் கதையைப் பெரிதும் வியந்து பாராட்டி எழுதினார். 'காதல்சாலை' என்ற கதையைப்போற்றி ராமையா ஒரு முழுப்பக்கமே எழுதியிருந்தார். அவற்றை எல்லாம் நான் கவனமாய்ப் படிப்பேன். என் கதைகள் வெளிவந்துகொண்டிருந்தாலும் சிறுகதையின் வடிவம், உள்ளடக்கம், உத்தி முதலியவை பற்றி அப்போதுதான் நான் சிறிதளவு தெரிந்துகொண்டிருந்தேன். ஆகையால், மௌனியின்

படிப்பகம்

www.padippakam.com



கருத்துகளைக் கேட்டுக்கொள்ளத்தான் என்னால் முடிந்தது.

* * *

மௌனி வாரத்தில் 3, 4 நாள் எங்கள் தெருவுக்கு வருவார்; டியூஷன் முடிந்த பிறகு வாரம் ஒருமுறையாவது என்னைப்பார்க்க வருவார். அவர் வருவதையும், பேசுவதையும் நான் மிகவும் விரும்பினேன்; வேண்டினேன். ஆனால், அவருடைய கருத்துகள் என்னைத் திகைப்புறச் செய்தன.

'வெறும் 'சென்டிமென்ட்ஸ்' வைத்துக் கவிதை எழுதும் (பாரதியார் ஒரு கவிஞனா?' என்று அவர் பலமுறை சொன்னதை வியப்புடன் கேட்பேன். ஒரு சந்திப்பின்போது, 'நேற்று ராத்திரி பிச்சமூர்த்தி, ராஜகோபாலனோடு பேசிக்கொண்டிருந்தேன். இவன்கள் எல்லாம் என்ன கதைகள் எழுதுகிறான்கள். சரியான அப்ரோச்சே இல்லை', என்று பரிகாசம் செய்தார். அவருடைய பல சந்திப்புகளால், புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, கு. ப. ரா., சிதம்பர சுப்புரமணியன், சிட்டி, ராமையா முதலிய மணிக்கொடி எழுத்தாளர் யாரையும் அவர் எழுத்தாளராக ஏற்றதில்லை என்பது தெரிந்தது. நான் மிகவும் மதித்த இலக்கியப் படைப்பாளிகளை எல்லாம் அவர் பீடத்திலிருந்து கீழே தள்ளிவிடுவதை நான் வேதனையோடு பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஆர். எஸ். மணி என்பது மௌனியின் இயற்பெயர். 'மௌனி' என்னும் புனைப்பெயரை அவருக்கு சூட்டியவர் ஆசிரியர் பி. எஸ். ராமையா. புனைப்பெயரைப் பொய்யாக்கி நிறையப்பேசுகிற சுபாவம் அவருக்கு. அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது; மௌனி பேசியதெல்லாம் எனக்கு நினைவு இல்லை. நினைவில் உள்ளவற்றை மட்டும் உண்மைக்கு மாறுபடாமல் இங்கே பதிவு செய்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஒருமுறை அவரைக் கேட்டேன்: 'நீங்கள் எப்படிக் கதை எழுதுகிறீர்கள்?'

'மனத்தில் தோன்றுகிறவை, கற்பனையானவை, திடீரென்று எழும் கருத்துகள்—எல்லாம் நான் ஒரு நோட்டில் குறித்துவைக்கிறேன். எழுதும்போது அதில் சில எனக்கு உபயோகப்படும். வீட்டுக்கு வாயேன், காட்டுகிறேன்', என்றார்.

நான் கல்லூரிக்குப் போகும் வழியில்தான் அவர் வசித்த காமாட்சி ஜோசியர் தெரு இருக்கிறது. மறுநாள் மாலையே அவருடைய வீட்டுக்குப் போனேன். பெரிய, இரட்டை மாடி வீடு. வாசலைத் தாண்டி உள்ளே நுழைந்ததும், எதிரெதிரான இரண்டு நாற்காலிகளுக்கு இடையில் ஒரு சிறிய மேஜை; அவர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், 'வா'ப்பா, காலேஜ் போகவில்லையா?' என்றார்.

'கடைசி பீரியட் லெக்சரர் வரவில்லை. வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் வரச்சொன்னீர்களே......'

உள்ளே சென்று உடனே திரும்பியவர், மேஜை மீது ஒரு கனமான புத்தகத்தை வைத்தார்: 'கதைக்கான குறிப்புகளை இதில்தான் எழுதிவைக்கிறேன்.'

ஐந்தாறு 'கொயர்' பருமனிருந்த அந்த நோட்டை அவரே தயாரித்துக் கொண்டிருக்க வேண்டும். நோட்டைப் புரட்டினேன். எந்த பக்கத்திலும் நேர்வரிசையாக எழுதப்படவில்லை. குறுக்கும் நெடுக்குமாகப் பாதி நோட்டுக்கு மேல் கிறுக்கியிருந்தார். கஷ்டப்பட்டுத்தான் அவருடைய கையெழுத்தைப் படிக்க முடிந்தது. பல வரிகள் படித்தேன். எதுவும் இப்போது நினைவில்லை.

'இது இரண்டாவது நோட்டு', என்றார் மௌனி.

படிப்பகம்

www.padippakam.com



அவரைப்போலவே நானும் இப்படி குறிப்புகள் எழுதப்பழகவேண்டும் என்று மனத்தில் ஒரு தீர்மானம் செய்தேன்; ஆனால், அதை ஒருநாளும் நான் செயல் படுத்தவில்லை. எங்கள் வீட்டுக்கு அவர் வந்தாலும் சரி, அவர் வீட்டுக்கு நான் போனாலும் சரி, பேசியவர் அவர்; கேட்டுக்கொண்டவன் நான்.

**sweet seventeen** - (இனிய பதினேழு)க்கும் **thirsty thirty** - (தாகமான முப்பது)க்கும் இடையில் நிகழ்ந்த இந்தச் சந்திப்புகளால் எனக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன? என் எழுத்துப்பித்தம் வலுத்தது. மௌனி என்னும் தேவதையின் சிலை மேலும் அழகுற்றது என் மனத்தில்.

* * *

பதினோரு வருடங்களுக்குப் பிறகு நான் தேனீ மாத இதழைத் தொடங்கினேன். மௌனியைக் கட்டாயம் எழுதவைக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு. அவர் கும்பகோணம் வீட்டை விற்றுவிட்டு சிதம்பரத்தில் அரிசி மில் வைத்திருந்தார். அவருக்கும், க. நா. சு. வுக்கும் கடிதம் எழுதியதோடு, எனக்குத் துணையாக உதவிய 'கரிச்சான் குஞ்சு'வையும் அவர்களை நேரில் கண்டு 'தேனீ'க்கு எழுதும்படி வற்புறுத்தினேன். இருவருமே தேனீ ஆபீஸுக்கு—எங்கள் வீடுதான் ஆபீஸ்—அடிக்கடி வரலானார்கள்; ஸ்டைல்தான் வித்தியாசம் க. நா. சு. ஆடம்பரமாக வந்து இரண்டொரு நாள் தங்குவார். மௌனி திடீரென்று முற்பகலில் வருவார்; அவசரமாகத் திரும்ப வேண்டும் என்று திண்ணையிலேயே புறப்படத் தயார் நிலையில் உட்காருவார்; இரண்டு மூன்று மணி நேரம் பேசிவிட்டு அவசரமாய்த் கிளம்புவார். இரண்டொரு முறைதான் அவர் ஆபீசுக்குள்ளே வந்ததாய் ஞாபகம். மௌனியும், க. நா. சு. வும் ஏக காலத்தில் தேனீ ஆபீசுக்கு வந்தார்களா என்பது எனக்கு நினைவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



மணிக்கொடி நின்று பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. கு. ப. ரா. கிராம ஊழியனுக்கு ஆசிரியராக இருந்தார்; ஆனால், அவர் 'மௌனி'யின் எழுத்துகளைத் தேடிப் போகவில்லை. கவிஞர் சாலிவாகனனின் (வி. ரா. ராஜகோபாலன்) ஆசிரியராக இருந்த 'கலாமோகினி' யில் கு. ப. ரா., நான், க. நா. சு., தி. ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, சிட்டி முதலியவர்கள் எழுதினார்கள். க. நா. சு. ஏனோ மௌனியை எழுதத் தூண்டவில்லை. 1939 லிருந்து 1948 வரை மௌனி ஒன்றும் எழுதியதாகத் தெரியவில்லை. இந்தக் காலகட்டத்தில்தான் புதுமைப் பித்தன் ஒரு ரேடியோ பேச்சுக்கு இடையில் மௌனியை 'சிறுகதையின் திருமூலர், சொல்லில் அடைபட மறுக்கும் கருத்துகளைச் சொல்லாக்கியவர்' என்று வரையறை இன்றிப் புகழ்ந்தார். புதுமைப்பித்தனின் இந்தப் போற்றி உரையைக்கூட க. நா. சு. வும் மற்றும் சிலரும் உடனே பற்றிக்கொள்ளவில்லை; பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்கள் புதுமைப்பித்தனின் கருத்தைப் பின்பற்றி மௌனியைக் கண்டுகொண்டார்கள் என்று நான் கூறினால் தவறாகுமா? க. நா. சு. ஆசிரியராக இருந்த சந்திரோதயம், சூறாவளி—இதழ்களில் மௌனி எழுதவில்லை.

மௌனியின் சிறுகதைகள் 'தேனீ'யை அலங்கரிக்க வேண்டும் என்பது என் விருப்பம்; அவருடைய இரண்டு சிறுகதைகள் தேனீயில் வந்தபோதும் க. நா. சு. அவைபற்றி போற்றியோ தூற்றியோ எங்களிடம் அதிகமாகப் பேசியதில்லை. மணிக்கொடிக்குப் பிந்தைய பத்து ஆண்டுகளில் நான் ஓரளவு இலக்கியப் பயிற்சியும் வாழ்வியல் அறிவும் பெற்றுவிட்டேன். 17, 18 வயதுகளில் என்னிடம் இருந்த மாணவ மனோபாவம் முற்றிலும் அகன்றுவிட்டது. மணிக்கொடியில் எழுதியவர்களின் இலக்கியப் பங்களிப்பின் பெருமையை, கல்லூரிப் பருவத்தின் கலங்கல் இல்லாத தெளிவுடன் இப்போது உணரத் தொடங்கியிருந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



தேனீ முதல் இதழுக்கு மௌனியின் சிறுகதை வரவில்லை. இதழ் வெளியான சில நாட்களுக்குள் அவரே எங்கள் வீட்டுக்கு வந்தார். முதல் இதழ் பூராவையும் அவர் படித்ததாய்க் கூறினார். அந்த இதழில் எழுதிய எழுத்தாளர் ஒவ்வொருவரையும் மற்றோர் எழுத்தாளர் அறிமுகப்படுத்தி இருந்தார். இது ஒரு நல்ல அம்சம் என்று கரிச்சான்குஞ்சு, ஜானகிராமன், நான்— கருதினோம்.

மௌனிக்கு இந்தப்பகுதி பிடிக்கவில்லை: 'ஒருவரை ஒருவர் முகஸ்துதி செய்துகொள்ளக்கூடாது' என்றார்.

'இது முகஸ்துதி இல்லை. சக எழுத்தாளரிடம் நாம் காணும் குறைகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்' என்றதோடு அந்தப் பகுதிகளையும் காட்டினேன். அவர் திருப்தி அடையவில்லை.

அந்த இதழில் 'ராஜகுடும்பம்' என்கிற என் சிறுகதை வந்திருந்தது. தேனீயை மிகவும் பாராட்டி வரவேற்ற 'ஹிந்து' நாளேடு என் கதைகளையும் புகழ்ந்து சில வரிகள் எழுதி இருந்தது.

'ஹிண்டுவில் தேனீ விமரிசனம் படித்தேன், உன் கதையை மெச்சி இருக்கிறான். அந்தக் கதையில் அப்படிப் பேச என்ன இருக்கிறது? தப்புத் தப்பாக எழுதியிருக்கிறதே!' என்று அவர் கூறியது எனக்குப் புரியவில்லை.

'என்ன தப்பு சார்?' அக்கதைப் பற்றி எனக்கு ஒரு நிறைவு இருந்தது, அதில் என்ன தப்பு கண்டார் என்று கொஞ்சம் வருத்தமாக இருந்தது.

'கதையில் ராஜாவும் வரவில்லை, ராணியும் வரவில்லை. ராஜ குடும்பம் என்று எப்படி பெயர் வைக்கலாம்?'—அவர் கூறியதை நான் 'ஜோக் அடிக்கிறார்' என்று எண்ணிச் சிரித்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



'இப்படி சம்பந்தம் இல்லாமல் பெயர் வைப்பது தப்பு!'—என்று மறுபடியும் அழுத்திப் பேசின பிறகுதான் அவர் உண்மையாகவே கண்டிக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

'கதைநாயகனுக்கு ராஜா என்று பெயர். அவன் தன் மனைவியை 'ராணி' என்று பிரியமாக அழைக்கிறான். ஒரே குழந்தையை இளவரசு என்கிறார்கள். பாசத்தால் பிணைந்த இந்த அழகான குடும்பத்தை ராஜகுடும்பம் என்கிறேன்; அதிலே தப்பு என்ன?'

'ராஜா, ராணி வராத கதைக்கு ராஜகுடும்பம் என்று நீ பெயர் இட்டது தப்புதான்!' என்று அவர் முடிவு கட்டி பேசினார்.

அதே கதையில் என் கதாநாயகன் ஈரானி ஹோட்டலுக்குச் சென்று பிரியாணி சாப்பிடுகிறான்.

'அந்த வார்த்தையைக் கேட்டாலே எனக்குக் குமட்டுகிறது. நீ எழுதியிருக்கக் கூடாது!'

அவருடைய தர்க்க நியாயத்தின் அடியொற்றி நான், 'அவன் அசைவப்பயல் சார்! என்ன என்னவோ சாப்பிட்டுத் தொலைக்கிறான், நான் என்ன செய்ய முடியும்!' என்றேன்.

'நீ அந்த வார்த்தையை எழுதி இருக்க வேண்டாம்' என்றார் முடிவாக.

அவருடைய சைவ உணவுப் பற்று—என் கதையைப் புதுமையாக ஒரு விமரிசனத்துக்கு உள்படுத்தியது. சாதி, மதம், கட்சி பார்த்து விமரிசனம் செய்கிறார்கள் தமிழ் நாட்டில் சிலர், உணவுமுறையையும் பார்ப்பது புது முறை விமரிசனமாக இருக்குமே!

தேனீயில் நான் எழுதிய முதல் கதையைத் தூளாக்கி விடுவது என்னும் உறுதியோடு மௌனி அன்று வந்திருந்தார் போலும்; அடுத்து, கதாசிரியனான என்னைப் பற்றி

www.padippakam.com



தி. ஜானகிராமன் எழுதியிருந்ததை மௌனி கண்டிக்கத் தொடங்கினார்.

மகாபாரதத்தில் வெறும் எலும்புக்கூடுகள் என ஜீவனற்றுக் கிடந்த சில பெண் பாத்திரங்களை உயிரும் உணர்வும் உள்ள அழகிகளாக நான் உருவாக்கினேன் என்பதுபோல் தி. ஜா. எழுதியிருந்தார்.

'மகாபாரதத்திலிருந்து எலும்புக்கூடுகள் தோண்டி எடுப்பதாவது சொல்லவே அருவருப்பாக இருக்கிறது'— மௌனியின் இந்த விமரிசனத்தை நான் கட்சியாடாமல் ஒப்புக்கொண்டேன். மாபெரும் இதிகாசத்தைப் படைத்த வியாச முனிவர் எலும்புக்கூடுகளையா தம் நூலில் போட்டிருப்பார்? அப்படி எழுதியதும், அதை நான் வெளியிட்டதும் அநாசாரம், அநாகரிகம் என்பதை மௌனி சுட்டிக்காட்டிய பிறகே நானும், தி. ஜா. வும் உணர்ந்தோம்.

இந்த உரையாடல்கள் ஒருபுறம் இருக்க, தேனீக்கு கதை எழுதித் தருமாறு ஓயாமல் அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்த பெரும் கலைஞனைத் 'தேனீ'யில் காணவேண்டும் என்று எனக்கு ஏக்கமாக இருந்தது.

* * *

மௌனியின் முதல் கதையை, கரிச்சான்குஞ்சு சிதம்பரத்துக்குச் சென்று வாங்கிவந்தார். மௌனி கரிச்சான்குஞ்சுவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கதையை எழுதிக் கொடுத்துள்ளார். 'அவர் எழுதியதைப் படித்துக்கூடப் பார்க்கவில்லை, திருத்திப் போட்டுக் கொள்ளச் சொன்னார்?' என்றபடி கைப்பிரதியை என்னிடம் கொடுத்தார் கரிச்சான்குஞ்சு.

'நீங்கள் படித்தீர்களா?'

படிப்பகம்

www.padippakam.com



'நேரம் ஏது? கடிதங்களைச் சுருட்டிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடிவிட்டேன், அவருக்கும் அவசரம்'.

ஆவலும் மகிழ்ச்சியுமாகக் கதையைப் படிக்கத் தொடங்கினேன். முதலில் எழுத்துகள் புரியவில்லை. பிறகு, ஒரு வாக்கியமும் முடிவுபெறவில்லை, அடுத்த வாக்கியம் எங்கே ஆரம்பம் ஆகிறது என்றும் புரியவில்லை. இலக்கண அமைதியோ தெளிவோ கதையில் காணோம்—எனக்கு ஒரே மலைப்பாக இருந்தது.

கரிச்சான்குஞ்சுவும் படித்தார். நாலைந்து பக்கம் படித்ததும், 'இதென்ன, ஒன்றும் புரியவில்லை. அவரையே சரிசெய்து கொடுக்கச் சொல்லலாமே' என்றார்.

'வேண்டாம், அவர் திருத்திக்கொடுப்பதற்குள் மாதம் போய்விடும், நான் எடிட் செய்கிறேன்'.

கதையைத் திருத்தம் செய்ய எனக்குச் சில நாட்கள் ஆயின. மௌனியின் சிறுகதை வடிவம் அவருக்கு இயல்பாக வந்த ஓர் அற்புதம். போகிற போக்கில் காட்சிகளைத் தோற்றுவிப்பதும், பிம்பங்களை (images) உயிர்ப்பிப்பதும் அவருடைய எழுத்துகளின் வலிமை. இந்த அவருடைய பெருமைகளுக்குச் சற்றும் ஊனம் ஏற்படாமல் கதையைத் திருத்தம் செய்ய எனக்கு மிகக் கவனம் தேவைப்பட்டது. கால், அரை, முற்றுப்புள்ளி களைக்கூட ஜாக்கிரதையாகப் பயன்படுத்தவேண்டி யிருந்தது.

'மௌனியைச் சந்தியுங்கள்' என்று ஹிண்டு, மித்திரன், தினமணி ஆகிய தினசரிகளில் எல்லாம் விளம்பரம் கொடுத்தேன். இதனால், கரிச்சான்குஞ்சு உள்படச் சில எழுத்தாளர்களுக்கு என்மேல் வருத்தம். கதை வெளியான பிறகு, அவர்களின் பொருமல் எனக்குக்

படிப்பகம்

www.padippakam.com



கேட்டது. லா. ச. ராமாமிர்தம் கதையைப் பாராட்டு வதேபோல் பரிகாசம் செய்து ஒரு நீண்ட கடிதம் எழுதியது இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. மௌனி தன் கதையை 'தேனீ'யில் கண்டு எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், அச்சான பிறகு, கதையைப் படித்தபோது, அக்கதையின் படைப்பாளி நானே என்பது போன்ற பெருமிதம் எனக்கு உண்டாயிற்று.

மௌனியின் தமிழ் பற்றி எனக்கு சிறிது கவலையாக இருந்தது. அவசர அவசரமாக எழுதியதால் மௌனியின் தமிழ் குழம்பி இருக்கலாம் என்று நானும் சமாதானம் சொல்லிக்கொண்டேன். அடுத்த கதைக்காக அவரை 'நச்சரிக்க'லானேன்.

மௌனின் முதல் கதையுடன், அவரை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் பொறுப்பை க. நா. சு. வுக்கு கொடுத்தேன்; அவர் தன் பொறுப்பை நல்லவிதமாகவே நிறைவேற்றினார். க. நா. சு. வின் அறிமுகத்தோடுதான் 'மௌனி' யின் முதல் கதை தேனீயில் வந்தது. மௌனி யின் தமிழ் பற்றிப் பேசியபோது க. நா. சு. அதை பொருட்படுத்தவில்லை.

இரண்டாவது கதை வந்து சேர்ந்தது. அதுவும் முதல் கதைபோலவே இருந்தது. நானே அதையும் ஒழுங்குபடுத்தி 'நினைவுச்சுவடி' என்ற பெயரிட்டு 'தேனீ'யில் வெளியிட்டேன். முன்னைப்போலவே மௌனிக்கு மட்டும் தினசரிகளில் விளம்பரம் செய்தேன்.

இந்தத்தடவை கரிச்சான்குஞ்சுவோடு தி. ஜானகி ராமனும் சேர்ந்து கொண்டார். இருவரும் 'மௌனி'யின் ரசிகர்களே; ஆனால் அவருக்கு மட்டும் சிறப்பிடம் கொடுப்பதை இருவரும் விரும்பவில்லை.

மௌனியின் தமிழ் பற்றி எனக்குக் கவலையும் வியப்புமாக இருந்தது. மணிக்கொடியில் வெளியான

படிப்பகம்

கதைகளின் கைப்பிரதிகளும் இப்படித்தான் இருந்தனவா? பி. எஸ். ராமையா 'எடிட்' செய்தாரா, வேறு யாராவது அவருக்கு உதவினார்களா? அல்லது மௌனியின் கைப்பிரதிகள் சரியான தமிழில் இருந்தனவா?

இந்த கேள்விகளுக்கு விடைகாணும் முன், மௌனியின் மூன்றாவது கதை வருமுன், தேனீயை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

* * *

இலக்கிய விசாரத்தை ஒதுக்கி வைத்துவிட்டு வியாபாரத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினேன். **1954**-ஆம் ஆண்டு, ஜூலை, ஆகஸ்ட் மாதம் நானும். ஒரு வியாபாரி நண்பரும் சிதம்பரம் செல்ல நேர்ந்தது, ஏதோ ஒரு தெரு வழியாகப் போகும்போது, பின்னாலிருந்து யாரோ என் பெயர் கூறி என்னைக் கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தேன்: மௌனி ஒரு வீட்டு வாசலில் நின்றார். மகிழ்ச்சியோடு அவரை நெருங்கினேன்: 'என்ன சார், எப்படி இருக்கிறீர்கள்?' என்றபடி.

'நீ எங்கே இங்கே?' என்றவரிடம், நான் சிதம்பரத்துக்கு வந்த வேலையைக் கூறினேன். அவர் எங்களை உள்ளே வருமாறு அழைத்தார். திண்ணையிலேயே உட்கார்ந்த அவருக்குப் பக்கத்தில் நாங்கள் அமர்ந்தோம். என்னோடு இருந்த நண்பர் வியாபாரி; இலக்கிய வாசனை அறியாதவர் உள்ளே வருமாறு அழைத்த மௌனி எங்களைத் திண்ணையில் நிறுத்தியதை நண்பர் ரசிக்கவில்லை; 'சீக்கிரம் போகணுமே!' என்றார்.

மௌனியும் நானும் இரண்டு மணி நேரத்துக்கு மேல் பேசிக் கொண்டிருந்தோம்; பேச்சுக்கு இடையில் அவர், 'ஒரு கதை எழுதினேன். விகடனுக்கும் குமுதத்துக்கும் அனுப்பினேன். திருப்பி அனுப்பி விட்டார்கள்', என்று வருத்தப்பட்டார்.

www.padippakam.com



'விகடனுக்கும் குமுதத்துக்கும ஏன் சார் அனுப்பினீர்கள்?' என்றேன் வியப்புடன்.

'அவைதானே பிரபலமாக இருக்கின்றன! அவர்கள் அதிகப் பணம் தருவதாகச் சொன்னார்கள்.

'உங்களுக்கு எதுக்கு சார் பணம்? விகடன், குமுதம் எல்லாம் உங்கள் கதையைப் போடாது. சிவாஜி தீபாவளி மலரில் போடச் சொல்கிறேன். சிவாஜி சிறிய பத்திரிகை, பணம் கிடைக்காது, கதையை மரியாதையோடு வெளியிடுவார்கள், அதைப் பெருமையாகவும் நினைப்பார்கள்'.

அவர் உள்ளே சென்று கைப்பிரதியைக் கொண்டு வந்தார். 'நீயே வைத்துக் கொள். தீபாவளி சமயம் சிவாஜிக்கு அனுப்பலாம்'

'சார், வேண்டாம். காணாமல் போய் விட்டால் கஷ்டம். நீங்கள் தீபாவளி மலருக்கு அனுப்பலாம். கடிதம் வரும்'—நான் கதையைப் படிக்கவில்லை. நேரமில்லை, மதிய உணவு நேரம்; பசியால் என் நண்பருக்கு ஒரே கோபம். இடையிடையில், 'போவோமா?' என்று அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஒருவாறு மௌனியிடம் விடைபெற்றோம். வெளியில் வந்ததும் என் நண்பர் குமுறினார். 'பெரிய எழுத்தாளர், உங்களுக்கு ரொம்ப வேண்டியவர் என்றீர்கள். வீட்டுக்குள்ளேகூட அழைத்துப் போகவில்லை. இவ்வளவு நேரம் பேசினீர்கள், ஒருவாய் தண்ணீர்கூட தரவில்லை...,

'தாகமாக இருந்தால் தண்ணீர் கேட்டிருக்கலாமே!'—என்று சிரித்தேன்: 'கட்டாயம் கொடுத்திருப்பார்'.

* * *

சிவாஜி தீபாவளி மலருக்கு மௌனியின் கதை கிடைக்கும் என்று ஆசிரியர் கவிஞர் திருலோக சீதாராமனுக்கு கடிதம் எழுதி விட்டேன்.

* * *

படிப்பகம்

www.padippakam.com



அடைமழை பெய்து கொண்டிருந்தது. ரயில், பஸ் போக்குவரத்துப் பாதைகள் காயப்பட்டுக் கிடந்தன. ஊருக்குள் தெருக்கள் சாக்கடைகள் போலக் காட்சி அளித்தன. வீட்டுக்கு வெளியே செல்லவும் அச்சமாக இருந்தது. தீபாவளி 15 நாள் தூரத்தில் இருந்தது.

நள்ளிரவு கடந்து விட்டது. கொட்டுமழையின் சந்தடியை மீறி, யாரோ பலமாய் கதவு தட்டும் சத்தம் கேட்டு என் தூக்கம் கலைந்தது. கதவு திறந்தேன்: சிவாஜி ஆசிரியர் கவிஞர் திருலோக சீதாராம். பாதி நனைந்த கோலத்தில்!

எனக்கு ஆச்சரியமாக இல்லை. கவிஞருக்கும் எனக்கும் இருந்த நட்பு அப்படி; நேரம் கெட்ட நேரத்தில் அவர் என்னைக் காண வருவது சகஜம். கவிஞருக்குப் பள்ளிப் படிப்பு அதிகமில்லை. மகாகவி பாரதியாரின் கவிதை களை அரசியல், இலக்கியக் கட்டங்களில் பாடிப்பாடியே கவியாக மாறியவர். பாரதியாரின் கவிதைகள் எல்லாம் அவருக்கு மனப்பாடம். அவருக்கு இயற்கையாக அமைந்த சௌக்கியமான சாரீரம்; உணர்ச்சிவசப்பட்டுப் பாடு வதைக் கேட்டவர்கள் இருப்பிடத்தை விட்டு அசைய மாட்டார்கள். தமிழ்நாட்டில் அவர் கலந்து கொள்ளாத பாரதிவிழா சுகப்படுவதில்லை. அவர் பாரதியாரின் ஞான வாரிசு என்றே பலரும் கருதினார்கள்.

அவருடைய வாழ்க்கை சித்தர்களின் வழி. வளமை யிலும் ஜொலிப்பார், வறுமையிலும் ஜொலிப்பார். வெற்றி வீரர்களாய் உலகத்தால் ஏற்கப்பட்ட பெரிய மனிதர்கள் பலர் மனம் சோரும்போது அவரைத் தேடிச் செல்வார்கள்; அவர் பாடக்கேட்டு தைரியத்தை மீட்டுக் கொள்வார்கள். டெலிபோனில் அவரைப் பாடச் சொல்லிக் கெஞ்சுவார்கள் பலர். அவருடைய குரல் ஒலி குனிந்த தலையை நிமிரச் செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com



1944இலிருந்து எங்கள் நட்பு தொடங்கியது; பரஸ்பரம் வியக்கும் நட்பு. தமிழ்நாட்டில் அவர் எந்த ஊரில் சொற்பொழிவாற்றினாலும், உடனே திருச்சிக்கு திரும்ப மாட்டார். நேராக கும்பகோணத்துக்கு என்னைத் தேடி வருவார். தூத்துக்குடியிலோ, நாகையிலோ பேசியதை அப்படியே, அதே உணர்ச்சிப் பாவனையோடு எனக்கு முன்னால் பேசுவார்; நான் சபாஷ் சொன்னால்தான் அவர் அமைதி அடைவார்.

திடீரென்று நள்ளிரவில் கதவு தட்டுவார்; உள்ளே வரும்போதே, 'சாப்பிடுவதற்கு என்ன இருக்கிறது?' என்று கேட்பார். நீராகாரமும் நீர் வடுவும் நிச்சயம் இருக்கும்: சிலசமயம் பட்சணமும் பழமும் கொடுப்போம். வயிறு நிம்மதியானதும்; 'குழந்தைகள் தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம். திண்ணைக்குப் போவோம்', என்றபடி வெற்றிலை டப்பாவுடன் திண்ணைக்குப் போவார்;- எங்கள் இருவரிடமும் வெற்றிலை, சீவல் ஸ்டாக் நிறைய இருக்கும்.

திண்ணைக்குப் போனதும், கன்யாகுமரியில் பேசியதைத் திரும்பப் பேசுவார்; பாரதியார் பாடல்களோடு சொந்தக் கவிதைகளையும் பாடுவார். நாலு அல்லது ஐந்து மணி ரயிலைப் பிடிக்க வேண்டும் என்று பையைத் தூக்கிக் கொண்டு கிளம்புவார்......இது எங்கள் நட்பின் ஒரு பகுதி......

ஒரு மழையில் வந்த கவிஞர் திருலோகத்திடம், 'எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டேன்.

'மதுரையிலிருந்து......'

'மதுரையிலிருந்து கும்பகோணமா......இந்த மழையில்...உட்காருங்கள்'.

'உட்கார நேரம் இல்லை; மூன்றரை மணி ரயிலைப் பிடிக்க வேண்டும். புறப்படுங்கள்......'

www.padippakam.com



'என்ன, ஏது என்று சொல்லாமல்......'

'நீங்களும் நானும் சிதம்பரம் போகிறோம். மௌனி யிடமிருந்து கதை வாங்கிவர வேண்டும்'.

'இந்தப் பிரளய மழையில் சிதம்பரத்துக்கா?'

'பிரளய கால மழையில் இரண்டு கவிஞர்கள் மௌனியின் கதை தேடிப் போனார்கள் என்று வரலாறு படைப்போமே!' என்றார் கவிஞர், நின்றபடியே.

'திருலோகம், முதலில் உட்காருங்கள். பிறகு வரலாறு படைப்போம். இந்தப் பேய் மழையில் கதை தேடி அலைய வேண்டாம். நாளைக்கு நான் மௌனிக்கு எழுது கிறேன், இரண்டே நாளில் கதை வந்து விடும்'.

'மௌனியின் கதையோடுதான் இந்த ஆண்டு தீபாவளி மலர் வெளிவர வேண்டும்'.

'அது என் பொறுப்பு. எழுதிய கதை வீணாகி விடக் கூடாது என்று மௌனியும் நினைக்கிறார்'—

சிவாஜி ஆசிரியர் விடியலில் திருச்சிக்குப் புறப்பட் டார். கதை கேட்டு மௌனிக்கு எழுதினேன். நான் எதிர் பார்த்தபடி, மறு தபாலில் கதை வந்தது. வழக்கம்போல் அதைத் திருத்தி 'சாவில் பிறந்த சிருஷ்டி' என்று பெயர் சூட்டி, சிவாஜிக்கு அனுப்பினேன். 1954ஆம் ஆண்டு சிவாஜி தீபாவளி மலரில் அக்கதை வெளிவந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சிவாஜி ஆசிரியர் கேட்டுக்கொண் டதற்கு இணங்கி, மௌனியிடம் கதை கேட்டேன். அவரும் உடனே அனுப்பினார். இந்தக் கதையையும் திருத்தம் செய்து 'குடை நிழல்' என்று தலைப்பிட்டு சிவாஜிக்கு அனுப்பினேன். 1959 சிவாஜி தீபாவளி மலரில் இக்கதை இடம்பெற்றது.

1948 முதல் 1959 வரை நான் மௌனியின் நான்கு கதைகளை திருத்தம் செய்திருக்கிறேன். அவருடைய தமிழ்

www.padippakam.com



எனக்குப் பிரமிப்பாகவே இருந்தது. மணிக்கொடியில் அவர் எழுதிய கதைகளின் தமிழும் இப்படித்தான் இருந்ததா? என்றொரு சந்தேகம் எனக்கு. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிரியர் பி. எஸ். ராமையாவிடம் பேச்சுக்கிடையில் இதுபற்றிக் கேட்டேன். 'ஒருமாதிரியாகத்தான் இருக்கும். நாங்கள் திருத்தி வெளியிட்டோம்' என்று கூறினார். ஒரு பெரும் கலைஞனிடம் இப்படி ஒரு பலவீனம் இருந்ததை நினைக்க இப்போதும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அப்பால் ஒரு தடவை மௌனி எங்கள் வீட்டுக்கு வந்தார். இருவரும் பேசியபடி ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்தோம். தம்மிடம் ஒரு கதைக்கான கரு இருப்பதாய்க் கூறிய மௌனி கதையைச் சொல்லத் தொடங்கினார். மிகவும் அழகாய்ச் சொன்னார். கதை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது.

'மேலே சொல்லாதீர்கள், கதையை நானே எழுதிவிடுவேன்போல் இருக்கிறது.

'எழுது. நானும் எழுதுகிறேன்', என்றார் அவர். மௌனி கொடுத்த கருவிலிருந்துதான் 'கருகாத மொட்டு' என்னும் என் கதை பிறந்தது. அது 'கல்கி'யில் வெளி வந்தது. மௌனி அதே பீஜத்தைக் கொண்டு 'பிரக்ஞை வெளியில்' என்னும் கதையை எழுதினார்; அது 1960இல் சரஸ்வதியில் வந்தது.

பிறகு, பல ஆண்டுகள் வரை நான் அவரைச் சந்திக்க வில்லை.

* * *

1973ஆம் ஆண்டு, ஐந்து எழுத்தாளர்கள் என்னிடம் ஒரு நீண்ட பேட்டி எடுத்தார்கள். அது கண்ணதாசன் செப்டம்பர் இதழில் வெளிவந்தது. அந்த பேட்டியில் மௌனியின் சிறுகதைகள் பற்றின என் கருத்தைக்



படிப்பகம்

www.padippakam.com



கூறாமல், எழுத்தாளர் என்ற முறையில் அவரிடம் கண்ட பலவீனங்களை மட்டும் சொல்லிவைத்தேன்.

கண்ணதாசனின் பேட்டி வெளியாகும் முன்பே, மௌனியை இரண்டு மூன்று முறை சந்தித்திருந்தேன். சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகத்தார் என் நாவல்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருந்தார்கள்; அவர்கள் தான் மௌனியின் புதிய முகவரி கொடுத்தார்கள். தனியாகவும், நண்பர்கள் சிலரோடும் அவரை நான் சந்திப்பது வழக்கம்.

கண்ணதாசனின் பேட்டி அச்சான பிறகு, மௌனி பற்றி பேசியிருக்க வேண்டாமோ என்று தோன்றியது. அவருக்கு வாழ்க்கையில் பல அல்லல்கள், சித்தத்தைக் குழப்பும் பல துயர நிகழ்ச்சிகள். நானும் பல துன்பங் களோடு வாழ்ந்தவன். அவருடைய மனத்தைப் புண்படுத்திவிட்டோமே என்று வருத்தமாக இருந்தது. ஆயினும், எய்தான பிறகு அம்பை மீட்டுக் கொள்வது எப்படி?

பேட்டியைப் படித்த மௌனியின் ரசிகர்கள் சிலர் வாய்ப்பு கிடைத்தபோது என்னைத் தாக்கி எழுதி வந்தார்கள். நான் யாருக்கும் பதில் கூறவில்லை.

ஆனால், என் பேட்டி வெளியான பிறகு, சில நண்பர்களோடு அவரைச் சில தடவை சந்தித்தேன். பேட்டியைக் கண்டுகொண்டதாகவே அவர் காட்டிக் கொள்ளவில்லை. நானும் அதுபற்றிப் பேசவில்லை. பிறகு, இந்த விஷயத்தை மறந்துபோனேன்.

ஒருமுறை ஏதோ வேலையாக, சென்னை சென்றேன். ஒருநாள் மாலை, திருவல்லிக்கேணி ஃபெல்ஸ் ரோடில் நண்பர் அசோகமித்திரனைக் கண்டேன். இருவரும் பேசிக்கொண்டே அருகில் இருந்த 'முரளி கபே'க்குப் போனோம். பேச்சுக்கு இடையில் அசோகமித்திரன்,

www.padippakam.com



'மௌனி உங்களுக்குப் பதில் சொன்னாரே, படித்திர் களா?' என்று கேட்டார்.

'மௌனி எனக்குப் பதிலா? எதுக்கு?'— என்றேன் விளங்காமல்.

'உங்களுடைய கண்ணதாசன் பேட்டிக்கு, கணையாழி யில் வந்தது. 3 மாதம் ஆயிற்றே'.

'கணையாழியை என் நண்பர் வீட்டில் படிப்பது வழக்கம். மௌனியின் பதிலை நான் பார்க்கவில்லை. நீங்கள் எனக்கு காபி அனுப்பி இருக்கலாம். நான் அதைப்பார்க்க வேண்டுமே', என்றேன்.

அப்போது கணையாழியின் ஆசிரியர் அசோக மித்திரன். அவரோடு ஆபீஸுக்குப்போய், மௌனியின் பதிலைப் படித்தேன். எனக்கு கோபமூட்டும்படி பேட்டி யின் ஒரு பகுதி இருந்தது; எனக்கு கோபம் வரவில்லை; விசனமாக இருந்தது.

'நீங்கள் இதற்கு பதில் சொல்லப்போகிறீர்களா?' என்று கேட்டார் அசோகமித்திரன்.

'இல்லை. நான் கண்ணதாசன் பேட்டியில் சொன்னது எல்லாம் உண்மை. ஆனால், மௌனி துன்பப்பட்டவர். என்னால் அவருக்கு மேலும் துன்பம் வேண்டாம்.'

'சரியான முடிவு' என்றார் அவர்.

மௌனியின் பேட்டி வெளிவந்த கணையாழி இதழை விலைக்கு கேட்டும் அசோகமித்திரன் கொடுக்க வில்லை. ஆபீஸ் காபி தவிர, விற்பனைக்கு பிரதிகள் இல்லை என்று கூறிவிட்டார். ஆகையால் அந்தப் பேட்டியை இரண்டாம் முறை நிதானமாகப் படிக்கவும் எனக்கு வாய்ப்பு இல்லை.

* * *

படிப்பகம்

www.padippakam.com



சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 1991-டிசம்பர் மாதக் கணையாழியில் மௌனியின் பேட்டி மறு பதிப்பாக (re-print) மீண்டும் வந்துள்ளதைக் காண எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதை இப்போது அமைதியாகப் படிக்க முடிகிறது. பழைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் காட்சிகள் ஆகின்றன. மௌனியும் மறைந்துவிட்டபின் அவர் மனத்தைப் புண்படுத்த நேருமோ என்கிற அச்சம் எனக்கு இல்லை. அவர் உயிரோடு இருந்தபோது, அவருக்குப் பதில் கூறுவதில்லை என்று நான் முடிவு செய்தது சரி; அது சரியான முடிவு என்று நண்பர் அசோகமித்திரன் கருதினார். இப்போது பதில் கூறுவது நியாயமாகும் என்று எண்ணுகிறேன்.

கணையாழி பேட்டியில் மௌனி கூறுகிறார்:

'கண்ணதாசன் (செப்டம்பர்-73) எம். வி. வி. பேட்டியில் என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தவைகளில் சில தவறுகள் நேர்ந்துள்ளன. தேனீயில் வெளிவந்த என் இரண்டு சிறுகதைகள் எந்தச் சூழ்நிலையில் எழுதப் பட்டவை, தரப்பட்டவை என்பதைச் சொல்கிறேன்.

'மனக்கோலம்' (1948) கதையை என் வழக்கப்படி திருப்தியின்றி வெவ்வேறு script ஆக பதினைந்து தடவைக்கு மேல் எழுதிக் கிழித்தும், கடைசியாக நான் பக்கம் பக்கமாக எழுதிப்போட, கரிச்சான்குஞ்சு அருகிலிருந்து வாங்கிக் கொள்ள—மகளின் திருமணம் முடிந்த அன்று நள்ளிரவு ரயிலில் சிதம்பரம் திரும்பியாக வேண்டிய அவசரத்தில் — கரிச்சான்குஞ்சு கதையின் கடைசிப் பக்கத்தை இன்னொரு தடவை படித்து விட்டு வேறு எழுதக் கோரியபோது—'அவ்வளவுதான், அதைத் திருப்பிப் பார்த்தால்—எல்லாமே எனக்குத் திருப்தி தராமல் கிழித்துப் போட்டுவிட்டு வேறு எழுதத் தோன்றி விடும்...நான் ஊருக்குக் கிளம்பியாக வேண்டும்' என்று கிளம்பி விட்டேன்.

www.padippakam.com



எம். வி. வி. தன் பேட்டியில் 'முதல் கதையை நேரில் கொண்டு வந்து தந்தார். 'திருத்திப்போடு என்று சொல்லி விட்டுப் போனார்' என்று கூறியிருப்பதற்காக இதனைக் கூறுகிறேன்......

முதல் தேனீ கதையைக் கரிச்சான்குஞ்சு வாங்கி வந்தார் என்று மௌனி கூறுவது சரி; அவர் நேரில் கொண்டு வந்து கொடுத்தார் என்று நான் 'கண்ணதாசன்' பேட்டியில் சொன்னது சரியல்ல. கரிச்சான்குஞ்சுவிடம் கேட்டு நான் சரிசெய்து கொண் டேன். ஆனால், முக்கியமான பிரச்சினை அது அல்லவே. மௌனியின் தமிழ் குறைப்பட்டது என்று நான் உரைத்த தற்கு அவர் பதில் கூறவில்லை. மகளின் திருமண வேலை களின் நிர்ப்பந்தத்தால் அவர் அவசரமாக எழுதிக் கொடுத்ததால், அவருடைய தமிழ் பிழைபட்டது என்று அவர் நமக்கு உணர்த்துவதாய் வைத்துக் கொள்வோம். தேனீயில் அவர் எழுதிய இரண்டாவது கதை பற்றி அவர் கூறுவதைப் பார்ப்போம்.

மௌனி கூறுகிறார் :

'இரண்டாவது சிறுகதையை நான் தேனீக்குத் தந்த கதை இது: அப்போது க. நா. சு. பொறுப்பேற்று நடத்திய 'சந்திரோதயம்' பத்திரிகையின் ஆண்டு மலர் கொண்டுவரப் போவதால் என் கதை வேண்டுமெனக் கேட்க நான் எழுதிக் கொடுத்த கதை: 'நினைவுச்சுவடு' (1948)- சந்திரோதயத்தில் அப்போது உதவி ஆசிரியராக சி. சு. செல்லப்பாவும், ஓவியராக சாரதியும் இருந்தார் கள். 'சந்திரோதயம்' மலர் வெளியீடு முன்பே நின்று விட்டது. அச்சமயத்தில் எம். வி. வி. 'தேனீ' பத்திரி கைக்கு என் கதை அவசியம் தேவை என்று கேட்க, நான் க. நா. சு. விடம் வெளியிடாமல் வைக்கப்பட்டிருக்கும் என் கதையைக் கேட்டு பெற்றுக் கொள்ளச் சொன்னேன். க. நா. சு. அந்தக் கதைத் தாள்களை கறையான் அரித்து விட்டதாகக் கூறியதால், மறுபடியும்

படிப்பகம்

www.padippakam.com



எம். வி. வி. என்னை வந்து துளைத்தார். நினைவுச்சுவடு கதையைத் திருப்தியின்றி மாற்றி மாற்றி எழுதிய கடைசி versionக்கு முந்திய பிரதி தற் செயலாக அகப்பட, அதை அவருக்குக் கொடுத்தேன். அதுவே 'தேனீ'யில் வெளிவந்த எனது இரண்டாவது சிறு கதை......'

தேனீயில் வந்த இரண்டாவது கதையின் கதையை இவ்வாறு கூறுகிறார் மௌனி. '......கடைசி versionக்கு முந்தியபிரதியை' என்னிடம் கொடுத்ததாய் சொல்கிறார். ஆகையால், அது 'சரியான' தமிழில் இருக்காது என்கிற தொனி அவர் கூற்றில் இருக்கிறது. அவர் எந்தப் பிரதி கொடுத்திருந்தாலும் சரி, அது எந்தவித இலக்கண அமைதியும் இல்லாதது என்றுதான் நான் கண்ணதாசன் பேட்டியில் குறிப்பிட்டேன்.

ஆக, 'தேனீ'யில் வெளிவந்த இரண்டு சிறுகதைகளின் தமிழ் பிழையானதே என்று மௌனி நேராக ஒப்புக் கொள்ளா விட்டாலும் மறைமுகமாக ஏற்றுக் கொண்ட தாகவே நான் கருதுகிறேன். தன்னால் பிழையற்ற தமிழில் எழுத முடியும் என்று அவர் சொல்லவே இல்லை.

மௌனி கணையாழி பேட்டியில் மேலும் கூறுகிறார்:

'நான் கதை எழுதுவது என்பதே நாள் கணக்கில் ஏற்படுகிற சிரமமான விஷயமாக இருக்க, 'கதை எழுதி வைத்திருந்து விகடனுக்கும் குமுதத்துக்கும் அனுப்பி திரும்ப வந்து விட்டது' என்று நான் வருத்தப் பட்டதாக (!) எம். வி. வி. தன் பேட்டியில் கூறியிருப்பது உண்மை இல்லாத விஷயம்.'

அவருடைய பேட்டியின் இந்தப் பகுதிதான் என் மனத்தைப் புண்படுத்தியது; அவர்மீது சிறிது கோபமும் உண்டாக்கியது. ஆனால், அவரிடம் எனக்குள்ள மரியாதை காரணமாக நான் அவருக்கு அப்போது பதில் கூற விரும்பவில்லை.

அந்தப் பேட்டியின் தொடக்கத்திலேயே மௌனி '...ஆனந்தவிகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளுக்கு உயரிய கதை எழுதி அனுப்பி திரும்பப் பெற்றால் எந்த மனோபாவம் கொள்ள வேண்டும்— psychological mistake என்று சொல்லக் கூடிய— தரமற்ற பத்திரிகைகள் அவை என்று தூற்றுவது rational ஆகுமா? ஆனால், இவன் இந்த முடிவிற்கு இந்தக் காரணம் முன்னிட்டுக் கொள்வது logical? தற்போது அநேக குழுவினரையும்... ஒரு reaction விளைவாகத்தான் காண முடிகிறது' என்று கூறியிருப்பதை வைத்தே நாம் உண்மையை ஊகிக்கலாம்.

தேனீயில் வெளிவந்த தன் இரண்டு கதைகளின் கதையை ஓரளவு விஸ்தாரமாக எழுதிய மௌனி, சிவாஜியில் ஐந்தாண்டு இடைவெளியில் (1954லிலும் 1959லிலும்) வெளியான தன் இரண்டு கதைகளைப் பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை. ஏன் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியும்: எம். வி. வி. க்கு அவர் கதைகளை அனுப்பியதையும் எம். வி. வி. அவற்றை திருத்தம் செய்து சிவாஜி வார ஏட்டில் பிரசுரமாக உதவி யதையும் பற்றி மௌனி பேச விரும்பவில்லை. மௌனி சிவாஜி ஆசிரியர் கவிஞர் திருலோக சீதாராமை அதுவரை சந்தித்ததே இல்லை!

கண்ணதாசன் பேட்டியில் நான், 'மௌனியின் கதை யில் ஒருவாக்கியமும் இலக்கண சுத்தமாக இல்லை. அவருக்குக் கைவந்த கதை வடிவம் கெடாமல் அதைத் திருத்த எனக்குச் சில நாட்கள் ஆயின', என்று குறை கூறியிருந்தேன். கணையாழி பேட்டியினால் அவர் தனக்கு இலக்கண சுத்தமாக எழுதத் தெரியும் என்பதை நிலை நாட்டவில்லை. மாறாக, என் கருத்துக்கு வலுக்கொடுப்ப தாகவே அவருடைய பேட்டி அமைந்துள்ளது.

மௌனியின் பேட்டியில் என்னைப்பற்றி அவர் கூறியுள்ள மற்ற விவரங்களுக்கு நான் பதில் கூறத் தேவையில்லை.

* * *

www.padippakam.com



1936இல் மௌனியின் சிறுகதைகள் வெளியான போது அவை என்னுள் வலிய கிளர்ச்சியை உண்டாக்கின. புதுமையான காதல் கதைகளாகவே அவை என்னைக் கவர்ந்தன—அப்போது நான் கல்லூரி மாணவன். ஆனால், புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, கு. ப. ரா., ராமையா முதலியவர்கள் மௌனியின் கதைகளில் வடிவம், மொழி, நடை, உத்தி முதலியவற்றை ரசித்தே அவரைப் பாராட்டினர். மணிக்கொடியில்தான் அவருடைய பெரும்பாலான கதைகள் வந்துள்ளன. முழுமையாக உருவான ஒரு பொருளாகவே (finished product) நான் அப்போது அவருடைய கதைகளைக் கண்டேன். ஆனால், ஆசிரியர். ராமையாவும், துணை ஆசிரியர் கி. ரா. வும் மௌனியின் கைப்பிரதிகளைப் பார்த்திருப்பார்கள். அவர்கள் அவருடைய இலக்கண மற்ற தமிழைப் பற்றி ஒன்றும் சொல்லாதது ஏன்? ராமையாவுடன் நெருங்கி இருந்த புதுமைப்பித்தன் முதலியவர்களும் ஏதும் பேசாதது ஏன்? 'மௌனி'யின் தமிழ் ஒருமாதிரி இருக்கும்; திருத்திப்போடுவோம்', என்று ராமையா அலட்சியமாக என்னிடம் கூறினாலும், அவர் அதைப்பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. மணிக்கொடிக்கு வந்து மௌனியின் கதைகள் அதிகம் பிழைபடாததாக இருந்திருக்குமோ? என் பார்வைக்கு வந்த நாலு கைப்பிரதிகளும் ஏதோ மனக்குழப்பத்தில் எழுதப்பட்டிருக்குமோ? கணையாழிப் பேட்டியில்கூட அவர் தன்னால் பிழையற்ற தமிழ் எழுத முடியும் என்று ஓங்கிச் சொல்லவில்லையே!

இலக்கியப் படைப்பாளிகளுக்கு மொழிப்புலமையோ, இலக்கண அறிவோ கட்டாயத் தேவை என்று நான் கூறவில்லை; பேச்சு வழக்குக் கொச்சை மொழியும் இலக்கியம் ஆகும்—படைப்பாளியின் கையில். நான் கண்ட மௌனியின் தமிழ் இந்த விதிகளுக்கும் அப்பாற்பட்டது. மற்றொருவரால் திருத்தப்பட்டால்

www.padippakam.com



தான் விளங்கும். வாசகர்களுக்கு கிடைப்பது தட்டிக் கொட்டி ஒழுங்கு செய்யப்பட்ட பொருள்தானே!

மௌனியை 'சிறுகதையின் திருமூலர்' என்று புதுமைப்பித்தன் ஏதோ வேகத்தில், குறிப்பிட்டுவிட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது. 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்று அடக்கமானவர் திருமூலர். தமிழால் எந்த ஆழத்துக்கும் செல்ல முடியும், எந்த உயரத்துக்கும் ஏற முடியும் என்பதைச் செய்துகாட்டியவர். தமிழ் மொழியை எவ்வளவு அழகாய்க் கையாள முடியும் என்பதை இன்றைய எழுத்தாளர்களுக்கும் உணர்த்தும் வழிகாட்டி. பிழையின்றி தமிழ் எழுத முடியாத ஒருவரைத் திருமூலரோடு ஒப்பிட்டுப் பேசுவது பொருத்த மற்றது. 'திருமூலரோடு என்னை ஒப்பிட்டு புதுமைப் பித்தன் ஏன் பேசினார் என்று அவரையே கேட்க வேண்டும்' என்று மௌனியே கூறுகிறார்.

அதே புதுமைப்பித்தன் மற்றொரு சமயம், 'தமிழில் வந்துள்ள சிறுகதைகளில் பத்து நல்லவற்றைத் தேர்ந்து எடுக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டால், என் சிறுகதைகளில் பத்தைப் பொறுக்கித் தருவதைத் தவிர வேறு வழி இல்லை'—என்று உரைத்ததாய் ச. பொதிய வெற்பன் எழுதிய 'புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாறு' கூறுகிறது. மௌனியை அவர் ஏன் மறந்தார்?

'கம்பனை ரசிக்கிறவர்கள் மௌனியையும் ரசித்துப் பாராட்ட வேண்டும்', என்று க' நா. சு. மொழிந்ததும் மிகமிகை. இதிகாசத்தை மகாகாவியமாகப் படைத்த மகாகவியைச் சில சிறுகதைகள் எழுதியவரோடு ஒப்பிட்டுப் பேசுவது அபத்தம். ஆர்வமிகுதியால் இவ்வாறு பேசுவது—சரியான விமரிசனக் கண்ணோட்டமும் ஆகாது.

மனம் சுதந்திரமாக இயங்கும் தன்மை வாய்ந்தது. கலைஞனின் மனம் தன் போக்கில் சஞ்சாரம் செய்யும்

www.padippakam.com



போது, எண்ணத்தின் எல்லையையும் கடந்து, பலவித கற்பனைகளையும், படிமங்களையும், பாவனைகளையும், உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் கைப்பற்றுகிறது. இந்த அனுபவத்தை அப்படியே எழுத்தோவியமாக்க வந்த மொழிக்கும் வல்லமை கிடையாது. தான் பெற்ற அனுபவத்தை வாசகரிடம் தூண்டிவிடும் ஒரு கருவியாக மொழி கலைஞனுக்குப் பயன்படுகிறது. வாக்குக்கு எட்டாத இறைவனை வாக்குப்படுத்தி வெற்றி கண்டவர் திருமூலர். இறைமையையும் அளக்கும் வலிமை வாய்ந்தது தமிழ்மொழி என்பதை அறிந்திருந்ததால் அவர், 'தமிழ் செய்யுமாறு' ஆண்டவன் தன்னை 'நன்றாகப் படைத்தான்' என்று அறிக்கையிடுகிறார். ஆனால், தமிழ் தெரியாத மௌனி 'தமிழ்மொழி கலை வெளியீட்டுக்கு இப்போதுள்ள நிலையில் செயல்பட முடியாது' என்றும், 'என் மூளை எழுதிப்பார்க்கும் சில அபூத impression களை express செய்ய மிகவும் சிரமமாக இருக்கிறது' என்றும் கூறி தன் பலவீனத்தைத் தமிழின் பலவீனமாய்க் காட்டுகிறார்.

தமிழ் பல துறைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பது உண்மை; ஆனால், மௌனி சொல்லியுள்ள பொருளில் அல்ல.

இவை எல்லாம் என் கருத்துகள்; மற்ற சிலருக்கும் எனக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள். இவை ஒருபுறம் இருக்க, நான் இன்னும் மௌனியின் ரசிகன்; அவருடைய சிறு கதைகளை தன்னிறைவோடு படிக்கிற வாசகன், தமிழின் புதிய இலக்கியத்தில் அவருக்குச் சிறப்பான இடம் உண்டு என்றும் நம்புகிறேன். ஆனால், அவருக்கு 'ஒப்பாரும் மிக்காரும்' இல்லை என்று பண்டைப் புலவர் களின் பாணியில் அவரைப் போற்ற நான் விரும்பவில்லை. அவ்வாறு செய்வது, அவரோடும், அவருக்குப் பிறகும் எழுதிய/எழுதுகிற சிறந்த சிறுகதைப் படைப்பாளிகளுக்கு அநியாயம் செய்வதாகும்.

* * *

படிப்பகம்

www.padippakam.com



சென்னையில் மௌனியின் கணையாழிப் பேட்டியை படித்த பிறகும் நான் தனியாகவோ, அல்லது சில நண்பர்களுடனோ அவரை அவ்வப்போது சந்தித்துக் கொண்டு இருந்தேன். கண்ணதாசன் பேட்டியைப் படித்ததாய் அவர் காட்டிக் கொள்ளவில்லை. கணையாழி பேட்டியை பார்த்ததாய் நான் காட்டிக் கொள்ளவில்லை. எங்களுக்கு இடையில் வழக்கம்போல் சௌஜன்யமான நட்பு நிலவியது.

ஒருமுறை தஞ்சை பிரகாஷ் உள்பட நாங்கள் ஐந்து பேர் மௌனியைச் சந்தித்தோம். வழக்கம்போல் அவர் எங்களை அன்போடு வரவேற்றாலும், அவர் யாரையும் எதிர்பார்க்கவில்லை போலும்; அவருடைய முகத்தில் சோகம் பட்டையாக அப்பிவிட்டாற்போல் இருந்தது. அது என் வெறும் பிரமையாக இருக்கலாம். சுமார் நாற்பது ஆண்டுக் காலமாக நாங்கள் பழகுகிறோம். என்னை அவர் ரொம்ப சின்ன பையன் என்றார்; அவரை நான் இளைஞராய்க் கண்டேன். இப்போது நிலைமை மாறி விட்டது. என் தலைமுடி நரைத்துப் பின்னடைய, என் நெற்றி விசாலமாகி வந்தது; இன்னும் ஆங்காங்கு கருமுடி இருந்தது. அவருடைய தலைமுடி முற்றிலும் வெள்ளையானாலும் அடர்த்தியாக, கையால் ஒழுங்கு செய்யப்பட்டாற் போலிருந்தது. என் கண்கள் ஓரளவு பலவீனப்பட்டாலும், பார்வை மங்கவில்லை. அவருடைய கண்கள் பார்வையைக் குறைத்து விட்டன; எங்களைப் பார்க்கையில், வெறுமையைப் பார்ப்பவர் போலத் தோன்றியது. உதடுகளின் இருபுறமும் கோடுபோட்டாற் போல மடிப்பு விழுந்திருந்தது. எனக்கு ஒருவகைத் துன்பம் என்றால், அவருக்கு வேறுவகைத் துன்பம்; அது எங்களை முதுமைக்குத் தள்ளிக் கொண்டிருந்தது.

'நேற்று ஜெயகாந்தன் வந்திருந்தார். அவருடைய கதை ஒன்று படித்தேன். இவர்கள் எல்லாம் என்ன எழுதுகிறார்களோ', என்ற மௌனி ஜெயகாந்தன்

படிப்பகம்

www.padippakam.com



கதையின் முதல் இரண்டு வாக்கியங்களைக் கூறினார்: 'the second sentence cancels the first sentence'.

'அவருடைய இந்தக் கதை பிரபலமானது' என்றார் பிரகாஷ்.

'இப்படி எழுதுவதால் பிரபலம் ஆகலாம் போல', என்ற மௌனி வீட்டுக்கு உள்பக்கம் பார்த்து யாருக்கோ குரல் கொடுத்தார்; எல்லோருக்கும் காபி கொண்டு வரும் படி கட்டளை இட்டார்.

'இங்கே வரும்போது சாப்பிட்டு வந்தோம், சார்' என்றேன்.

'அதனால் என்ன;' என்றார் அவர்.

அதற்கு முன்னால் அவர் வீட்டில் காப்பி சாப்பிட்டி ராத எனக்கு இந்தப் புதிய உபசாரம் சற்று வினோதமாக பட்டது.

சிறிது நேரத்தில் ஓர் இளைஞன் ஒரு டிரேயில் டபரா-டம்ப்ளர் காப்பியை ஜாக்கிரதையாகக் எடுத்து வந்தான்.

'எம். ஏ. லிடரேசர் பண்ணின பையன் இந்த வேலை செய்யறான்', என்றார் மௌனி. அவர் தொடர்ந்து ஒன்றும் கூறவில்லை. நானும் கேட்கவில்லை. எவ்வளவு நெருங்கிய நண்பர்களானாலும், அவர்களுடைய தனிப் பட்ட/குடும்ப அல்லல்கள் பற்றித் நானாக ஏதும் கேட்ப தில்லை. அவர்களே சொன்னால் கேட்டுக் கொள்வது என் பழக்கம்.

மேஜை மீது காப்பி டிரேயை வைத்த வாலிபனிடம், 'சாப்பிட்டானதும் எல்லாம் எடுத்துக் கொண்டு போக வேணும்', என்றார் மௌனி.

சாப்பிட்டானதும் டபார—டம்ப்ளர்களை டிரேயில் வைத்து எடுத்துப் போனான் இளைஞன்.

படிப்பகம்

www.padippakam.com



பிறகு கொஞ்சநேரம் ஏதோ பேசினோம். இடையில் மேஜை டிராயரைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு எனக்கு அருகில் வந்தார் மௌனி. அது அமெரிக்காவிலிருந்து வந்த கடிதம்; அதன் தலைப்பு நுனிகள் இரண்டையும் விரல்களால் கெட்டியாகப் பிடித்தபடி கடிதத்தை என்னிடம் காட்டி, 'இதைப்படி' என்றார் அவர்.

'கடிதத்தை என்னிடம் கொடுங்கள், சார், படிக்க சுலபமாக இருக்கும்', என்றேன்.

அவர் கொடுக்கவில்லை. 'இப்படியே படி', என்றார்.

'கடிதத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட மாட்டேன். இங்கே கொடுங்கள்......' என்று சிரித்தேன்.

அவர் கடிதத்தை தன் கையிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை: 'சும்மா இப்படியே படி, வெங்கட்ராம்!'

அமெரிக்காவிலிருந்து ஆல்பர்ட் ஃபிராங்களின் எழுதிய கடிதம் அது. தமிழில் தேர்ச்சி பெற்ற அந்த அமெரிக்கர் மௌனியின் சிறு கதைகளின்பால் பெரு மோகம் கொண்டார். மௌனியின் இரண்டு சிறுகதைகளை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 'கருமேகங்களுக்கு இடையில் ஒரு மின்னல்' என்று மௌனியை அமெரிக்க வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்; இரண்டு கதைகளும் நியூயார்க்கர் என்னும் அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாயின. தன் உத்தியோகத்துக்கு ஒரு வருடம் சம்பளம் இல்லாத லீவ் போட்டு விட்டு, மௌனியின் மற்ற சிறுகதைகள் அனைத்தையும் மொழி பெயர்க்கப் போவதாய் ஆல்பர்ட் ஃப்ராங்ளின் கூறியிருந்தார். இந்தத் தகவல்களை மௌனியும், க. நா. சு.வும் என்னிடம் கூறியிருந்தார்கள்.

அந்த அமெரிக்கர் எழுதிய கடிதத்தைத்தான் என் கண்களுக்கு முன்னால் காட்டிப் படிக்கும்படி சொன்னார்

www.padippakam.com



மௌனி. அவருடைய ஒரு கதையை மீண்டும் படித்ததாக வும், அது இந்தியத் தத்துவத்தை நுட்பமாகவும், அழகாக வும் பிரதிபலிப்பதாயும் ஃப்ராங்களின் பாராட்டி எழுதி யிருந்தார். நானும் பிரகாஷூம் படித்தானதும், கடிதத்தை ஜாக்கிரதையாக மேஜை டிராயரில் வைத்து விட்டு மௌனி உட்கார்ந்தார்.

'வெங்கட்ராம், அந்தக் கதையில் ஃபிராங்க்ளின் சொல்லும் அர்த்தம் வருகிறதா?' என்று கேட்டார்.

கேள்வியை எதிர்பாராத நான் பதில் கூறத் தயங்கினேன். அது மௌனியின் எந்தக் கதை என்று இப்போது நினைவில்லை. அப்போது கதை நினைவில் இருந்தது. அது எந்த இந்தியத் தத்துவத்தையும் பிரதிபலிப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. நான் பதில் சொல்வதற்குள், மௌனி, 'அந்த அர்த்தம் வருகிறதா?' என்று பலமுறை கேட்டுவிட்டார், ஆவலுடன்.

'எனக்கு அப்படி தோன்றவில்லை...' என்றேன் தயக்கத்துடன்.

'அப்படி அர்த்தம் ஆவதாய் ஃபிராங்க்ளின் சொல்கிறானே!'

'அது உங்கள் எழுத்தின் சிறப்பு, சார், உங்கள் எழுத்தின் பெருமை. விதவிதமான அர்த்தம் கொள்ளும் படி இருப்பதுதான் உயர்ந்த இலக்கியத்துக்கு லட்சணம்; இல்லையா சார்?' என்றேன்.

அந்த சோகத்தின் முகத்தில் ஒரு புன்சிரிப்பு உதித்தது. அதைக்காண எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

அப்பால், எத்தனை நாட்களோ, மாதங்களோ, வருடங்களோ! எதுவும் எனக்கு நினைவாகவில்லை. சிதம்பரம் கோயிலின் மேற்கு வாசலில் உள்ள

www.padippakam.com



மணிவாசகர் பதிப்பகத்தில் ஒரு மாலை நேரம் உட்கார்ந்திருந்தேன். இருட்டுவதற்கு முன்பு ஊருக்குப் புறப்பட வேண்டும் என்று பரபரத்துக்கொண்டிருந்தேன்.

தற்செயலாக, என் கவனம் தெருப்பக்கம் சென்றது. மௌனி கோயிலின் மேற்கு வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தார். யாரோ ஒருவர் அவருடைய இடது கையைப் பற்றி வழிநடத்திக் கொண்டிருந்தார். மௌனியோடு பேசுவதா வேண்டாமா என்று ஒரு நொடி தயங்கினேன்.

சிதம்பரத்துக்கு நான் வருவதே, ஆறு மாதத்திற்கு ஒருமுறை, ஓராண்டுக்கு ஒருமுறை என்றாகிவிட்டது. ஆகையால், அவரோடு சிறிதுபேசலாம் என்று எண்ணி அவரை நோக்கி விரைந்தேன்.

'சார், வெங்கட்ராம் வந்திருக்கிறேன்' — என்று அவரை நெருங்கும்போதே குரல் கொடுத்தேன். அவர் நின்றார்.

'என்னப்பா ஆளையே காணோம்?'

'சிதம்பரத்துக்கு வருகிற வேலை அதிகமில்லை... நல்லபடி இருக்கிறீர்களா சார்!'

'இருக்கிறேன். கண் சரியாகத் தெரியவில்லை. துணை இல்லாமல் வெளியே புறப்பட முடியவில்லை......'

அதே வெள்ளை முடி அலங்காரம். கருப்புக் கண்ணாடி அணிந்து, கைத்தடி வைத்திருந்தார் என்று ஞாபகம். மிகவும் இளைத்திருந்தார். பித்தான்கள் சரியாக போடப்படாத—அரைக்கைச்சட்டை; மேல் துண்டை இடுப்பில் கட்டியிருந்தார். நெற்றியில் திருநீற்றுப்பூச்சு. வயோதிகத்துக்கு உதாரணமான சிலையைச் செதுக்கப் பொருத்தமான உருவம்.

'கோயில்—புதிய பழக்கமாக இருக்கிறதே?'

படிப்பகம்

www.padippakam.com



விமோசனத்துக்கு வேறே வழி? பெரும்பாலும் தினம் வருகிறேன்... உள்ளே வருகிறாயா?'

'இல்லை சார், ஊருக்குக் கிளம்புகிறேன்'.

'மறுபடியும் எப்போது வருவாய்?'

'சொல்லமுடியாது. சிதம்பரம் வந்தால், உங்களைப் பார்க்கிறேன் சார்'.

'கட்டாயம் வா.'

'வருகிறேன்.'

நான் பார்க்கையிலேயே, மௌனி ஆடலரசன் ஆலயத்துக்குள் நுழைந்தார்.

* * *

(ஆல்பர்ட் ஃபிராங்க்ளின் என்னும் அமெரிக்கர் மௌனியின் மற்ற சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவில்லை; வாசகர்கள் ஊக்கத்தோடு மௌனியின் இரண்டு கதைகளை வரவேற்காததால் 'நியூயார்க்கர்' தொடர்ந்து வெளியிட மறுத்துவிடவே ஃபிராங்க்ளின் மொழிபெயர்ப்பைக் கைவிட்டார். இந்த தகவலை என்னிடம் கூறியவர் க. நா. சு. இந்த தகவல் சரியானதா என்று எனக்குத் தெரியாது).

படிப்பகம்

www.padippakam.com

# முணுமுணுத்தலும் அலைதலும்

ஒரு கேள்வி என்னிடம் அவ்வப்போது கேட்கப்படு கிறது. 'நீங்கள் எழுத்துத் துறைக்கு வரநேர்ந்தது எப்படி?'

இப்படி என்னைக் கேட்கிறவர்கள் எல்லாரும், மணிக் கொடி எழுத்தாளர்களில் எஞ்சியுள்ள சிலருள் ஒருவ னாகிய என்னைச் சந்தித்துப் பேச வந்தவர்கள்; மகாகவி பாரதியாரின் அடிச்சுவட்டில், தமிழ் இலக்கிய மறுமலர்ச் சிக்கு ராஜபாட்டை வகுத்துக் கொடுத்தது மணிக்கொடி தான் என்று நம்புகிறவர்கள். இப்படி சில பல ஆய்வாளர் கள், ரசிகர்கள், வாசகர்கள் இன்றும் இருக்கிறார்கள்— மணிக்கொடி என்கிற பத்திரிகை மறைந்து ஒரு தலை முறை ஆன பிறகும்.

இந்த என் நண்பர்களுக்கு நான் சொல்ல வேண்டிய நியாயமான பதில்: ஹிந்துவாகிய நான் ஊழை நம்புகிற வன்; பல பிறவிகளில் செய்த தீவினைகளின் பயனாகத் தான் நான் தமிழ் எழுத்தாளனாகப் பிறக்க நேர்ந்தது என்பதே.

இலக்கியப் படைப்பாளிகளைத் தமிழகம் எவ்வளவு நேர்த்தியாகப் போற்றுகிறது! பாரதியார் 'காலணாதாச னாக வாழ்ந்த கதை உலகப் புகழ் பெற்று விட்டது; வணங்காமுடியான புதுமைப்பித்தனை மண்ணில் புரட்டி. 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவரைக் கதற வைத்த பெருமையும்—பிச்சமூர்த்தி, கு. ப. ரா. போன்ற



படிப்பகம்

www.padippakam.com



வர்களை அஞ்சுக்கும் பத்துக்கும் பஞ்சாய்ப் பறக்க வைத்த மகிமையும் இந்த மண்ணுக்கு உண்டு.

வளமாகக் கலைஞன் வாழ்ந்தால், அவனுடைய படைப்பாற்றல் வறுமைப் போகும் என்கிற உண்மையைத் தமிழகம் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளது.

பொருளாதார அந்தஸ்து வேண்டாம். இலக்கியப் படைப்பாளிக்குச் சமூக அந்தஸ்து கூட இங்கே கிடைக்க வில்லையே!

* * *

தமிழில் எழுத வேண்டும் என்ற உள்ளுணர்வு எனக்கு வாய்த்த பிறவித் துன்பம். சிந்தனை செய்யாமலும் எழுதாமலும் என்னால் இருக்க முடியவில்லை. எழுதாத போதும், எழுத முடியாதபோதும், எழுதுவது பற்றிச் சிந்தனை செய்வது எனக்கு இயல்பு. மனித சமுதாயத்தை யும், மனத்தின் சலனங்களையும் ஊடுருவிப் பார்ப் பதையே அகத் தொழிலாய்க் கொண்டதால் என் புற வாழ்க்கை சின்னாபின்னம் ஆயிற்று.

12, 13 வயதிலிருந்தே ஆரணி குப்புசாமி முதலியார், ரங்கராஜு, வடுவூர் துரைசாமி அய்யங்கார் முதலியவர் கள் தழுவலாகவோ சொந்தமாகவோ எழுதிய நாவல் களையும், கலைமகள் முதல் ஆனந்தவிகடன் வரை அக் காலத்தில் இருந்த மிகச் சில மாத, வார ஏடுகளையும் ஆர்வத்துடன் படித்து வந்ததன் பயனாகவே 'நானும் ஏன் எழுதக் கூடாது?' என்கிற அபாயகரமான ஆசை எனக்குள் மூண்டது, இந்த ஆசை தவிர்க்க முடியாத துன்பமாகி எழுதுகிற முயற்சியிலும் ஈடுபட்டேன்.

எஸ். எஸ். எல். சி. அடைவதற்குள் நான் பல்லாயிரம் பக்கங்கள் எழுதிக் குவித்திருப்பேன்—பெரும்பாலும் கதை கள், வசன கவிதைகள். எழுதியதை யாரிடமும் காட்ட மாட்டேன்; ஏற்கப்படா விட்டால் திருப்பி அனுப்புவதற் காக, 'ரகசியமாய்த்' தபால்தலைகள் வைத்து, ஏதாவது

படிப்பகம்

www.padippakam.com



ஒரு பத்திரிகைக்கு அனுப்பி வைப்பேன். சில நாட்களில் பத்திரிகைக்காரர்கள் நாணயமாக அதைத் திருப்பி விடுவார்கள்—'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' என்கிற குறிப்புடன். ஆட்டத்தில் தோற்கத் தோற்க, வென்றாக வேண்டும் என்றொரு வெறி எனக்கு ஏற்பட்டு கொண்டிருந்தது; மேலும் மேலும் எழுதி என் போராட்டத்தைத் தொடர்ந்தேன்.

என் கதையைப் பத்திரிகைக்காரர்கள் ஏன் திருப்புகிறார்கள் என்று நிதானிக்கவே எனக்கு நேரம் இல்லை. பள்ளிப் படிப்பும் இருந்ததே! அங்கும் நல்லபிள்ளை என்று நான் என்னைக் காட்டிக் கொண்டவன். ஒரு கதை திரும்பினால், மற்றொன்று எழுதத் தொடங்குவேன். வயது, அனுபவம், மனப்பக்குவம், இலக்கியப் பயிற்சி—இந்த எல்லா அயிட்டங்களிலும் நான் பிற்பட்டவன். என்னுடைய பெரிய மூலதனம்—அப்போதும்—என் தமிழ் நடை அளவு கடந்து உணர்ச்சிவசப்பட்டு, அலசமாகி, கதைகளில் நாடகத் தன்மையையும் பாத்திரப் படைப்பையும் புகுத்துவது எனக்கு வழக்கம். பெரும்பாலும் காதல் கதைகளும், குடும்பக் கதைகளும் எழுதினேன். நான் மனப் போராட்டங்களுக்கு அதிகமான முக்கியம் கொடுத்ததால்தானோ என்னவோ பத்திரிகைக்காரர்கள் என் எழுத்துக்களை என்னிடமே தூக்கி எறிந்தார்கள்.

கல்லூரியில் அடிவைத்த பிறகுதான் எனக்கு உலக இலக்கியப்போக்கு அறிமுகமாயிற்று. நிறையவே படித்தேன். பெரும்பகுதி சிறுகதை இலக்கியம்—சிறுகதை ஆசிரியர்களாக என்னைக் கவர்ந்தவர்கள் ஆண்டன் செகாவும், மோபசானும். சிறுகதை, நாவல், கட்டுரை முதலியவற்றின் நுணுக்கங்கள் எனக்கு ஓரளவு அத்துபடி ஆகத் தொடங்கின. பள்ளி மாணவனின் அனுபவக்குறை இப்போதும் நீங்கி விடவில்லை—ஆனால் அதன் படபடப்புக்கு ஓர் வடிவம் தரவேண்டும் என்கிற பிரக்ஞை எழுந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தச் சத்தர்ப்பத்தில்தான் எனக்கு மணிக்கொடி அறிமுகம் ஆயிற்று. அப்படி ஒரு பத்திரிகை இருப்பதே அதுவரை எனக்குத் தெரியாது. என்னுடைய ஹிந்தி ஆசிரியர் பி. எம். கிருஷ்ணசாமியின் வீட்டில் மணிக் கொடியை முதல் முதலில் பார்த்தேன். அவர் அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்; பல நல்ல ஹிந்திச் சிறுகதைகளை மணிக்கொடிக்குத் தமிழில் கொடுத்த தோடு, பிச்சமூர்த்தி போன்ற சில ஆசிரியர்களின் கதைகளை ஹிந்திக்கு அறிமுகப்படுத்தினார்—இத்தகவல் களை எல்லாம் அவரிடமிருந்து அப்புறம் தெரிந்து கொண்டேன். அதுமட்டும் அல்ல, அவர் வீட்டுக்கு அடிக்கடி அரட்டை அடிக்கவரும் ஒரு தாடிக்காரரர் ஓர் எழுத்தாளர்—பிச்சமூர்த்தி எனவும், ஒரு நீளமூக்குக்காரரர் கு. ப. ரா. எனவும் அவர் கூறியபோது, பல தேவதைகளை ஏக காலத்தில் காண்பவன் போல சங்கடப்பட்டுப் போனேன்.

பல மணிக்கொடியின் பழைய இதழ்களை அவரிட மிருந்து இரவல் வாங்கிப் படித்தேன்-பிச்சமூர்த்தி, கு. ப. ரா., புதுமைப்பித்தன், சிதம்பர சுப்ரமணியன், சிட்டி, முதலிய எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் படிக்கும் வாய்ப்பு இப்போதுதான் எனக்குக் கிட்டிற்று. நான் படித்த அயல் மொழி சிறுகதை ஆசிரியர்களுக்கு ஈடாகவும், சிறப்பாகவும் இவர்களுடைய எழுத்துக்களின் தரம் இருப்பதைக் கண்டேன். பிச்சமூர்த்தியும், புதுமைப்பித்தனும், கு. ப. ரா.வும் என்னை வலுவாக ஆக்கிரமித்துக் கொண்டனர். அச்சமயம் மௌனியும் கும்பகோணத்திலேயே இருந்தார்; ஆனால், அவர் எழுதத் தொடங்கவில்லை. எழுத்தாளரான பிறகு அவரும் சில சமயம் ஹிந்தி ஆசிரியர் வீட்டுக்கு வருவதுண்டு.

இந்த ஆசிரியர்களின் எழுத்துக்கள் என் எழுத்துப் பித்தை மேலும் தூண்டிவிட்டன. என் கதைகளின் நடை உடைகளை மணிக்கொடி போன்ற ஒரு பத்திரிகைதான்

படிப்பகம்

www.padippakam.com



ஏற்க முடியும் என்கிற அறிவும் வந்தது—மணிக்கொடியில் எழுத வேண்டும் என்னும் வேட்கை என்னுள் எழுந்தது.

'சிட்டுக்குருவி' என்றொரு சிறுகதையை மிகத் தயக்கத்தோடும் சங்கோசத்தோடும் நான் ஹிந்தி ஆசிரியரிடம் கொடுத்தபோது அவருக்கு ஒரே ஆச்சரியம்; 'உனக்கும் இந்தப் பைத்தியம் இருக்கா?' என்று கதையைப் படித்தார். 'பிச்சமூர்த்தியும், கு. ப. ரா.வும் கதையைப் படித்து மணிக்கொடிக்கு அனுப்பலாம் என்றால் அனுப்புவோம்' என்றார். அவர்கள் கதையை விரும்புவார்கள் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், சில நாள்களுக்குப் பிறகு அவர் 'உன் கதை இரண்டு பேருக்கும் பிடித்துவிட்டது, மணிக்கொடியில் பிரசுரிக்கும்படி ராமய்யாவுக்குக் கடிதம் எழுதி, அவர்களே போஸ்டு செய்துவிட்டார்கள்' என்று சொன்னபோது என்னால் நம்பவே முடியவில்லை.

1935, டிசம்பர், 15 தேதியிட்ட மணிக்கொடியில் 'சிட்டுக்குருவி' என்கிற சிறுகதை வெளிவந்தது. மூன்று நான்கு ஆண்டுக் காலமாய் நான் செய்துவந்த தவம் பூர்த்தி ஆயிற்று என்று உற்சாகப்பட்டேன்; தவம் பூர்த்தியாகவில்லை, அப்போதுதான் ஆரம்பமே ஆகியிருந்தது என்பதைப் பின்னர் உணர்ந்தேன்.

கதை வெளிவந்த சிலநாள் கழித்து ஹிந்தி ஆசிரியர் இல்லத்துக்குப் போனபோது, பிச்சமூர்த்தி மட்டும் அங்கு இருந்தார். அவரை நேராக சந்தித்துப் பேசுவது இதுவே முதல்முறை. 'சிட்டுக்குருவி' எழுதிய வெங்கட்ராமன் நீதானே?' என்று கேட்டவர், 'கதை சுமார்தான். அதில் ஒரே ஒரு பாரா நீ நல்ல கலைஞனாவாய் என்று காட்டுகிறது. எழுதுவதை நிறுத்தாதே!' என்றும் ஊக்கினார்.

நான் நிறுத்தவே முடியவில்லை; எழுத்து மலைப் பாம்புபோல கொஞ்சம் கொஞ்சமாக என்னை இன்று வரை விழுங்கிக் கொண்டே இருக்கிறது.

* * *

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மகாகவி பாரதியார்; இன்றைய சூழ்நிலையை வைத்து அவருடைய சாதனையைக் கணிக்க முற்படுவது தவறு. அரை நூற்றாண்டுக்கு முன்பு நாடும் மொழியும் இருந்த நிலையை வரலாறு பூர்வமாகக் கற்பித்துப் பார்க்க முடிந்தால்தான் அவருடைய சாதனையின் சிறப்பை ஓரளவாவது புரிந்து கொள்ள முடியும்.

நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததன் அவலத்தை மிச்சமீதியுள்ள பழைய தலைமுறையினர் கூட மறந்துவிடுகின்றர், விடுதலை பெற்றபின் நாட்டில் நடக்கும் கொடுமைகளை கண்டு, தமிழ் மட்டுமில்லை, நாட்டு மொழிகள் யாவுமே ஆட்சி மொழியான ஆங்கிலத் துக்கு அடுத்த 'இரண்டாவது' மொழிகளாகக் கருதப் பட்டன.

தமிழைப் பொறுத்தவரையில், அது இருபக்கங்களில் இடிபட்டுக் கொண்டிருந்தது. பண்டிதர்கள் இலக்கி யத்தைத் தங்கள் ஏகபோக உடைமையாகக் கருதினார் கள். சாதாரண மக்களுக்கு விளங்கிவிட்டால் இலக்கியம் கொச்சைப்பட்டுப் போகும் என்று நம்பினார்கள்; ஆகையால் தமிழின் பண்டைய இலக்கியங்களுக்கு அவர்கள் எழுதிய உரைகூட அவர்களுக்கு மட்டும் புரியும்படி அமைந்தது. இந்த மனப்பான்மையின் விளைவாக 'இலக்கியம் நமக்கு எட்டாத சங்கதி' என்று மக்கள் தமிழ் இலக்கிய நூல்களைப் பூசைப் பொருள்கள் ஆக்கிவிட்டார்கள். இது ஒருபக்கம்.

ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் முதல் மொழியாகவும் இருந்ததோடு; அதைக் கற்றால்தான் அரசாங்க வேலை கிடைக்கும், பிழைப்பு நடக்கும் என்கிற நிலைமை. ஆங்கிலம் கற்றவர்களோ அந்த மொழியின் இலக்கிய வளத்திற்கு மயங்கினர்; தமிழ் வலுவற்ற ஒரு மொழி

www.padippakam.com



என்று கருதியவர்களாய், தமிழில் பேசுவதைக்கூட இழிவாய் நினைத்திருந்த காலம்.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட பாலகங் காதரத் திலகரைப் போன்ற தலைவர்களால் நாடெங்கும் அரசியல் விழிப்பு ஏற்பட்டபோது, நம்நாட்டு மொழி களின் உயர்வையும் சிறப்பையும் மீட்க வேண்டும் என்ற எண்ணமே வளர்ந்தது. இச்சூழலில்தான் பாரதியாரின் தோற்றமும் மறைவும் நிகழ்ந்தன. பாரதியார் திலகரை அரசியல் குருவாக ஏற்றவர்; விவேகானந்தரின் சிஷ்யை யான நிவேதிதாதேவியார் அவருடைய ஆன்மீகக் குரு, கம்பன், வள்ளுவன், இளங்கோவுடன் இந்நாட்டின் இயற்கையான பண்பாட்டைப் பிரதிபலித்த கவிஞர்கள் எல்லோருமே அவருடைய இலக்கியக் குருமார்கள், திலகர் அஹிம்சாவாதத்தைத் துறவிகளின் கொள்கை என்று ஏளனம் செய்தாலும், காந்திஜீதான் தமக்கு அரசியல் வாரிசு என்றும், நாட்டுத் தலைமையைத் தாங்க வல்லவர் என்றும் கூறிவிட்டு மறைந்தார். காந்தியடிகளின் அரசியல் பிரவேசம் நாட்டு மக்களுக்கு இடையில் அதிசய மான விழிப்பை உண்டாக்கியது. திலகரின் தீர்க்கதர்சன மான கூற்றை முற்றிலும் உணர்ந்த பாரதியார், காந்திஜீ மகாத்மா என்று கண்டுகொண்டு வாழ்த்தவும் செய்தார். ஸ்ரீஅரவிந்தரும், வ. வே. சு. அய்யரும் பாரதி யாருக்கு நண்பர்கள் — அவருடைய கவிதைகளில் அரவிந்தரின் பாதிப்பை நிறையவே காணலாம்.

இவ்வளவு தாக்கங்களுக்கும் மேலே, ஆங்கிலக் கவிகளும் அவருக்கு வழிகாட்டினார்கள். ‘ஷெல்லிதாசன்’ என்றும் சொல்லிக்கொண்டார்.

இந்தப் பாதிப்புகள் யாவும் கூடி அவரை ஒரு கவிஞன் ஆக்கினவா?—என்று கேட்டால், இல்லை. அவர் பிறவிக் கவிஞர். நாடு அப்போதிருந்த சூழ்நிலையில் எதைப் பற்றிப் பாட வேண்டுமோ, எழுத வேண்டுமோ, பேச

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமோ அதைப்பற்றியே பாடவும், எழுதவும், பேசவும் பிறந்தவர் என்றுதான் பதில் கூற முடியும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரதியாரைப் போன்ற கவிகளும், தேச பக்தர்களும், தத்துவ ஞானிகளும் இந்நாடெங்கும் வாழ்ந்திருந்ததை வரலாறு சொல்லும்.

பாரதியார் தமிழ் இலக்கியத்தைப் 'பண்டிதர்களிடமிருந்து மீட்டுக் கொடுத்தார்; இலக்கியம் மக்களுக்காகவே என்று கருதிய அவர் மிக உயர்ந்த எண்ணங்களையும் மிக எளிய நடையில் சொல்ல முடியும் என்று அதைத் தம் கவிதைகளில் செய்தும் காட்டினார். 'எளிய பதங்கள், எளிய நடை...ஓரிரண்டு வருஷத்து நூல் பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைபடாமலும் நடத்துதல் வேண்டும்'—என்கிறார் 'பாஞ்சாலி சபத' முகவுரையில் பாரதியார். பண்டிதர்களின் ராட்சசப் பிடியிலிருந்து தமிழை மீட்டதை—பாரதியார் செய்த பெரிய திருப்பணி எனலாம். பாரதியார் நாட்டின் அரசியல் விடுதலையோடு பொருளாதார விடுதலையையும் வேண்டினார்; சமூகத்தில் நிலவும் அநீதிகளை, செயற்கையான உயர்வு தாழ்வுகளை பெண்ணை அடிமைப்படுத்தும் கொடுமையைச் சாடினார். அறிவியல் வளர்ந்து, தொழில்கள் பெருகி, நாடு லோகாயதமான எல்லா முன்னேற்றங்களையும் பெற வேண்டும் என்று விழைந்தார். நாடு மட்டும் அல்ல, உலகமே 'எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை' என்கிற அமைதியும் அறிவும் பெற்ற சமுதாயம் காண வேண்டும் என்று பேராசைப்பட்டார் — இந்தப் பேராசையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று முத்துமாரி முதல் முருகன் வரை எல்லாக் கடவுள்களையும் அழுதும் தொழுதும் மட்டும் அல்ல, அதட்டியும் பிரார்த்தனை செய்தார். அது மட்டும் அல்ல. மாயையை பழித்து அறிவே தெய்வம் என்று அறிவுறுத்தி, பரசிவ

www.padippakam.com



வெள்ளத்தில் மூழ்கி, 'வானில் பறக்கின்ற புள்ளெலா நான் மண்ணில் தெரியும் விலங்கெலா நான்' எல்லாம் நானே என முரசறைந்து, தான் ஒரு வேதாந்தி என்பதை ஐயமற அறிவித்தார்.

அகத்துறையிலும் புறத்துறையிலும், தாம் கண்ட கனவுகளை மிக எளியவருக்கும் புரியுமாறு மிக எளிய, தெளிவான தமிழில் சொன்னது—பாரதியார் காலத்தில் அது புதுமை. அவர் காட்டிய புதுவழிதான் தமிழ் மறுமலர்ச்சியின் ஆரம்பம்.

* * *

சிறந்த அறிஞர்களான திலகர், விபின்சந்திரபால், காந்தி அடிகள், சித்தரஞ்சன் தாஸ் போன்றவர்கள் அரசியல் தலைவர்களாகவும்' தியாகத்துக்குத் தவிப்பவர்களாகவும் வாழ்ந்து காட்டியதால் மக்களுக்கு நாட்டுப் பற்று மட்டும் அல்ல, தாய்மொழிப் பற்றும் உண்டாயிற்று, இந்த விழிப்பு வங்காளத்தில்தான் தொடங்கியது. அங்கு பங்கிம்சந்திரர், ரமேஷ்சந்திர தத், ரவீந்திரநாத் டாகுர், சரத்சந்திரர் போன்ற கவிஞர்களும் இலக்கியப் படைப்பாளிகளும் தோன்றினர். மராட்டி, குஜராத்தி, ஹிந்தி முதலிய வடநாட்டு மொழிகளில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியின் அளவு, தமிழில் ஏற்படவில்லை. பாரதியார் என்கிற ஒரே ஒரு மகாகவியும், வ. வே. சு. அய்யர், ராஜமய்யர் போன்ற மிகச்சிலரும் தான் தமிழ் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். மற்ற இந்திய மொழிகளில் தோன்றிய அளவு இங்கு மறுமலர்ச்சி இயக்கம் விரிவுறவில்லை. காந்தி அடிகளின் காலத்தில், ஹிந்தியே நாட்டுமொழி என்று இடைவிடாது பிரச்சாரம் செய்ததாலும், மக்கள் பெரும் பாலோர் அவர் கூற்றை வேதவாக்காக ஏற்றதாலும், அந்த மொழிக்குச் சிறப்பான யோகம் அடித்தது. ஹிந்தியில் ஏராளமான மாத, வார, நாளேடுகள்

www.padippakam.com



தோன்றின: கவிஞர்களும் எழுத்தாளர்களும் பலர் தோன்றினர். காந்தி அடிகள் 1917இல், ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி இந்திய அரசியலில் மெல்லத்தான் புகுந்தார். 1921இல் பாரதியார் காலமானார். வ. வே. சு. வோ குருகுலச் சிக்கலில் மாட்டிக் கொண்டு அதிலிருந்து மீளுமுன்பே அருவியில் மறைந்தார். இவ்விருவரின் மறைவோடு தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் ஸ்தம்பித்து விட்டாற் போன்ற ஒரு நிலைமை உருவாயிற்று.

பாரதியாரின் காலத்திலேயே அவருக்குரிய மரியாதை செலுத்த ராஜாஜீ போன்ற தீர்க்கதரிசிகள் தவறிவிட்டார்கள் என்று வ. ரா. பொருமியதில் நியாயம் உண்டு, பாரதியாருக்குப் பிறகும். அவருடைய ஆவேசக் கவிதைகளை மக்களுக்கு எட்டுமாறு செய்ய வேண்டும் என்கிற சிரத்தை அரசியல் அறிஞர்களுக்கு உண்டாகவில்லை, காங்கிரஸ் கூட்டங்களில் 'பிரார்த்தனை'ப் பாடலாகப் பாரதியாரின் கவிதைகளைக் காங்கிரஸ் தொண்டர்கள் பாடினார்கள் என்பது சரிதான். (பாரதியார் கவிதைகளை ந. பிச்சமூர்த்தி காங்கிரஸ் கூட்டங்களில் பாடுவதைக் கேட்டிருக்கிறேன்; இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது). ஆனால், ரசிகமணி ராஜாஜீ - கல்கி போன்றவர்கள் கம்பராமாயணத்துக்கும், குறுந்தொகைக்கும், தனிப்பாடல்கள் பலவற்றுக்கும் தேர்ந்த பிரசாரகர்களாகத் திகழ்ந்ததால் தமிழின் பண்டைச் சிறப்பு மக்களுக்கு எட்டியது: ஆனால் இவர்கள் யாருமே பாரதியாரைப் பாராட்டிப் பேசவில்லை. பாரதியாரின் கவிதைகளில் இலக்கணப் பிழைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருந்த வித்வான்களும் இருந்தார்கள்.

பாரதியாருடன் பழகியவர்; அவர் கண்ட கனவுகளை அருகிலிருந்து அறிந்தவர்—வ. ரா. பாரதியாருக்கு—சமூக, சமய, அரசியல், பொருளாதார அநீதிகளின் மேல் எத்தனை ஆத்திரமும், ஆக்ரோஷமும் இருந்தனவோ

www.padippakam.com



அத்தனையும் வ. ரா. விடமும் இருந்தன. இக்கருத்தளவில் வ. ரா. வுடன் ஒத்துப்போனவர் பம்பாய் சீனிவாசன். இவ்விருவரின் முயற்சியாலும் எழுச்சியாலும் பிறந்தது தான் 'மணிக்கொடி'

ஆக, பாரதியாருக்குப்பின் தமிழ்மொழி, இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தில் ஏற்பட்ட தேக்கத்தைக் கலைத்து, அந்த இயக்கத்தைத் தொடரவேண்டும் என்ற நோக்கோடு 'மணிக்கொடி' தோன்றியது. அதாவது இந்திய மொழி ஒவ்வொன்றிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு பல ஏடுகள் தோன்றி கொண்டிருந்த நேரத்தில் பலப்பல கவிஞர்களும், இலக்கியப் படைப்பாளிகளும் உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஒரே பிரதிநிதியாகத் தோன்றியது 'மணிக்கொடி' அதன் தனிப் பெருஞ்சிறப்பு இதுதான். பாரதியாரின் அடிச்சுவட்டில், அவருடைய கனவுகளைத் தொடருவது தான் அதன் லட்சியம்.

மணிக்கொடி என்றொரு மாதமிருமுறைப் பத்திரிகை தோன்றியிரா விட்டால்—தமிழ் மறுமலர்ச்சி இன்னும் பல ஆண்டுகள் பிற்பட்டிருக்கலாம், அல்லது திசைமாறிப் போயிருக்கலாம், அல்லது தமிழ் இலக்கியம் பண்டிதர் களின் தனிவுடைமையாகப் பழைய நிலைக்கே திரும்பி இருக்கலாம். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் மணிக் கொடிக்குள்ள இந்தச் சிறப்பான அந்தஸ்த்தை யாரும் பறித்துக் கொண்டு போய்விட முடியாது.

* * *

1933 செப்டம்பர் முதல் 1935 ஜனவரி வரை வ. ரா. பதிப்பித்த மணிக்கொடி பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. பி. எஸ். ராமய்யாவின் மணிக்கொடியோடு தான் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது—மணிக்கொடியில் என்முதல் கதை வந்த பிறகு வ. ரா.வின் மணிக்கொடி-சில

www.padippakam.com



இதழ்களை ஹிந்தி ஆசிரியர் வீட்டில் பார்த்தேன்; அதன் உருவம் பற்றிக்கூட எனக்கு நினைவில்லை; ஆனால் கு. ப. ரா. அதில் தொடர்ச்சியாக எழுதி வந்த 'கருவளையும் கையும்' என்கிற வசன கவிதைகள் எனக்குள் படைப்பு கிளர்ச்சியை (Creative impulse) மிகவும் அதிகமாக்கியது.

பிச்சமூர்த்தியும், கு. ப. ரா.வும் என்னைவிட இருபது வயது மூத்தவர்கள். இயற்கையில் சங்கோசியாக இருந்ததால் நான் அவர்களோடு அப்போது நெருங்கிப் பழகியதில்லை. கு. ப. ரா.வுடன் பேசியதும் எனக்கு நினைவில்லை; ஆனால் பிச்சமூர்த்தியைச் சில தடவைகள் சந்தித்தது எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது. ஒவ்வொரு சந்திப்பிலும் என் கதைகளைப் பாராட்டி, எனக்கு உற்சாகம் ஊட்டி வந்தார்.

நான் வீட்டில் செல்லப் பிள்ளை. குளிக்கவும் சாப்பிடவும் கூட பிறருடைய உதவி தேவைப்பட்டது. கல்லூரியில் சேர்ந்ததோடு என் கதைகள் பத்திரிகைகளில் வெளிவரவே, என் பெற்றோர் (வளர்ப்பு) என்னைப் பிறவி மேதை எனத் தீர்மானித்து, என்னை எவ்விதத்திலும் கட்டுப்படுத்துவதில்லை. ஆகவே, கல்லூரி மாணவன் என்பதை மறந்து, ஒரு முழுநேர எழுத்தாளனாக மாறினேன். படிப்பதற்கும், எழுதுவதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் எனக்கு நிறைய நேரம் கிடைத்தது. முதல் கதை வெளிவந்த பிறகு, நான், ஹிந்தி ஆசிரியர், பிச்சமூர்த்தி, கு. ப. ரா. ஆகியவர்களின் உதவியை எதிர்பார்க்காமல் நானே மணிக்கொடிக்குக் கதைகள் அனுப்பலானேன். ராமய்யா, சில கதைகளை நிறைய வெட்டியும் ஒட்டியும் வெளியிட்டார். (மௌனியின் கதைகள் யாவுமே ஆசிரியரால் திருத்தப்பட்டவையே). 1935 டிசம்பர் முதல் 1938 பிப்ரவரிவரை ராமய்யாவின் மணிக்கொடியில் என்னுடைய 15 சிறுகதைகள் வெளிவந்தன.

படிப்பகம்

www.padippakam.com



*1938* - பிப்ரவரி இதழுக்குப் பிறகு மணிக்கொடியின் சில இதழ்கள் வெளிவரவில்லை. அங்கு நிகழ்ந்த உட்பூசல்கள், கலகங்கள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. வீட்டில் எனக்குத் திருமணம் செய்ய முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. அதைவிட எனக்கு அதிகமான கவலை மணிக்கொடியைக் காணோமே என்று தான். ஒவ்வொரு நாளும் அஞ்சலில் அதை எதிர்ப்பார்த்து ஏமாற்றம் அடைந்து வந்தேன். மணிக்கொடியில் என் சிறுகதைகள் சில (பலவாகவும் இருக்கலாம், நினை வில்லை) இருந்தன. அவற்றில் எதைஆசிரியர் நிராகரித்து, எதை வெளியிடப் போகிறார் என்பதே எனக்குத் தெரியவில்லை. இந்தக் கவலையால் என் இரவுத் தூக்கம் கூட கெட்டு விட்டது.

திடீரென்று ஒரு நாள் தபாலில் மணிக்கொடி வந்தது. புரட்டிப் பார்த்தால், பல புதிய எழுத்தாளர் பட்டியலுக்கு இடையில் என் கதை 'சோனிக் குழந்தை' இருந்தது. இது நான் ஆரம்பத்தில் எழுதி, ராமய்யா நிராகரித்த கதை அது. வெளிவந்ததே எனக்குச் சங்கட மாக இருந்தது; அது மட்டும் அல்ல, பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ரா. முதலிய பெயர்களுக்கு இடையில் காணப்பட்ட என் பெயரை, எனக்கு முற்றி லும் புதிய பெயர்களுக்கு இடையில் பார்க்க எனக்கு வருத்தமாகவும் இருந்தது. நிர்வாக மாற்றம் பற்றிய ஓர் அறிவிப்பு அவ்விதழில் இருந்ததாய் ஞாபகம். நிர்வாக ஆசிரியர் ப. ராமசுவாமி என்று அச்சிடப்பட்டிருந்தது. அதுவரை நான் பி.எஸ்.ராமய்யாவை நேரில் பார்த்த தில்லை; ஆனால் வெகுகாலம் பழகியது போன்ற ஒரு தோழமை உணர்ச்சி இருந்தது. இந்த ப.ரா. (வ.ரா. அல்ல) அந்நியராக எனக்குத் தோன்றினார். மணிக்கொடி என் பத்திரிகை என்று அதுவரை எனக்கு இருந்த நம்பிக்கை ஆட்டம் கண்டது. ஆனால் அடுத்த மாதமே, ராமய்யா கிடப்பில் போட்டிருந்த என் மற்றொரு கதை

படிப்பகம்

www.padippakam.com



'முத்தமாரி' என்ற பெயரில் வெளிவந்தது, 'முத்தமாரி' என்பது நான் வைத்த பெயர் இல்லை; என் பெயரும் 'வேங்கடவன்' என்ற புனை பெயரில் மறைந்திருந்தது.

ராமய்யாவினால் ஒதுக்கப்பட்ட கதைகளுக்கு இவ் வாறு புதிய மதிப்பு உண்டாகிக் கொண்டிருந்த அதே நேரத்தில், என் வாழ்க்கையின் மதிப்பு குறைந்து வந்தது. எனக்குத் திருமணம் ஆகியிருந்தது; அந்தக் குதூகலம் சரி யாகத் தணியுமுன்பே பல இடையூறுகளில் நான் சிக்கிக் கொண்டேன்—வாழ்க்கையே வெறுத்துப் போகிற அளவு, சென்னைக்கு 'ஓடிப்போவது' என்று முடிவு செய்தேன், அதற்காகத் திட்டமிட்டு, சரத் சந்திரரின் இரண்டு நாவல் களையும், கே. எம். முன்ஷியின் நாவல் ஒன்றையும் இராப் பகலாக மொழி பெயர்த்தேன். அந்த மூன்று நாவல்களையும் நவயுகப் பிரசுராலயத்திலோ-அல்லயன்ஸ் கம்பெனியிலோ கொடுத்து, (இப்போதுபோல் சென்னை யெங்கும் புத்தக வெளியீட்டாளர்கள், அக்காலத்தில் இல்லை. மூன்று நாலு பதிப்பகங்களே இருந்தன. எனக்குத் தெரிந்தவரை—அதுவும் பெயரளவில்—இந்த இரு பதிப்பகங்களே.) பணம் வாங்கிக் கொண்டு சென்னையில் ஏதாவது பத்திரிகையிலோ, அலுவலகத் திலோ வேலை தேடிக் கொள்வது என்பது என் யோசனை. நான் அப்போது கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பி. ஏ. பொருளாதாரப் பிரிவில் முதல் ஆண்டு முதல் பாதிச் சம்பளம் கட்டியிருந்தேன்; பாடப் புத்தகங் கள்கூட வாங்கவில்லை. மொழிபெயர்ப்பு வேலை முடிந்தது. செலவுக்குப் பணம் வேண்டுமே? வெள்ளி வாட்ச் செயின் ஒன்று என்னிடம் இருந்தது. அதை அடகு வைத்து பத்து ரூபாய் வாங்கினேன். ஒரே ஒரு நண்ப னுக்கு மாத்திரம் என் சென்னை புறப்பாடு பற்றித் தெரி யும். ஓர் இரவு, வயதான வளர்ப்புப் பெற்றோருக்கும் தெரியாமல் சென்னைக்கு 'ஓடிப்போனேன்'. ரொக்கமாக பத்து ரூபாய் கையிருப்பு. குடந்தையிலிருந்து சென்னைக்கு

www.padippakam.com



ரயில் டிக்கட் இரண்டே ரூபாய் என்று ஞாபகம். மிச்சம் எட்டு முழு ரூபாய்களை வைத்துக்கொண்டு சென்னையில் ஒரு வாரம் ஓட்டலாம்: நாளுக்கு முக்கால் அல்லது ஒரு ரூபாய் போதும். அதற்குள் மூன்று மொழி பெயர்ப்பு நாவல்களையும் நவயுகப் பிரசுரலாயத்தில்—(ப. ரா. நமக்கு வேண்டிய வராயிற்றே; ராமய்யா குப்பைக் கூடையில் போட்ட என் கதைகளை எல்லாம் தூசு தட்டி வெளியிடுகிறாரே!) கொடுத்தால் எக்கச்சக்கமாகப் பணம் வருமே; அதைக் கையில் வைத்துக் கொண்டு சென்னையில் வேலை தேடிக் கொள்வது கஷ்டமா என்ன. என் சென்னை ஓட்டத்தின் இலட்சியம் இதுதான்.

திருவல்லிக்கேணியில், சைடோஜி தெருவில் எஸ். ஆர். சாரங்கபாணி என்ற நண்பரின் அறையில் தங்கினேன். அவர் கும்பகோணம் கல்லூரியில் எனக்கு இரண்டு வருடம் சீனியர்; ஆனால் மணிக்கொடியில் வரும் சிறுகதைகளின் பரமரசிகர்; மணிக்கொடி வெளிவந்ததும் ஒரு பிரதியை வாங்கிக் கொண்டு கல்லூரிக்கு வருவார்; என் முன்னிலையில் அதைவாய்விட்டு உரத்துப்படித்து, அணுஅணுவாகச் சுவைத்து மகிழ்ந்து என்னைப் போற்றுவார். அதனால்தான் அவரைப் பிடித்தேன். நான் வீட்டில் செல்லப்பிள்ளை, எதையும் சுயமாகச் செய்ய லாயக்கில்லாதவன் என்பது அவருக்குத் தெரியும். நான் ஓடிவந்தவன், என் பெற்றோர் தவித்துக் கொண்டிருப்பார்கள் என்றும் அவருக்குத் தெரியும். என் வேதனைக் கதையைக் கேட்டு என்னை மிகவும் பிரியமாக மட்டுமல்ல, ஜாக்கிரதையாகவும் கவனித்துக் கொண்டார். ஹிந்தி பிரசார சபையில் ஆசிரியராகப் பணிபுரிந்த அவர் அப்போது பிரமசாரி.

சென்னையில் தங்க இடம் கிடைத்துவிட்டது. மறு நாள் காலையில் நவயுகப் பிரசுராலயம் — மணிக்கொடி காரியாலயத்துக்குச் சென்றேன். அலுவலகம் ஆர்மீனியன் தெருவில் இருந்தது. இதற்குமுன் மணிக்கொடி ஆபீஸ் மூக்கர் நல்லமுத்து தெருவில் இருந்ததாக ஞாபகம். மணிக்

படிப்பகம்

www.padippakam.com



கொடியில் சில கதைகள் வந்தபிறகு (1936இல் என்று எண்ணுகிறேன்) என் தாயாரின் குடை நிழலில் நான் பட்டணம் பார்க்கப் போயிருந்தேன். திருவல்லிக்கேணியிலோ எங்கேயோ தங்கி — எக்சிபிஷன், ரேக்ளா ரேஸ், சைக்கிள், மோட்டார் சைக்கிள் ரேஸ், செத்த காலேஜ். சாகாத காலேஜ், மீன் பண்ணை, லைட் ஹவுஸ் எல்லாம் அம்மாவோடு கண்டுகளித்தேன். தாயாருக்குத் தெரியாமல் நான் மூ. ந. முத்துதெருவை மட்டுமல்ல, மணிக்கொடி அலுவலகத்தையும் கண்டுபிடித்துவிட்டேன். வாசலில் மணிக்கொடி என்றொரு சின்ன போர்டு தொங்கியதாக நினைவு. உள்ளே போகத் தைரியமில்லை. ராமய்யாவும் கி.ரா.வும் ஒருவேளை புதுமைப்பித்தனும் உள்ளே இருப்பார்களே, என்னைக்கண்டதும் என்ன கேட்பார்களோ என்கிற அச்சம்; உடம்பே கூச்சத்தால் குறுகிக் கொண்டிருந்தது. தெருவில் இருபது முப்பது தடவை மணிக்கொடி ஆபீஸைக் கடந்து இந்தப் பக்கமும் அந்தப்பக்கமுமாய் நடந்தபடி இருந்தேன். உள்ளே நுழையத் துணிவு வரவே இல்லை. பேசாமல் தாயாரிடமே திரும்பி விட்டேன்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. கையில் ஐந்தாறு ரூபாயே இருந்தது. நண்பரின் அறையில் காலவரையறையின்றித் தங்க முடியாது. தேவை என் சங்கோசத்தை விரட்டிவிட்டது. ஆகையால் நவயுகப் பிரசுராலய ஆபீசில் தயக்கமின்றி நுழைந்தேன். கையில் மூன்று மொழிபெயர்ப்பு நாவல்கள் இருந்த தைரியம் வேறு.

நாவல்களின் கைப்பிரதிகளைப் பதிப்பகத்தாரிடம் கொடுக்கும்போது மூலதனம் போடுவது போன்று பெருமிதப்படுவது தமிழ் எழுத்தாளர்களின் பிரவி ஆணவ பலம் போலும்.

ப. ரா. என்னை மிகவும் அன்போடு வரவேற்றார். நான் கொடுத்த மூன்று கைப்பிரதிகளையும் எடுத்து வைத்துக் கொண்டார். பம்பாய் மாகாணத்தில்

www.padippakam.com



அப்போது உள்துறை அமைச்சராக இருந்த கே. எம். முன்ஷி தம் நாவலை மொழிபெயர்க்க அனுமதி கொடுத்த கடிதத்தையும் வாங்கிக்கொண்டு, மூன்று நாவலுக்கும் இருநூறு ரூபாய் தருவதாய்க் கூறினார். அது சரியோ தப்போ எனக்குத் தெரியாது; சென்னையில் இரண்டு நூறை வைத்துக்கொண்டு 3, 4 மாதம் ஒரு தனிநபர் ஆனந்தமாக வாழமுடியும். இந்தக் கற்பனை யோடு ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன். இருபத்தைந்து ரூபாய் முன் பணமாய்க் கொடுத்து, ஒரு வாரம் பத்துநாள் கழித்து வந்தால் பாக்கிப் பணத்தைத் தருவதாய்க் கூறி எனக்கு விடையளித்தார்.

அச்சமயம் ச. து. சு. யோகியார் அங்கு வந்தார். நல்ல கவிஞரும் தத்துவ மேதையுமான அவர் சினிமாவில் புகுந்து தன்னைச் சேதப்படுத்திக் கொண்டிருந்த காலம் அது. நான் யார் என்று அறிமுகப்பட்டதும், "அட; சின்னப்பையனாக இருக்கிறாயே; உன்னிடம் நல்ல தமிழ் இருக்கிறது. பி. ஏ. படித்து என்ன செய்யப் போகிறாய்? உத்தியோகத்துக்குப் போய் ஆயுள் பூராவும் சம்பாதிப் பதை விட அதிகமாய் ஒரே வருடத்தில் சம்பாதிக்க வழி செய்கிறேன், என்னோடு துணை டைரக்டராக வந்து விடு", என்று வற்புறுத்தினார். நான் சென்னைக்கு வேலை தேடி வந்தவன் வலுவில் வந்த இந்த இரண்டு வாய்ப்பைப் பற்றி இருக்க வேண்டும்; ஆனால் தயங்கினேன். அவர் விடவில்லை; 'ராஜபார்ட் போல் ஆள் ஜோராக இருக் கிறாய். சினிமாவில் உனக்கு நல்ல கிராக்கி இருக்கும். என் னோடு இரு. ரொம்ப சீக்கிரம் உன்னை டைரக்டராக்கு கிறேன்' என்று மேலும் ஆசை காட்டினார். யோசித்துப் பதில் சொல்வதாய் முனகினேன். மறுபடியும் சந்திப்ப தாய் அவராகச் சொன்னார்.

பிறகு மூன்று நாலு தடவை யோகியாரை அங்கு சந்தித்தேன். அவர் எவ்வளவு வற்புறுத்தியும் நான் அசைந்து கொடுக்கவில்லை. அவர் கொடுத்த அந்த



படிப்பகம்

www.padippakam.com



வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கலாமே என்று இப்போது நினைக்கத் தோன்றுகிறது. ஓர் ஆயுள் காலத்தில் சம்பாதிப்பதை ஒரே ஆண்டில் சம்பாதிக்க அவர் வழி வகுத்துக் கொடுத்திருப்பார் என்பது நிச்சயம். அப்படி ஓர் ஆயுட்காலத்தில் சம்பாதிப்பதை ஒரே ஆண்டில் விரயம் செய்யவும் அவர் வழியாக நான் கற்றிருக்கலாம். வியாபாரத்தில் ஏராளமாய்ச் சம்பாதித்து, ஏராளமாய் இழந்து - நானும் அவரைப் போலத்தானே நடந்து கொண்டேன்? அவரோடு சேர்ந்திருந்தால், எனக்கு சினிமாவும் அதன் விளைவுகளும் அனுபவமாயிருக்கும், அத்தோடு அவருடைய மேதையினாலும் நான் பயனடைந்திருக்க முடியும்; சரி, விட்டாயிற்று. வாழ்க்கையில் அவ்வப்போது சிலபல ஆண்டுகளுக்கிடையில் அவரைக் கண்டு அளவளாவி இருக்கிறேன். இரண்டொருமுறை அவர் குடந்தையில் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். நான் சென்னையில் இருந்தபோது அவர் வீட்டுக்குப் போய் சக்தி உபாசனை பற்றியும், ஆன்மீகம் பற்றியும் பேசியிருக்கிறேன். அவர் நோயால் நலிந்து, படுத்த படுக்கையாக இருந்தபோது நான் அவரைக் காணப் போனேன். 'என்னைத் தெரியுதா, சார்?' என்று கேட்டேன், அவரை நான் சந்தித்துச் சில ஆண்டுகளாயிருந்தன; மறந்திருப்பாரோ என்று எண்ணினேன். 'உன்னைத் தெரியாமல் என்ன? நவயுகம் ஆபீசில் பார்த்த பையன்தானே? நீதான் நான் சொன்னதைக் கேட்கலையே?' என்றார் அவர். அதாவது, மற்ற சந்திப்புகளைவிட எங்கள் முதல் சந்திப்புதான் அவருக்கு நினைவிருந்தது. சில மாதங்களில் அவர் கதை நிறைவு பெற்றது.

ப. ராமசுவாமி கொடுத்த இருபத்தைந்து ரூபாய் நாளும் தேய்ந்து வந்தது. ஐந்தாறு முறை இவரைப் பார்த்தேன். பணம் பெயருவதாகக் தெரியவில்லை. நவயுகம் வெளியீடுகளைப் பாதி விலைக்குக் கொடுத்தார்

www.padippakam.com



அத்தனையும் ரததினங்கள்; ஆனால் அவற்றைக் காட்டி னால் ஹோட்டலில் சோறு போடுவானா? என் கையில் மூன்று ரூபாய் இருந்தபோது எனக்கு இடம் தந்த நண்பர் சொந்தக் காரியமாக நாலு நாள் வெளியூர் போக நேர்ந்தது. 'உன்னிடம் பணம் இருக்கா? வேணுமா?' என்று கேட்டார். இருக்கு, கவலைப்பட வேண்டாம் என்று அவருக்குத் தைரியம் சொல்லி அனுப்பிவிட்டேன். இரண்டு நாள் போயிற்று; கையில் ஒண்ணரை ரூபாய் இருந்தது. சாப்பாடு பில் வாங்கிக் கொண்டு, ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்தேன்; கவுண்டர் பீட், செல்லாது என்று திருப்பிக் கொடுத்தார். எட்டணாவில் ஐந்தணா (முப்பது பைசேக்கு அளவில்லாத சாப்பாடு) கொடுத்துச் சாப்பிட்டேன்.

பிறகு எனக்குத் திகிலாகிவிட்டது. கையில் செல்லாத ரூபாய் ஒன்றும் மூன்றணாக்களும் இருந்தன. அறை நண்பரும் இல்லை. மாலையில் மரீனாவில் உட்கார்ந்திருந் தேன். வெறும் தேநீர் சாப்பிட்டேன். டிபன் தேவை; பசித் தது. கடற்கரை ஓரமாகவே நடந்து நவயுகப் பிரசுராலயத்தை அடைந்தேன். அன்றுவரை அத்தனை தூரம் நடந்ததில்லை; கடல் மணலில் நடந்ததால் களைப்போடு பசியாலும் துவண்டு விட்டேன். ப. ரா வைப் பார்த்த போது எனக்குக் கொஞ்சம்—மயக்கத்தோடு—தெம்பு வந்தது.

உட்காரும் போதே, 'எனக்குப் பணம் வேணுமே?' என்றேன் ப. ரா. நிதானமாக 'உங்களை ரொம்ப அலைய வைத்து விட்டேன். இன்னும் இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். பூரா பணத்துக்கும் ஏற்பாடு செய்து விடுகிறேன் என்றார் கெஞ்சும் குரலில்.

'ஒரு மாசமாய் இப்படியே சொல்லிக் கொண்டு இருக் கிறீர்கள். இன்றைக்கு எனக்கு பணம் வேணும். எனக்குப் பசிக்குது. சாப்பிடணும்' என்று கோபமாகக் கூறினேன்.

www.padippakam.com



எனக்குக் கோபித்துக் கொள்ளத் தெரியும் என்பதை ப. ரா. தெரிந்து கொண்டார். ஆச்சரியத்தோடு, 'சாப்பிட வில்லையா' என்றவர் மேஜையின் இரண்டு டிராயர்களை யும் மாறி மாறி இழுத்தார். சில சில்லறைக் காசுகள்; கண்டுபிடிக்கப்பட்டன; காபி வந்தது; பருகினேன்; கொஞ்சமாக உயிர் வந்தது. ப. ரா. எங்கெங்கோ போகும் படி ஒரு பையனை விரட்டினார். அரை மணி நேரமாயிற்று, ஒரு பத்து ரூபாய் நோட்டு வந்து சேர. பத்து ரூபாயை வாங்கிக் கொண்டதும், 'இரண்டு நாள் கழித்து வருகிறேன்; பாக்கி பூராவும் கொடுத்து விட வேண்டும்' என்று நலிந்த குரலில் கூறிவிட்டு ஆரியபவன் ஹோட்டலுக்கு விரைந்தேன்......

பி. எஸ். ராமய்யா தம் 'மணிக்கொடி கால'த்தில் ப. ரா.வைத் துரோகியாக வருணிக்கிறார்; பத்து ரூபாய் கொடுத்த ப. ரா. அன்று எனக்கு ஒரு தேவனாகவே தோன்றினார். நாலைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நவயுக பிரசுராலய நிர்வாகம் மாறிய பிறகு எனக்குப் பாக்கிப் பணம் வந்தது.

மறுநாளே எனக்கு இடம் தந்த நண்பர் திரும்பி விட்டார். சாயங்காலம் அவரும் நானும் கோயம்புத்தூர் கிருஷ்ணய்யா ஹோட்டலில் புகழ்பெற்ற ஹல்வா சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது; என் இடது கையை யாரோ கெட்டியாகப் பற்றிக் கொண்டார்கள். திடுக் கிட்டுத் திரும்பினேன்; எங்கள் குடும்ப நண்பர் ஒருவரின் புதல்வர்தான் என்னைப் பிடித்துக் கொண்டிருந்தார்; இந்த நண்பருக்கு என் வயசு இருக்கும்; நாகப்பட்டினத் திற்கு அருகிலுள்ள மஞ்சக் கொல்லை என்ற சிற்றூர்க் காரர். திருநாவுக்கரசு என்று பெயர். சென்னை லயோலா காலேஜில் என்னைப் போல பி. ஏ. முதலாண்டு படித்துக் கொண்டிருந்தார்.

'என்ன காரியம் செய்தீர்கள்? உங்களைக் காணாமல் உங்கள் அம்மாவும் அப்பாவும் அழுதபடி இருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பல ஊர்களுக்கும் உங்களைத் தேடி ஆள் போயிருக்கிறார்கள்' என்று என்னிடமும் என் நண்பரிடத்திலும் விவரித்தவர், நான் ஓடி விடுவேன் என்று அஞ்சியே என் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தார்.

அவர் கூறியது முழு மெய்; என் வளர்ப்புப் பெற்றோர் என்னைக் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தவர்கள். குளிப்பாட்ட ஒருவன், சட்டை வேட்டி கட்டிவிட ஒருத்தன்; தலைவாரி விட ஒருத்தி, சோறூட்ட ஒருத்தி; வெயில் என்மேல் பட்டுவிடக் கூடாது என்று மாட்டு வண்டி—இப்படி எல்லாம் என்னைக் காத்தவர்கள். திருவல்லிக்கேணியிலிருந்து ஆர்மீனியன் தெரு வரை நான் பசியோடு பாதயாத்திரை செய்த கதையைக் கேட்டால் செத்தே போயிருப்பார்கள்.

திருநாவுக்கரசு என்கிற அந்த அருமை நண்பர் என்னைத் தம்மோடு அழைத்துப்போய் லயோலா ஹாஸ்டலில் வைத்திருந்து, மறுநாள் அவரே ஸ்டேஷனுக்கு வந்து கும்பகோணத்திற்கு ரயில் ஏற்றினார். வழியில் இறங்கி மறுபடியும் மதராஸுக்கு வந்து விடாதீர்கள் என்று என்னை வேண்டிக் கொண்டு அனுப்பி வைத்தார்.

இவ்வாறாக, நான் மீண்டும் குடும்பச் சூழலில் தள்ளப்பட்டேன். சென்னையில் எழுத்தாளனாகப் புகுந்து முதன் முதலில் பசியின் சுகத்தை நுகர்ந்தேன். பிறகு நயவஞ்சகம், மோசடி, அவமானம், ஏமாற்றம் முதலிய கீழ்மையின் பல வண்ணஜாலங்களையும் சுவைத்தபடி என் வயது ஏறிக் கொண்டிருந்தது. 20ஆம் நூற்றாண்டின் முப்பதுகளில் பிச்சமூர்த்தி, கு. ப. ரா., ச. து. சு. யோகியார் போன்றவர்கள் என்னைச் 'சின்னப்பையனாகப் பார்த்தார்கள் அல்லவா? நாற்பதுகளின் தொடக்கத்தில்'—அதாவது 1943இல் நான் பூனாவிலிருந்து 'ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும்' என்கிற உறுதியோடு

www.padippakam.com



கும்பகோணத்திற்குத் திரும்பி, கு. ப. ரா.வைச் சந்தித்த போது அவருக்கும் பிச்சமூர்த்தி போன்றவர்களுக்கும் ஈடு கொடுத்து நிற்கக் கூடிய முதிர்ச்சி—அனுபவத்தால்—எனக்குக் கிட்டிவிட்டது. கு. ப. ரா. அப்போது 'கிராம ஊழியன்' பத்திரிகையின் ஆசிரியர். 'நீங்கள் புதிதாக ஏன் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும்? கிராம ஊழியனே உங்கள் பத்திரிகைதானே?' என்று அவர் கூறியதை ஏற்று, நானும் அப்பத்திரிக்கைக்கு எழுதலானேன்.

* * *

பாரதியாரின் லட்சியம் எதுவோ, அதுவே மணிக்கொடியின் லட்சியம், பாரதியாரின் கனவுகள் எவையோ, அவையே மணிக்கொடியின் கனவுகள், இந்த லட்சிய உறுதியோடு மணிக்கொடி வெளிவந்தது; இந்தப் பத்திரிகையில் சில எழுத்தாளர்களின் பெயர்கள் அடிக்கடி காணப்பட்டன; இந்தப் பட்டியலைப் பாருங்கள்: பி.எஸ். ராமய்யா, கி. ரா., ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., புதுமைப்பித்தன், சி. சு. செல்லப்பா, சிட்டி, ந. சிதம்பர சுப்ரமணியன், ஆர். கே. சண்முகசுந்தரம், மௌனி, எம். வி. வெங்கட்ராம்—இந்த ஆசிரியர்களே அடிக்கடி மணிக்கொடியில் எழுதினார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே ஊரில் இருந்தவர்கள் அல்ல; ஓர் இடத்தில், ஒரு நேரத்தில் கூடியிருக்கவும் மாட்டார்கள்; எப்போதாவது, எங்காவது, சிலர் கூடிப் பேசியிருப்பார்கள். இவர்களுக்குள் இலக்கியம் பற்றின கருத்து வேற்றுமைகள் இருந்தன. இவர்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்வதும் தாக்குவதும் உண்டு. இவர்கள் அந்தக் காலத்தில் 'நாங்கள் மணிக்கொடி குழுவினர்' என்று சொல்லிக் கொண்டதில்லை. மணிக்கொடி பற்றி இப்படியெல்லாம் பின் காலத்தில் ஆராய்ச்சி செய்யப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை' என்று, அதன் ஆசிரியர் பி. எஸ். ராமய்யா 'மணிச்கொடி காலம்' என்ற தம் நூலில்

படிப்பகம்

www.padippakam.com



கூறுகிறார். பின்னால் வந்த ஆய்வாளர்களும விமரிசகர்களும் மேலே கூறிய பெயர்ப்பட்டியலை விரிவாகச் சொல்வதற்குப் பதிலாக 'மணிக்கொடி கோஷ்டி' 'மணிக்கொடிக் குழு' என்று குறிப்பிடலாயினர். இப்பெயர் நிலைத்து விட்டது.

உண்மை இவ்வளவு எளிதாக இருக்க, 'மணிக்கொடி-குழுவா? அப்படி ஒன்று இருந்ததாய்த் தெரியவில்லையே' என்று சில பெரியவர்கள் சொல்லி மகிழ்ந்து போகிறார்கள்; அதை ஓர் அரசியல் ஏடு வெளியிட்டுப் பெருமிதம் அடைகிறது. அடையட்டும்!

மணிக்கொடி எழுத்தாளர்கள் வேறு பத்திரிகைகளுக்கும் நிறையவே எழுதினார்கள். இவர்கள் எல்லோரும் மணிக்கொடியில் சங்கமம் ஆனதால்தான் அந்தப் பத்திரிகை மறுமலர்ச்சியின் அழியாச்சின்னம் ஆயிற்று. எழுதத் தொடங்கும்போதே தேர்ந்த கலைஞர்களாய்ப் பேராற்றலும் வெளிப்பட்டது. இவர்களுடைய தனிப் பெரும் சிறப்பு இவர்களில் சிலருடைய முதல் சிறுகதையே உலகத் தரத்துக்கு உயர்ந்திருக்கிறது.

இவர்கள் ஆங்கிலம் வாயிலாக உலக இலக்கியத்தை நன்கு அறிந்தவர்கள். இவர்களுடைய எழுத்தில் தாக்கம் இருப்பதைச் சிலர் கண்டுபிடிக்கிறார்கள். இதைக் கண்டு பிடிக்க ஆய்வு தேவையில்லை, தமிழ் மொழியில் மட்டு மல்ல, இந்திய மொழிகள் அனைத்திலும் மறுமலர்ச்சி உண்டாவதற்கும். சுயேச்சையாகச் சிந்தனை (free thought) செய்வதற்கும் ஆங்கிலத்தின் தாக்கம்தான் காரணம். ஏன் இந்த நாட்டில் நாட்டுப் பற்று பரவுவதற்கும் ஆங்கிலம் கருவியாக அமைந்தது. ஆங்கில வாயிலாக உலக இலக்கிய ஞானம் இருந்ததால்தான் அவர்கள் அந்த தரத்துக்கு உயர வேண்டும் என்று முனைந்தார்கள். படைப்பிலக்கியத்தின் வெற்றிக்கு ஆழ்ந்த மொழி ஞானம் தேவை இல்லை என்பதை உலகத்துக் கலைஞர்கள் பலர்

படிப்பகம்

www.padippakam.com



நிருபித்துள்ளனர். 'மௌனி' இந்த ரகத்தைச்சேர்ந்தவர்— ஆனால், இவர்களில் பெரும்பாலோர் பழைய தமிழ் இலக்கியப்பயிற்சி உடையவர்கள்; அவர்களுடைய படைப்புகளைக் கவனித்துப் படியுங்கள், தேர்ந்த தமிழறிவு இல்லாதவர்கள் இத்தனை வலிவோடும் வனப் போடும் மொழியைக் கையாள முடியவில்லை.

மற்றவர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு என்ன செய்தார் கள் என்பதைப் பற்றி எனக்கு இப்போது அக்கறை இல்லை. ஆய்வாளர்கள் அந்தக் கால கட்டத்து ஏடுகளை யும் புத்தகங்களையும் பார்க்கட்டும்; வாழ்க்கையின் யதார்த்தத்துக்கு ஒவ்வாத அழகியல், மனவியலுக்கு ஏற்காத படைப்புகள் மலிந்திருப்பதைக் காண்பார்கள். நாளும் கிழமையும் தவறாமல் பத்திரிகை வெளிவர வேண் டும் என்கிற காரணம் காட்டி, அயல்நாட்டு இலக்கியங்க ளிலுள்ள கருத்துக்களையும், கதைக் கருக்களையும், கதா பாத்திரங்களையும் தமிழகப்படுத்தி அவை யாவும் தங்கள் சொந்தக் கருத்துக்கள் — கதைக் கருக்கள் பாத்திரங்கள் என்று வாசகர்களை நம்ப வைத்துப் பெரும் புகழ் ஈட்டிக் கொள்ளும் ஒரு நச்சு வட்டம் சில எழுத்தாளர்களால் விரிவடைந்ததையும் அவர்கள் காண் பார்கள். இந்த நச்சு வட்டத்தின் தொடராட்சியே இன்னும் பெரும்பாலான ஏடுகளில் நீடிக்கிறது என்பதை யும் அவர்கள் காண்பார்கள்......

* * *

ஆசிரியர் பி. எஸ். ராமய்யா கூறியது போல் மணிக் கொடி ஒரு பத்திரிகை அல்ல, ஓர் இயக்கம். இந்த இயக்கம் மணிக்கொடி என்ற பெயரில் தொடங்கி சூறாவளி, சந்திரோதயம், கலாமோகினி, கிராம ஊழியன், தேனீ, சரஸ்வதி என்று பல பெயர்களில் செயல்பட்டு, இன்று பற்பல சிறு ஏடுகளின் வாயிலாக இந்த இயக்கம் நீடிக்கிறது. இந்த இயக்கத்தின் வாழ்வோடு தான் தமிழ் மறுமலர்ச்சி இலக்கியம் இணைந் துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

**எம்.வி.வெங்கட்ராம் அவர்களை**
**பேட்டி கண்டவர் :**
**பிரகாஷ்**

**உடனிருந்து சிறப்பித்தோர் :**
**பிரபஞ்சன்**
**இருள்**
**சூரியராஜா**
**செந்தமிழன்**

**கண்ணதாசன்**
*(மாத இலக்கிய இதழ்)*
*செப்டம்பர்—1973*
*மலர்-1 இதழ்-6 புரட்டாசி - 73*

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியப் பேட்டி

கே: முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ள தங்கள் வாழ்க்கையின் லட்சியம் என்ன?

ப: எடுத்த எடுப்பில் இதென்ன கேள்வி? எழுத்தாளன் என்றால் ஒரு இலட்சியம் இருக்க வேண்டும், முப்பத் தைந்து ஆண்டுகளாய்த் தமிழில் எழுதிக் கொண்டே உயிரோடும் இருப்பதால், அந்த இலட்சியம் பெரிசாயிருக் கும் என்று கணக்குப் போட்டீர்களா?

கே: அப்படியானால் உங்களுக்கு லட்சியம் இல்லை என்கிறீர்களா?

ப: நான் அப்படிச் சொல்லவில்லையே! சூரியராசா ஒருவரைத் தவிர நீங்கள் நால்வரும் materialists அல்லது agnostics. என் லட்சியத்தைச் சொல்லி அதை ஒரு விவாதப் பொருளாக்க நான் விரும்பவில்லை...

கே: உங்கள் லட்சியம் ஆன்மீகமானது என்கிறீர்களா?

ப: தயவுசெய்து வேறு ஏதாவது கேளுங்கள்.

கே: பதினாறு வயதிலேயே நீங்கள் இலக்கிய பூர்வமாக எழுத ஆரம்பித்து விட்டீர்கள் என்று தமிழ் நாவல் ஒன்றில் (மோகமுள்) குறிக்கப்பட்டுள்ளதே, ஐம்பது ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்தப் பொழுதில் உங்கள் எழுத்து உங்களை, உங்கள் வாழ்க்கையை எப்படி பாதித்துள்ளது?

படிப்பகம்

www.padippakam.com



ப: எழுத வேண்டும் என்ற உந்துதல் 12, 13 வயதிலேயே எனக்கு உண்டாகிவிட்டது. 16- வது வயதிலேயே என் முதல் கதை மணிக்கொடியில் வெளிவந்தது. இதை நான் பெரிய அதிசயமாக சொல்லவில்லை. என்னை, என் எண்ணப் பாங்கை, என் behaviour—நடத்தையை ஒரு சாட்சிபோல் கூர்ந்து பார்த்துக் கொள்வதும், குறிப்பிட்ட கட்டத்தில்—situation-ல் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை கவனிப்பதும்—எழுத்துணர்ச்சியின் விளைவால் எனக்கு ஏற்பட்ட பழக்கம். இதனால் என் வாழ்க்கையே எனக்குப் பெரிய சோதனைக் களமாயிற்று.

கே: லட்சக்கணக்கான மூலதனத்தில் இயங்கிய உங்கள் வியாபாரத்தில் நஷ்டமடைந்த பேரிழப்பு உங்கள் இலக்கியத்துக்கு, வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு லாபமாயிற்று அல்லது நஷ்டமாயிற்று?

ப: என் பொருளாதார நஷ்டம் இலக்கிய லாபமாயிற்று, வாழ்க்கையின் என் அடிப்படைக் கண்ணோட்டம் fundamental outlook மாறாவிட்டாலும் வாழ்க்கையை நான் அணுகும் முறை approch மாறியது. ஆதரிசவாதியாகவும் தனவுக்காரனாகவும் இருந்த நான் காரியவாதியாக மாறினேன். இவையெல்லால் என் இலக்கியத்தைப் பாதித்திருப்பதைக் காணலாம்.

கே: முதன் முதலில் உங்களை எழுதத் தூண்டியது எது? இப்போது எழுதத் தூண்டுவது எது? எழுதத் தூண்டாதது எது?

ப: சிறு வயதில் துப்பறியும் நாவல்களையும், அக்காலத்தில் இருந்த சில பத்திரிகைகளையும் இடைவிடாமல் படித்ததால் 'நானும் எழுதவேண்டும்' என்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. 13, 14 வது வயதில் மற்றொருவனும், நானும் கூட்டாக ஒரு துப்பறியும்

படிப்பகம்

www.padippakam.com



நாவல் எழுதத் தொடங்கினோம். அது முடிவு காண வில்லை. என் பெயரை அச்சில் பார்க்க வேண்டும், நாலு பேர் பார்த்து என் புத்திசாலித்தனத்தை வியக்கவேண்டும் என்ற பேராசை என்னை அப்போது எழுதத் தூண்டியது. மற்றவர்களைவிட நான் அழகாக எழுதுகிறேன் என்று எல்லோரும் பாராட்ட வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையும் என்னை எழுதத் தூண்டியது. என்னைப் பகைத்தவர்கள், துன்புறுத்தியவர்களின் மனப்பாங்கை probe-புகுந்து பார்க்க வேண்டும் என்ற ஆத்திரம் என்னை எழுதத் தூண்டுகிறது. என் காமமும், குரோதமும், லோபமும், மோகமும், மதமும், மாற்சரிய மும் என்னை எழுதத் தூண்டுகின்றன. என் கல்வி கேள்வி, கனவு, சிந்தனை, தரிசனம் என்னை எழுதத் தூண்டு கின்றன. சுருக்கமாக, நானே என்னை எழுதத் தூண்டுகிறேன். என் இலக்கியத்துக்கு நானே மூலப் பொருள்... எழுதத் தூண்டாமலும் எழுதவிடாமலும் என்னை முடக்குவது பொருளாதார நிர்ப்பந்தமே.

கே: நீங்களும் உங்கள் இலக்கிய சகாவான ஜானகி ராமனும் ஒரே மண்ணின் முளைகள். நீங்கள் இருவரும் எழுதத் தொடங்கிய காலத்திலேயே, எழுதத் தொடங்கிய பலரும் பேனாவை, எழுத்தை, மறந்துபோன பின்னும், இன்னும் இலக்கியச் சிறப்போடும் செழுமையோடும் எழுதிக் கொண்டிருக்கும் அக்காலத்தின் பெருமைக்குரிய படைப்பாளிகளாகிய உங்கள் இருவரில், ஜானகிராம னின் இலக்கிய நட்பைப் பற்றி கொஞ்சம் சொல்லுங் களேன்...

ப: நானும் ஜானகிராமனும் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சேர்ந்து படித்தோம். அவரும் நானும் ஏக காலத்தில் எழுதத் தொடங்கியதாய் நீங்கள் நினைப்பது தவறு. கல்லூரியில் முதல் ஆண்டு படிக்கும்போதே மணிக்கொடியில் என் கதைகள் வெளிவரத் தொடங்கின. ஜானகிராமன் அப்போது எழுத ஆரம்பிக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஐந்தாறு வருஷங்களுக்குப் பிறகுதான் எழுதத் தொடங்கினார். மணிக்கொடியில் என் கதை வெளிவந்ததும் ஜானகிராமன் சங்கோசத்துடன் என்னை அணுகிப் பாராட்டுவார். ஜானகிராமன் என்னை ஒரு ஹீரோவாகப் பேசியதால் கல்லூரியில் அவரைக் கண்டாலே ஒதுங்க ஆரம்பித்தேன்.

அப்பால் கு. ப. ரா. வை ஆசிரியராகக் கொண்ட கிராம ஊழியனும், சாலிவாகனனை ஆசிரியராகக் கொண்ட கலாமோகினியும் இலக்கியம் வளர்த்துக் கொண்டிருந்த காலத்தில், ஜானகிராமனும் நானும் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது.

அவருடைய எழுத்தாற்றலைக் கு. ப. ரா. வோடு நானும் தெரிந்து கொண்டிருந்தேன். 'தேனீ'யில் நான் அவருக்கு முதலிடம் கொடுத்தேன். அவருக்குப் பெரும் அந்தஸ்து உண்டாக்கிய 'ரத்தப் பூ' என்ற கதை தேனீ முதல் இதழில் வந்தது. அவரிடம் பாரபட்சமாய் நடந்து கொள்வதாக மற்ற எழுத்தாள நண்பர்கள் என்னிடம் நேரிலேயே வருத்தப்பட்டார்கள். கண்டித்தார்கள். ஆனால்...எனக்கு அவரிடம் இருந்த 'அஞ்ஞானம்' நீங்கவில்லை. தேனீயின் வளர்ச்சிக்காக அவரும் நானும் பம்பாய்க்கும் போனோம்...

ஒருவரை ஒருவர் போற்றுவது எங்கள் நட்பல்ல. அவர் எழுத்துக்களில் நான் காணும் குறைகளைக் கூறுவதும், என் எழுத்துக்களில் அவர் கண்ட பலவீனங்களைச் சுட்டிக் காட்டுவதும் சகஜம். அதனால் எங்களுக்குள் பிணக்கு உண்டாகவில்லை. இன்னும் நண்பர்களாயிருக்கிறோம்.

கே: கு. ப. ரா., பிச்சமூர்த்தி ஆகிய இரண்டு மேதைகளுடன் பழகிய நண்பர் நீங்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அவர்களுடன் பழக நேர்ந்தது எப்படி? எப்படி பழகினீர்கள் என்பதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்...

www.padippakam.com



ப: 1935 இறுதியிலோ 1936 தொடக்கத்திலோ மணிக்கொடி என்ற பத்திரிகையை என் ஹிந்தி ஆசிரியர் வீட்டில் பார்த்தேன். அந்த ஹிந்தி ஆசிரியர் பி. எம். கிருஷ்ணசாமி மணிக்கொடிக்கு சிறந்த ஹிந்திக்கதைகளை தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தவர். நான் எழுதுகிற மாதிரி கதைகளை மணிக்கொடி போன்ற பத்திரிகைதான் வெளியிடும் என்பதைப் புரிந்துகொண்டேன். 'சிட்டுக் குருவி' என்ற ஒரு சிறு கதையை அவரிடம் கொடுத்து, பிடித்தால் மணிக்கொடிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன். அவர் படித்துவிட்டு பிச்சமூர்த்தியிடம் கொடுத்திருப்பதாய்க் கூறினார். கதை 1936 நவம்பர் 15 மணிக்கொடியில் வந்தது. சில நாட்களுக்குப் பிறகு அதே ஹிந்தி ஆசிரியர் வீட்டில் பிச்சமூர்த்தி என்னைக் கண்டுவிட்டார். 'சிட்டுக்குருவி எழுதிய வெங்கட்ராமன் நீதானே? கதை சுமார்தான். ஆனால் ஒரே ஒரு பாரா நீ எழுத்தாளன்தான் என்பதை ஊர்ஜிதம் செய்கிறது. கு. ப. ராஜகோபாலனுக்கும் கதை பிடித்துவிட்டது. இரண்டு பேரும் ஒரு புதிய எழுத்தாளன் தோன்றியிருப்ப தாக ராமய்யாவுக்குக் கடிதம் எழுதிக் கதை அனுப்பி னோம்' என்றார். நான் வெட்கத்தால் சுண்டிவிட்டேன். பிறகு நான் ஹிந்தி ஆசிரியரிடமோ, பிச்சமூர்த்தியிடமோ, என் கதைகளைக் காட்டுவதில்லை. பாராட்டிவிடுவார் களோ என்ற அச்சம்! 'அடுத்த ஜன்மச் சாயை' என்ற என் கதை மணிக்கொடியில் வந்தது. யதேச்சையாகப் பிச்சமூர்த்தி அதே ஹிந்தி ஆசிரியர் வீட்டில் என்னைப் பார்த்துவிட்டார். 'உன் சொந்தக் கதைதானே' என்று கேட்டார். 'ஆம்' என்றேன். 'ரொம்ப நன்றாக வந்திருக் கிறது. நான் இந்த மாதிரிக் கதையை என் ஆயுஸில் படித்ததில்லை இனியும் படிப்பேனா என்பதும் சந்தேகம்' என்றார். நான் செத்துவிட்டேன் போங்கள்! அவருடைய இந்தப் பாராட்டு கல்லூரிப் படிப்பை மறந்து என்னைக் கிறுக்கனாக்கியது.

www.padippakam.com



கு. ப. ரா., ந. பி. இருவருமே என்னைவிட இருபது வ்யது மூத்தவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் இருவரையும் தெய்வ பிறவிகளாக எண்ணினேன். பிச்சமூர்த்தியின் கரு கரு தாடியும், பின்னால் முடிந்த சின்னச் சிண்டும், குத்துவது போல் கூர்ந்து பார்க்கும் கண்களும், நிமிர்ந்த மிடுக்கு நடையும், காவிக்கலர் அல்லது வெள்ளைக் கதர் முழுக்கை ஜிப்பாவும், தோள் மீது பலகை மடி கதர்த் துண்டும், அரையில் கதர் வேட்டியும்—ந. பி. டாகுரைப் போல என் வணக்கத்துக்குரியவராய்த் தோன்றினார். கு. ப. ரா. மேடிட்ட தலையும் கூர்மையான மூக்கும், நோஞ்சான் உடம்புமாக சொற்களுக்குக் காயம் பட்டு விடுமோ என்று பயந்தவர் போல் மென்மையான குரலில் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அவர்களுடன் மணிக் கொடி காலத்தில் நான் நெருங்கிப் பழகியதில்லை. அவர் கள் தெருவின் வலது பக்கம் வந்தால் நான் விடு விடு என்று இடது பக்கம் ஓடித் தலை குனிந்து நடப்பேன். அவ்வளவு சங்கோச புத்தி சார்...

கு. ப. ரா. கிராம ஊழியன் ஆசிரியராக இருந்த போது, அதாவது 1943—1944இல் அவரோடு மிகவும் நெருங்கிப் பழகினேன். புனாவில் ராணுவ அலுவலகத் தில் பணியாற்றிக் கொண்டிருந்த நான் ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேலையை ராஜினாமா செய்து விட்டு, கும்பகோணம் திரும்பி னேன். 'நீங்கள் ஏன் தனியாகப் பத்திரிகை நடத்த வேண்டும், ஊழியனே உங்கள் பத்திரிகைதானே?' என்றார், கு. ப. ரா. நாங்கள் தினம் சந்திப்போம். நான் அவர் வீட்டுக்கு அடிக்கடி போவேன். ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, சுவாமிநாத ஆத்ரேயன் முதலியவர் களுடன் இன்னும் சில புதிய எழுத்தாளர்களும் வருவார் கள். திருச்சியிலிருந்து சாலிவாஹனன், சிட்டி, திருலோக சீதாராம் அவ்வப்போது வருவார்கள். எந்நேரமும் இலக்கிய சர்ச்சைதான் அப்போது காண்டேகர் தமிழ்

www.padippakam.com



நாட்டில் பிரபலமாயிருந்த பருவம். கு. ப. ரா.வுக்கு காண்டேகரின் எழுத்தில் ஓர் ஈடுபாடு; ஆனால், ஆழம் போதாது என்ற குறை. அந்தக் குறையில்லாமல் நாவல்கள் எழுத வேண்டும் என்ற அவருடைய கனவு, ஓ! அந்த காலம் இனியது.

கே : கு. ப. ரா.வின் கடைசிக் காலத்தில் இளைஞர்களின் கூட்டுறவால் கு. ப. ரா. கெட்டுப் போகிறார்' என்ற வதந்தி கிளப்பப்பட்டதாமே? அன்று கோபமுள்ள இளைஞராயிருந்த நீங்கள் அவரை எப்படிக் கெடுத்தீர்கள்? அவர் உங்களை எப்படிக் கெடுத்தார்?

ப : வதந்தி அல்ல, உண்மை. கு. ப. ரா. செக்ஸ் கதைகள் எழுதுவதை ராஜாஜி போன்றவர்கள் கண்டித்தார்கள். கு. ப. ரா. அதைப் பொருட்படுத்தியதில்லை; சிரித்தபடி எங்களிடம் சொல்லுவார். ஆனால், ஒரு முறை சென்னைக் கடற்கரையில் கூடிய எழுத்தாள நண்பர்கள் அவரை மிகவும் பழித்துப் பேசியது பற்றி மிகவும் வருத்தப்பட்டார்.

அப்போது நான் அவருக்கு ஆறுதல் சொல்லும் விதமே அலாதி. 'யார் என்ன சொன்னால் உங்களுக்கு என்ன சார்? நீங்கள் இதைப் பெரிய விஷயமாகப் பேசுகிறீர்களே! நீங்கள் எழுதுங்கள் சார்!' என்பது அப்போது என் ஸ்டைல்.

அவருடைய இலக்கியத்தை வியந்து போற்றி 'எழுதுங்கள்' என்று சொல்லிச் சொல்லி அவரை மேன் மேலும் செக்ஸ் கதைகளை எழுத வைத்து நான் அவரைக் கெடுத்தேன். ஊழியனில் இரண்டு பக்கத்தில் 'அழகு' என்ற அவர் கட்டுரை வந்தது. அதைப் படித்ததும் அவர் வீட்டுக்கு விரைந்து அவரைப் பாராட்டியது ஞாபகம் வருகிறது. 'உங்கள் திலோத்தமை டாகுரின் ஊர்வசியை விட அழகி' என்று என் கதைகளைப் பாராட்டி அவர் என்னைக் கெடுத்தார்.

www.padippakam.com



கே: மௌனியும் கும்பகோணத்தைச் சேர்ந்தவர் தானே? அவரோடு நீங்கள் பழகவில்லையா?

ப: கு.ப.ரா. பிச்சமூர்த்தியைவிட அவரோடுதான் அதிகம் பழகினேன். மணிக்கொடியில் 'காதல் சாலை' என்ற அவர் கதையைச் சுவைத்துப் படித்தேன். அந்தச் சமயம் மௌனி எங்கள் தெருவிலிருந்த ஒரு கல்லூரி மாணவனுக்கு கணக்கு டியூஷன் சொல்லிச் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த மாணவன் என்னை அவரிடம் காட்டிக் கொடுத்துவிட்டான். பிறகு அவரே டியூஷன் முடிந்ததும் எங்கள் வீட்டுக்கு வருவார். அவர்தான் பேசுவார். நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பேன். மறுத்தோ எதிர்த்தோ பேசுகிற குணம் எனக்கு அப்போது கிடையாது. பாரதியார் ஒரு கவிஞனா என்று ஆத்திரமாக ஏசுவார். கு. ப. ரா., பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் சிதம்பர சுப்பிரமணியன், செல்லப்பா, சிட்டி, ராமய்யா, யாரையும் அவர் எழுத்தாளராக ஒப்புக் கொண்டதில்லை. குறிப்பாக, கு. ப. ரா.வையும் பிச்சமூர்த்தியையும் அவர் எரிச்சலோடு கண்டிப்பார்...'மௌனி' என்று அவருக்குப் பேரிட்டது ராமய்யா என்று நினைக்கிறேன். உண்மையில் அவர் மௌனி அல்ல; ஓயாமல் பேசுவார்.

மணிக்கொடி காலத்துக்குப் பிறகு மௌனி சிதம்பரம் சென்றுவிட்டார். தேனீயில் அவரை எழுத வைக்க மிகவும் சிரமப்பட்டேன். அடிக்கடி கடிதம் எழுதுவேன். தேனீ முதல் இதழ் வெளியானதும் அவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அந்த இதழில், ஓர் எழுத்தாளர் மற்றோர் எழுத்தாளரை அறிமுகம் செய்து வைத்திருந்தார். அதை மௌனி கண்டித்தார். ஒருவரை ஒருவர் முகஸ்துதி செய்து கொள்ளக் கூடாது என்றார். முகஸ்துதி இல்லை. குறைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்று நான் சொன்னதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த இதழில்



படிப்பகம்

www.padippakam.com



'ராஜகுடும்பம்' என்ற என் சிறுகதை இருந்தது. 'கதையில் ராஜாவோ, ராணியோ வரவில்லையே, 'ராஜகுடும்பம் என்று எப்படி பெயர் வைக்கலாம்?' என்று குற்றம் சாட்டினார். முதலில் அவர் ஹாஸ்யமாகப் பேசுகிறார் என்று எண்ணினேன், பிறகு மெய்யாகவே கண்டிக்கிறார் என்று தெரிந்தது...கதாநாயகன் பெயர் ராஜா மனைவி யைச் செல்லமாக ராணி என்று அழைக்கிறான், தங்கள் குழந்தையை இளவரசு என்கிறார்கள்; ஆகையால் ராஜ குடும்பம் என்ற என் விளக்கத்தை அவர் ஏற்கவே இல்லை, எதிர்த்தும் மறுத்தும் வாதாடினேன், 'ராஜாவும் ராணி யும் வராத கதைக்கு ராஜகுடும்பம் என்று நீ பெயரிட்டது தப்புதான்' என்று அழுத்தமாய்ச் சொன்னார். என் கதை யின் நாயகன் ஈரானி ஹோட்டலுக்குப் போய் பிரியாணி சாப்பிடுகிறான். 'அந்த வார்த்தையைப் படித்தாலே எனக்குக் குமட்டுகிறது. நீ எழுதியிருக்கக் கூடாது' என் றார். 'அவன் சாப்பிடுகிறானே, அசைவப் பயல்' என்றேன். 'நீ அந்த வார்த்தை எழுதியிருக்க வேண்டாம்' என்று ஓங்கிச் சொன்னார். இந்த இலக்கிய சர்ச்சை முடிவு காணாமல் முடிந்தது.

நான் வற்புறுத்தி அவரை எழுதவைத்தேன். முதல் கதையை நேரில் கொண்டு வந்து தந்தார். 'திருத்திப் போடு' என்று சொல்லிவிட்டுப் போனார். அவசரமாக எழுதியிருப்பார்; ஏதாவது பிழைகள் இருக்கலாம் என்று எண்ணிக் கதையைப் படித்தேன். ஒரு வாக்கியமும் இலக்கண சுத்தமாக இல்லை. அவருக்குக் கை வந்த கதை உருவம் கெடாமல் அதைத் திருத்த எனக்குச் சில நாட்கள் ஆயின. பி. எஸ். ராமய்யா எவ்வளவு தேர்ந்த ஆசிரியர் என்பதை எண்ணி வியந்தேன். தேனீயில் வந்த அவருடைய இரண்டாவது கதையின் விஷயமும் அப்படித்தான். அவருடைய கதைகளுக்கு 'ஹிந்து' உள்பட முக்கியமான தினசரிகளில் 'மௌனியைச் சந்தியுங்கள்' என்று விளம்பரம் கொடுத்தேன். இந்த விளம்பர ஆரவாரத்தைக் கண்டு பொருமிய எழுத்தாள

படிப்பகம்

www.padippakam.com



நண்பர்கள் கதையைப் படித்த பிறகு என்னைக் கடிந்து கொண்டார்கள். லா. ச. ரா. மௌனியின் கதையை ஸ்துதி நிந்தையாக புகழ்வதே போல் இகழ்ந்து—ஒரு கடிதம் எனக்கு எழுதினார். அவருக்கு என்ன பதில் எழுதினேன் என்று நினைவில்லை.

தேனீ ஓய்ந்த பிறகு அவரைச் சிதம்பரத்தில் ஒரு முறை சந்தித்தேன். 'ஒரு கதை எழுதி வைத்திருந்தேன். விகடனுக்கும் குமுதத்துக்கும் அனுப்பினேன்; திரும்பி வந்துவிட்டது' என்று வருத்தப்பட்டுக் கொண்டு 'இதை என்ன செய்வது என்று தெரியவில்லை' என்றார். 'விகடனுக்கும் குமுதத்துக்கும் ஏன் அனுப்பினீர்கள்' என்று கேட்டேன். 'அவைதானே பிரபலமாயிருக்கின்றன? அவர்கள் அதிகப் பணம் தருவதாகவும் சொன்னார்கள்' என்றார். 'உங்களுக்கு எதுக்கு சார் பணம்? விகடனும் குமுதமும் உங்கள் கதையை போடமாட்டார்கள். உங்கள் கதையை சிவாஜி தீபாவளி மலரில் போடச் சொல்லுகிறேன். ஆனால் பணம் ஒன்றும் கிடைக்காது' என்றேன். 'பரவாயில்லை' என்றார். பிறகு சிவாஜி ஆசிரியர் திருலோக சீதாராமிடம், மௌனியிடம் ஒரு கதை இருப்பதை சொல்லிவிட்டு—மறந்திருந்தேன்.

ஓரிரவு. கொட்டும் மழை. மின்சார வெளிச்சமும் இல்லை. யாரோ கதவைத் தட்டுகிறார்கள். கதவு திறந்தால் திருலோக சீதாராம் காட்சி தந்தார். உள்ளே நுழைந்ததும், 'ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்படுங்கள்' என்றார். ஏன் என்றால், சிதம்பரம் சென்று மௌனியின் கதை கொண்டுவருவதற்கு என்றார். 'இந்தப் பேய் மழையில் கதை தேடிப் போக வேண்டாம். இரண்டே நாளில் கதை சிவாஜிக்குக் கிடைக்கும், என்று அவரைச் சமாதானம் செய்தேன். மௌனிக்கு மறு நாள் எழுதினேன். கதை மறு தபாலில் வந்தது. வழக்கம் போல் திருத்திப் பெயரிட்டு சிவாஜிக்கு அனுப்பி வைத்தேன். சிவாஜி தீபாவளி மலரில் அது வெளிவந்தது.

படிப்பகம்

www.padippakam.com



பிறகு ஒருமுறை மௌனி எங்கள் வீட்டுக்கு வந்தார். இருவரும் பேசியபடி ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்தோம். அவர் அதிகமாக எழுதாவிட்டாலும், எழுதுவதை எப்படி வெளியிடுவது என்பதை அறியாவிட்டாலும், அவர் எழுதுவதைப் பற்றிச் சிந்திப்பதை அறிய எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு கதைக்கான plot. இருப்பதாகவும், எழுதப்போவதாகவும் சொன்னார். plotஐயும் சொல்லிக் கொண்டே வந்தார். அது எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. 'சொல்லாதீர்கள்' நானே எழுதிவிடுவேன் போல் இருக்கிறது' என்று தடுத்தேன். 'எழுதேன்; அதனால் என்ன? நானும் எழுதுகிறேன்' என்றார். அவர் சொன்ன கதைக் கருவிலிருந்துதான் 'கருகாத மொட்டு' என்ற என் கதை தோன்றியது. அவர் அதே பிளாட்டைப் பயன்படுத்திக் கதை எழுதுறாரா என்று எனக்குத் தெரியாது. மௌனியை நான் சந்தித்துப் பல வருஷங்கள் ஆகிவிட்டது.

கே: நீங்கள் தேனீ இலக்கிய இதழை நடத்திக் கொண்டிருந்தபோது க. நா. சு. உங்களைச் சந்திக்க அடிக்கடி வந்து போவார் என்று அறிகிறோம், அன்றைய உங்கள் இலக்கியக் கூட்டாளி க. நா. சு. பற்றியும் நினைவு கூறுங்கள்—

ப: க. நா. சு. அப்போது சிதம்பரத்தில் இருந்தார். தேனீயில் முதல் இதழிலிருந்து ஒரு தொடர்கதை இடம் பெற வேண்டும் என்று எனக்கு ஆசை. முழுவதும் எழுதி முடித்த நாவலையே வெளியிடுவது என்று உறுதியாக இருந்தேன். தன்னிடம் அப்படி ஒரு முழு நாவலே இருப்ப தாய் க. நா. சு. எழுதினார். தேனீயின் துணை ஆசிரியர் கரிச்சான்குஞ்சுவை சிதம்பரத்துக்கு அனுப்பினேன். நாவல் முழுமையாக இருக்கிறதா என்று பார்க்கும்படி அனுப்பினேன். க. நா. சு. ஒரு கத்தைக் காகிதங்களைக் காட்டி 'முடித்து விட்டேன்; மாதப் பத்திரிகைதானே? அவ்வப்போது rewrite செய்து அனுப்புகிறேன்' என்று

படிப்பகம்

www.padippakam.com



சொல்லி முதல் இதழுக்குத் தேவையான materialஐ கரிச்சான்குஞ்சுவிடம் கொடுத்தனுப்பினார். ஐந்தாறு மாதம் தொடர்கதை ஒழுங்காக வந்தது. பிறகு அவரிட மிருந்து கதை வாங்க எனக்குப் பேராற்றல் தேவைப் பட்டது. 'கதையை உடன் அனுப்புங்கள்' என்று எழுது வேன். 'இரண்டு நாளில் அனுப்புகிறேன்' என்று பதில் வரும். மூன்றாவது நாள் 'இன்னும் வரவில்லையே' என்று எழுதினால் பதில் வராது. மறுபடியும் reminder. 'இன்று அனுப்பிக் கொண்டிருக்கிறேன்' என்று பதில் எழுதுவார். மறுநாள் 'கதை உடனே அனுப்புங்கள்' என்று தந்தி தருவோம். 'நேற்றே அனுப்பி விட்டேனே' என்று பதில் தந்தி. மறுநாள் தொடர்கதை வரும்... இப்படியே ஒவ்வொரு மாதமும் அவரோடு 'பேராட்டம்' இப்போது சிரிப்பாக இருக்கிறது. அப்போது பிராணா வஸ்தை போங்கள்.

'தேனீ' ஆரம்ப காலத்தில் திடீரென்று வருவார். எங்கள் வீட்டில் தங்கும்படி சொல்வேன். தங்க மாட்டார். ஹோட்டலில் ரூம் எடுப்பார். பிறகு எங்களோடு இரவு ஒரு மணி, இரண்டு மணி வரை பேசி விட்டு ரூமுக்குப் போவார். மறுநாள் காலையில் வரும்போது ஒரு காகிதச் சுருளைக் காட்டி 'இன்றைய கோட்டா இருபது பக்கம் ராத்திரி எழுதினேன், என்பார். அப்போது அவர் தன்னை விமர்சகர் என்று கருதவில்லை. எழுத்தாளர் என்று சொல்லிக் கொள்ளவே விரும்பினார்.

கே: இலக்கியாசிரியர் க. நா. சு., விமர்சகர் க.நா.சு' ரசிகர் க. நா. சு. என்று மூவர் இருப்பதாக நீங்கள் எழுதியதாய் ஞாபகம். இந்த மூவரில் நீங்கள் விரும்பிய க. நா. சு. யார்? வேண்டிய க. நா. சு. யார்...?

ப: க. நா. சு.வை இப்படிக் கூறு போட்டு எப்போது எழுதினேன் என்று எனக்கும் நினைவில்லை. மூவரையும் நான் விரும்புகிறேன். மூவரும் எனக்கு வேண்டியவர்களே.

www.padippakam.com



அவருடைய இலக்கியத்தை நான் ரசித்திருக்கிறேன். அவருடைய விமர்சனக் கருத்துக்களை பெரும்பாலும் ஏற்றதில்லை. அவரோடு கடுமையாக விவாதித்ததுண்டு. எந்நேரமும் படிப்பும் இலக்கிய விசாரமாகவும் இருக்கிற க. நா. சு.வையும் நான் மதிக்கிறேன்.

கே : தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் பல்வேறுபட்ட சோதனைகளோடு பல்முனைப் படைப்பாக எழுதியவர்களில் புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, நீங்கள் மூவர் மட்டுமே வெற்றி பெற்றிருப்பதாய் நாங்கள் கருதுகிறோம். உங்கள் மூவரைத் தவிர மற்ற நல்ல கலைஞர்கள்கூட ஒருவர் ஒரே மாதிரியான சோதனைகளையே செய்திருக்கிறார்கள். பல்முனையான சோதனைகளைச் செய்து பார்த்த புதுமைப்பித்தனை பற்றி படைப்பாளி என்கிற நிலையில் உங்கள் கருத்து என்ன?

ப: ஒரே மாதிரியான படைப்புகள் செய்வதை கலைஞனின் பெரிய பலவீனமாக நான் எண்ணுகிறேன். ஆள முடியாமலோ, ஆளத் தெரியாமலோ எழுத்துக்கும் ஓர் உருவத்துக்கும், ஒருவகைக் கருத்துக்கும், ஒரே மாதிரி உத்திக்கும் அவன் அடிமைப்பட்டு விட்டதை அது காட்டுகிறது. தான் படைத்த சக்திக்கு அவன் அடங்கி விடுவதால் அவன் படைப்புத்திறன் குறுகுகிறது. வாழ்க்கை விரிந்தது. வாழ்க்கையின் பல துறைகளையும் பல்வேறுபட்ட சுவைகளையும் சுவைகளின் தன்மைகளையும் உணரத் தவறி விட்டான், என்பதையே அது காட்டும். சில கருத்துக்களையோ ஓர் உருவத்தையோ ஒரே உத்தியையோ அவன் பற்றிக் கொண்டு, அதன் எல்லைக்குள்ளே அவன் சுற்றி வருவதால், அவனுடைய எழுத்தாற்றல் மிக விரைவில் saturation point—ஐ reach செய்து விடுகிறது. ஒரே மாதிரி படைப்பு செய்வதே கலைஞனின் தனித்தன்மை என்று சில விமர்சகர்கள் சொல்லி வருவதை காணத்தான் எனக்கு ஆச்சரியமாக

www.padippakam.com



இருக்கிறது. பிச்சமூர்த்தியின் வானம்பாடி, பதினெட்டாம் பெருக்கு, தாய் ஆகிய மூன்று கதைகளையும் சேர்த்துப் படியுங்கள்' புதுமைப்பித்தனின் 'அந்த இரவில்', 'பிரம்மராக்ஷஸ்', 'புதிய கூண்டு, ஆகிய மூன்று கதைகளையும் படியுங்கள். சென்ற ஆண்டு மித்திரன் தீபாவளி மலரில் வந்த என் 'அப்பாவும் பிள்ளையும்' அமுதசுரபி மலரில் வந்த 'காலத்தின் கனவையும்' சேர்த்துப் படியுங்கள். இந்தக் கலைஞர்களின் கண்ணோட்டம் எவ்வளவு பரந்து, விரிந்து, சூழ்ந்தது என்று ஓரளவு தெரியும். இவ்வகையில் புதுமைப்பித்தன் தேர்ந்த படைப்பாளி என்பதை நான் ஒரு நாளும் சந்தேகித்ததில்லை.

கே.: விமர்சகர்களால் நீங்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகிறீர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். இலக்கியத்திற்கு ஒவ்வாத பல காரணங்களால் வேறு பலரும் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் பம்பாயில் ஒரு இலக்கியக் கூட்டத்தில் 'பிராமணர் அல்லாதார் புதுமைப்பித்தனைக் கொண்டாடுவது போல பிராமணர்கள் மௌனியைக் கொண்டாட வேண்டும்' என்று க. நா. சு. சொல்லியிருக்கிறார் என்று பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு இலக்கிய மதிப்பீடு செய்யத் தகுதியுடையவர்கள் என்று நினைக்கிறீர்கள்?

ப: வேண்டும் என்று deliberate ஆக என்னை இருட்டடிப்புச் செய்கிறார்கள் என்ற எண்ணம் எனக்கு இது வரை உண்டானதில்லை. ஜாதிக்காகவும், கட்சிக்காகவும் இனத்துக்காகவும், நட்புக்காகவும் இலக்கியாசிரியர்களை பாராட்டி விமர்சனம் செய்துவிடும் போக்கு இங்கே சகஜமாக இருக்கிறது. என்ன செய்வது?......அது சரி, யாரோ சில விமர்சகர்களுக்காகவா நாம் எழுதுகிறோம்? க. நா. சு. அப்படிப் பேசியிருக்க மாட்டார் என்றே நான் நினைக்கிறேன். cosmopolitan views உள்ளவராகவே

www.padippakam.com



நான் அவரைக் கண்டிருக்கிறேன். என்றாலும், (பிரகாஷி டம் திரும்பி) "ஒரு Brahmin—ஐ நாவலிஸ்ட் என்றால் தமிழ்நாடு ஏற்காது என்பதால் ஒரு Non—Brahminஐ நாவலிஸ்ட், நாவலிஸ்ட் என்று சொல்லிச் சொல்லிய (தமிழ்நாட்டை) நம்ப வைத்து விட்டேனே! அது என் பெரிய சாதனைதானே?" என்று க. நா. சு. நம்மிடம் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லையா? தன்னுடைய இலக்கிய வட்டத்தில் அவர் என்னை இலக்கியாசிரியன் என்று அறிமுகப்படுத்தியதோடு "இவர் ஒரு சௌராஷ்டிரர்" என்பதை மறக்காமல் குறிப்பிடவில்லையா? (நகைத்து) நான் பிராம்மணர்களிலும் சிறந்த சௌராஷ்டிர பிராம்மணன் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார் என்பதுதானே அர்த்தம். க. நா. சு. சொல்வதை ஏற்று பிராம்மணர்கள் ராமாயண பாராயணத்தைக் கைவிட்டு மௌனியைப் பாராயணம் செய்யத் தொடங்கி விடுவார்கள் என்று அஞ்சுகிறீர்களா? பிராம்மணர்கள் ராமாயணம் போன்ற எளிய நூல்களைப் படிப்பார்களே தவிர மௌனியின் சிறுகதைகளைப் படித்து மூளையைக் குழப்பிக் கொள்ள மாட்டார்கள். க. நா. சு.வுக்கு அக்ரஹாரத்தில் செல்வாக்கு இல்லை என்று அவரே சொல்லியிருக்கிறாரே! க. நா. சு. அப்படிச் சொல்லி விட்டார், இப்படிச் சொல்லி விட்டார் என்று நீங்கள் கோபமாகப் பேசுகிறீர்கள்! எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனாலும், க. நா. சு.வை நீங்கள் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது—கொள்ள வேண்டியதில்லை. அவருடைய கருத்து மாறிக் கொண்டேயிருக்கும். மௌனி ஒரே கதையைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறார் என்று அவர் தனிப்பட்ட முறையில் சொல்வதைப் பகிரங்கமாகவும் ஒரு நாள் சொல்வார் பாருங்களேன்.

க. நா. சு.வைப் பற்றியோ, மற்ற விமர்சகர்களைப் பற்றியோ நான் ஒரு நாளும் கவலைப்பட்டதில்லை. ஜாதி, மத, இன, கட்சி, நட்பு அடிப்படையில் இலக்கிய

www.padippakam.com



மதிப்பீடு செய்கிறவர்களால் என்னையோ, உங்களையோ வேறு இலக்கியப் படைப்பாளிகளையோ இருட்டடிப்புச் செய்து விட முடியாது.

கே: க. நா. சு. மணிக்கொடி கோஷ்டியைச் சேர்ந்தவர் அல்ல என்று சொல்லுகிறார்களே...

ப: மணிக்கொடியில் சொந்த படைப்புக்களான சிறுகதைகள் எழுதியவர்களை மணிக்கொடி கோஷ்டி என்று சொல்லுகிறீர்கள் இல்லையா? 'தீபத்தில்' பி. எஸ். ராமய்யா மணிக்கொடி காலம் பற்றித் தொடர் கட்டுரை எழுதி வந்தார் அல்லவா? அதன்படி என்னுடைய முதல் சிறுகதை வெளியான அதே மணிக்கொடியில் க. நா. சு.வின் 'ரங்கம்' என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. 'பேசாமடந்தை' என்ற மற்றொரு கதை பிறகு வந்தது. இந்த இரண்டு கதைகளும் க. நா. சு.வின் படைப்புகள் என்று ராமய்யா குறிப்பிட்டுள்ளளார். அது தவறு! 'ரங்கம்' என்ற கதை James Joyce (ஜேம்ஸ் ஜாய்ஸ்) இன் கதை ஒன்றின் தழுவல். 'பேசாமடந்தை' எந்தக் கதையின் தழுவல் என்று எனக்கு நினைவில்லை. இரண்டும் தழுவல் கதைகள் என்று மணிக்கொடியிலேயே அச்சாயிருந்ததோ என்று ஞாபகம். அது சரி...மணிக்கொடியில் எழுதா விட்டால்தான் என்ன? அதனால் அவர் இலக்கிய ஆசிரியர் அல்ல என்றாகி விடுமா?

கே: நீங்கள் நடத்திய இலக்கியப் பத்திரிகையான தேனீயால் இலக்கிய அந்தஸ்து பெற்ற கரிச்சான்குஞ்சு, பராங்குசம், தி. ஜானகிராமன், சுவாமிநாத ஆத்ரேயன் முதலியவர்களில் ஜானகிராமன் மட்டும் நின்று நிலைத்தமைக்கும், அவருக்கு நிகரான ஏனையோர் அமைதியாகிப் போனதற்கும் ஒரு இலக்கியப் பத்திரிகையாளன் என்ற நிலையில் உங்கள் கருத்து என்ன?

ப: அவர்களுக்கு 'Forum' கிடைக்கவில்லை என்பது ஒரு காரணம். எழுதுங்கள் எழுதுங்கள் என்று நச்சரிக்கும்

படிப்பகம்

www.padippakam.com



என்னைப் போன்ற ஆசிரியர்கள் அவர்களுக்கு இல்லாமல் போனது ஒரு காரணம். கூட்டத்தில் முண்டியடித்துப் போக அவர்கள் விரும்பாததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கே: நீண்டு பரந்த உங்கள் இலக்கிய வாழ்வில், நீங்கள் எழுத்தாளராக இருப்பது ஒரு விபத்தா? அல்லது நீங்களே விரும்பி ஏற்றுக் கொண்டதா?

ப: நானே விரும்பி ஏற்றுக் கொண்டது என்று முன்பே சொல்லியிருக்கிறேனே!

கே: நீங்கள் எழுத்தாளராக வாழ்ந்து கொண்டிருப் பதில், உங்கள் மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ கருத்து வேறுபாடு உண்டா?

ப: கிடையாது என்பது என் அதிர்ஷ்டம். எழுத் தாளனாக இருக்கும் நான் ஒரு மேதை என்று அவர்கள் நம்புகிறார்களே, அது எனக்குப் பெரிய அதிர்ஷ்டம். ஆனால் இந்த எழுத்தால் பிழைக்க முடியாது என்பதை என்னைவிட நன்றாய் உணர்ந்து விட்ட அவர்கள் நான் வேறு தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். என்னிடம் சொல்ல அஞ்சுகிறார்கள். எங்கள் வீட்டில் நானே சர்வாதிகாரி.

கே: உங்களை எதிர்ப்பட்ட பொருளாதாரச் சிக்கல் களை மிதித்து மேற்சென்று போராடியதுண்டா? அல்லது நீங்களும் எல்லோரையும் போலத்தானா?

ப: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்க வேண்டாம், மாமனிதனையும் மண்ணில் நெளியும் புழு வாக்க பொருளாதாரக் கேடு ஒன்றே போதும் என்பதை மறந்து கேட்கிறீர்கள். நான் ஒரு fighter. சண்டைக் காரன். என்னை எதிர்பட்டது பொருளாதாரக் கேடுகள் மட்டுமல்ல! உங்களால் கற்பனையும் செய்ய முடியாத

படிப்பகம்

www.padippakam.com



வேறு பல துன்பங்களும்—அவற்றில் ஒரு பர்சன்ட் கண்டிருந்தாலும் நீங்கள் நொறுங்கியிருப்பீர்கள். என்னை குழி தோண்டிப் புதைத்து விட்டு மறுபடியும் முளைக்காதபடி வெந்நீரும் கொட்டி விட்டு, நான் தொலைந்தேன் என்று அக மகிழ்ந்த என் நண்பர்கள் சிறிது காலத்தில் நான் மீண்டும் தழைத்துக் கம்பும் கிளையுமாக நிமிர்ந்து நிற்பது கண்டு பிரமித்திருக்கிறார்கள்.

கே: நீங்கள் காதலித்ததுண்டா? ஒருவரையா? பலரையா? நீங்கள் உங்கள் மனைவியைக் காதலிக்கிறீர்களா? ஆம் என்றால் எதற்காக? இல்லை என்றால் ஏன்? இவைகள் உங்கள் இலக்கியத்தைப் பாதித்திருக்கிறதா? எப்படி?

ப: (உரக்கச் சிரித்து) என்ன, naughty! naughty! நீங்கள் ஒரு மஜ்னுவைப் பேட்டி காண்பதாய் நினைப்பா?

கே: எழுத்தாளன் மஜ்னுவாக இருக்கக் கூடாதா என்ன?

ப: ஏன் இருக்கக் கூடாது? நான் மஜ்னு அல்ல! மஜ்னுவைப் போலவோ, ரோமியோவைப் போலவோ உயிரைத் துறக்கும் தீவிரத்தோடு என் மனைவி உட்பட எந்தப் பெண்ணையும் இதுவரை நான் காதலித்ததில்லை. ஆனால், பொருள் ஈட்டுவதற்காக, என் ஆயுளில் ஒரு கணிசமான பகுதி கழிவதுபோல் காமத்தை வெல்வதற்காகவும் நான் இடைவிடாமல் போராடுகிறேன்......என் அனுபவங்கள் யாவும் என் இலக்கியத்தில் பரக்க இடம் பெற்றுள்ளன. உங்களுடைய மற்ற கேள்விக்கான பதிலை என் எழுத்துக்களிலிருந்து நீங்களே கண்டு கொள்ள வேண்டியதுதான்.

கே: இலக்கியாசிரியன் ஆனது பற்றி என்றேனும் நீங்கள் வருந்தியது உண்டா? யாரையேனும் நொந்து கொண்டது உண்டா?

படிப்பகம்

www.padippakam.com



ப: சூல் கொண்டவள் வயிற்றிலேயே குழந்தையை வைத்துக் கொண்டிருக்க முடியுமா? என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை. எழுதுகிறேன். எழுதாத போதும் எழுதுவது பற்றியே சிந்திக்கிறேன்: அதனால், நான் வேறு யாரை நொந்து கொள்ள முடியும்? ஆனால் புதுமைப் பித்தன் சொன்னது போல், 'எழுத்தாளனுக்குரிய பாராட்டக் கூடத் தரத் தெரியாத இந்தச் சமுதாயத்தை எண்ணி நான் வருந்துவதுண்டு.

கே: உங்கள் பெயரில் 'அக்கரைப் பச்சை' அது இது என்று புற்றீசல் போல வெளிவந்து கொண்டிருக்கும், புத்தகங்கள் பலவும் நீங்கள் எழுதியவை அல்ல. எவரோ எழுதிய—யாரோ படைத்த நாலாந்தரப் படைப்புகளுக்கு நீங்கள் தந்தையாவது எதற்காக? தமிழுக்கே உரிய மாரீசத்துக்கு நீங்களும்; துணை போக வேண்டுமா? நீங்கள் சம்பாதிக்க வேறு வழி இல்லையா?

ப: எழுத்தாளன் எழுத்தாளனாய்ப் பிழைக்க முடியாது. வேறு தொழில்தான் செய்து பிழைக்க வேண்டும் என்கிற நிலையில் இந்தச் சமுதாயம் இருக்கிறதே என்பதற்காக நீங்கள் வெட்கமோ ஆத்திரமோபடுவதாகத் தெரியவில்லையே! நான் வேறு தொழில் தெரிந்தவன். அங்கு தோற்றதால்தான், 'கால் நூற்றாண்டுக்கு மேல் எழுதி வருகிறோமே, எழுத்தாள னாகப் பிழைக்க முடியாதா?' என்று எண்ணி சென்னைக்குப் போனேன். பதிப்பகத்தார்களை அணுகி னேன். சிறுகதைத் தொகுதிகள் விற்பனை செய்ய முடியாது; கட்டுரைத் தொகுதி, நாடகம் வேண்டாம்; நாவல்கள் வேண்டும் என்றார்கள். நாவலுக்கு ஒரு பாரத்துக்கு முப்பது ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். எங்களுக்குப் பெரிய புஸ்தகம் வேண்டும். கனமாக இருக்க வேண்டும். விலை நயமாக இருக்க வேண்டும், கம்பாஸிடர்களுக்குப் புரியும்படி இருக்க வேண்டும். உங்களால் அப்படி எழுத முடியாது என்பது எங்களுக்குத்

படிப்பகம்

www.padippakam.com



தெரியும்! வேறு மொழியிலிருந்து தழுவி எழுதிக் கொடுங்கள்... ஆனால் மொழிபெயர்ப்பு, தழுவல் என்று புத்தகத்தில் போட முடியாது. போட்டால் நூலகத்தார் வாங்கமாட்டார்கள் என்று சில பதிப்பகத்தாரே எனக்கு யோசனைக் கூறினார்கள். 'வேறு சில ஆசிரியர்கள் எழுதியதை என்னுடையது என்று எப்படிச் சொல்லுவது?' என்று தயங்கினேன். 'உங்களுடையது அல்ல என்பதை தெளிவாய் முன்னுரையில் சொல்லி விடுங்களேன்' என்பதே அவர்கள் எனக்குச் சொன்ன மறு யோசனை. அதைத்தான் நானும் செய்தேன். ஆனால் புஸ்தகங்கள் வெளிவந்த பின் சில புஸ்தகங்களின் முன்னுரையே காணோம்.

மூன்றாம் தர, நான்காம் தர ஆசிரியர்களின் நாவல்களைத் தழுவி எழுதியவையே 'அக்கரை பச்சை' போன்ற நாவல்கள். இந்த நாவல்களில் நான் எழுதியுள்ள முன்னுரையைப் படித்தீர்களா? 'இந்த நாவலின் கதைக் கரு, பாத்திரங்கள், மையக் கருத்து எல்லாம் அண்டை மொழி நாவல் ஒன்றில் இருந்து எடுக்கப் பட்டவை' என்று மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறேனே 'என்னுடையவை' என்று நான் பெருமைப்படவில்லையே!

வேற்று மொழி ஆசிரியரின் கருத்தையோ, எழுத்தையோ, வடிவத்தையோ களவாடி, அவற்றைத் தன்னுடையவை என்று வாசகரை நம்ப வைத்துப் பெருமை தேடிக்கொள்ளும் ஆசிரியனை plagiarist— என்று நாம் இகழ்கிறோம் இல்லையா? நான் அப்படிச் செய்யவில்லை. வேற்றுமொழி ஆசிரியர்களது படைப்பை என்னுடையது என்று சொல்லவில்லை. சொல்லாதது மட்டுமல்ல, அந்தப் புஸ்தகங்களால் நான் கர்வப்பட்டுக் கொள்ளவும் முடியாது. அப்படி இருக்க, நான் மாரீசத்துக்குத் துணை போனதாக நீங்கள் சொல்வதும் தவறு. இந்தத் தழுவல் நாவல்களின் முதல் பதிப்பு ஒரே ஆண்டில் விற்பனையாகிறது. தமிழில் சொந்தப்

படிப்பகம்

www.padippakam.com



படைப்பான நாவல்களின் முதல் பதிப்பு விற்பனையாக ஐந்து, ஆறு வருடங்கள் ஆகின்றன. தமிழ் வாசகப் பெருமக்களுக்குத் தேவையானதை தழுவல் நாவல்களாகத் தந்தேன்—அவ்வளவுதான். எனக்கு அதில் குரூரமான திருப்தியும்கூட. (படபடப்பாக) இலக்கியக் கனவு செய்வதை நான் முற்றிலும் வெறுக்கிறேன். வேறு ஆசிரியரின் கருத்தையோ, எழுத்தையோ என்னுடையது என்று சொல்லிக் கொள்ளும் தேவை எனக்கென்றும் ஏற்பட்டதில்லை.

கே: அது எங்களுக்கும் தெரியும் சார்... ஆமாம் "வேள்வித் தீ"யை நீங்கள் எழுத நேர்ந்த சூழல் என்ன? பதினைந்தே நாளில் எழுதியதாகச் சொல்கிறார்களே, இந்த நாவலின் ஓர் அத்தியாயம், சரித்திரக் கட்டுரை போல், நாவலோடு இணையாமல் இருக்கிறதே, இதற்குக் காரணம் என்ன?

ப: இலக்கியப் படைப்பாளிகளுக்கு துணை நிற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட 'வாசகர் வட்டத்தினர்' என்னை அணுகிப் புதிய நாவல் ஒன்று எழுதித் தருமாறு வேண்டினார்கள். ஒப்புக் கொண்டு 'வேள்வித் தீ' என்று தலைப்புக் கொடுத்து விட்டேன். செளராஷ்டிர நெசவாளர்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக என் நாவல் இருக்கும் என்று அவர்களிடம் சொன்னேன். ஆனால் கதையே எனக்குள் உருப்பெறவில்லை. அவர்கள் விளம்பரம் செய்துவிட்டார்கள், நான் கொடுத்த தவணை போய்விட்டது. அவர்கள் கொடுத்த தவணையும் கடந்துவிட்டது. அவர்கள் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதலானார்கள். நான் எழுதிக் கொண்டே இருப்பதாய் பதில் எழுதினாலும், என்னால் எழுத முடியவில்லை. இனி தள்ள முடியாது என்ற நெருக்கடி முழுமையாக உண்டானதும் தவிர்க்க முடியாமல், எழுத உட்கார்ந்தேன். இருபது இருபத்தைந்து நாளில், கதையின் rough copy-ஐ எழுதி

www.padippakam.com



முடித்தேன் என்று ஞாபகம். அந்த நாவலின் பாத்திரங்கள் பெரும்பாலும், சௌராஷ்டிரர்கள். தமிழகத்தில் மார்வாரி, குஜராத்திகள், பிழைக்க வந்து தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய சொத்து சுதந்திரங்கள், எல்லாம், அவரவர்களுடைய பிரதேசத்தில்தான். சொந்த பந்தங்கள்கூட அப்படித்தான். பிழைப்பு நடக்கவில்லை என்றாலோ, போதுமான பொருள் கிடைத்துவிட்டாலோ அவர்கள் சொந்த ராஜ்ஜியத்துக்கு திரும்பிவிடலாம். சௌராஷ்டிரர்கள் அப்படி அல்ல, என்பதை நான் அந்த நாவலில் சொல்ல வேண்டாமா? ஒரு வடமொழியைப் பேசுபவர்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தமிழர்களாய் வாழ்கிறார்கள் என்பதை சுட்டிக் காட்டவே அந்த அத்தியாயம் எழுதினேன். கதையின் போக்கோடு அது இணையவில்லை என்பது உண்மை. ஆனால் அந்த அத்தியாயத்தை நீக்கிவிட்டு அந்த நாவலைப் படியுங்கள். சௌராஷ்டிரர்கள், குஜராத்திகள், மார்வாரிகள் போலப் பிழைக்க வந்தவர்கள் என்ற சந்தேகம் உண்டாகாதா? கதைப்போக்கோடு இணையாவிட்டாலும் பாத்திரங்களின் சூழலுக்கு அது இசைவாக இருக்கிறது. நாவலுக்கு எத்தனை எத்தனையோ வடிவங்கள். இது ஒரு வடிவம் என்று கொள்ள ஏன் மறுக்கிறீர்கள்.

கே: நாவல் எழுதுவது சுலபமா? சிறுகதை எழுதுவது சுலபமா? எழுதுவதற்காக தனிப்பட்ட முறை ஏதாவது வைத்திருக்கிறீர்களா? 'மூட்' வந்தால்தான் எழுதுவீர்களா? எப்போதும் எழுதுவீர்களா? உங்கள் படைப்பு நாவல்களில் உங்களுக்குப் பிடித்தது எது?

ப: எனக்கு நாவல் எழுதுவதும் சுலபம், சிறுகதை எழுதுவதும் சுலபம். எழுதத் தொடங்குவதுதான் கஷ்டம். கதையின் கருத்துக்கேற்ப நடை கம்பீரமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறவன். என் மகாபாரத பெண்கள் பேரழகிகளாக விளங்குவதற்குக் காரணம்,

www.padippakam.com



அவர்களுடைய சிறப்பான இயல்புக்கு—அதாவது கருத்துக்கு—மிக நேர்த்தியான நடையலங்காரம் நான் அணிவித்ததே. என்னுடைய இந்த அணியழகு இல்லாவிட்டால் அந்த அழகிகளின் இயல்பு எடுப்புக்கு இராது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

முதலில் என்னுள் கதைக்கரு உருவாகிறது. பிறகு அந்தக் கருவை நாட்கணக்கில், மாதக் கணக்கில், வருடக் கணக்கில் காத்து வளர்க்கிறேன். இந்தக் கதைக்கு ஏற்ற நடை இதுதான் என்று அகத்தில் கற்பித்துக் கொள்கிறேன். இந்த நடைக்கு கற்பனை ஓசை ஏற்படுத்திக் கொள்கிறேன். இந்த ஓசை என் அகச் செவிக்கு இனிக்க வேண்டும். அதற்கு ஏற்ப கதை அல்லது நாவலின் முதல் மூன்று நான்கு வாக்கியங்கள் அல்லது ஒரு பாரா எழுதத் தான் எனக்கு நீண்ட காலமாகிறது. இந்த முதல் கட்டத்தைத் தாண்டி விட்டால் அப்புறம் எழுதுவது ஆற்றோட்டம்.

எனக்கென்று ஒரு எழுதும் முறை இருக்கிறது. கதையோ, நாவலோ இரண்டு பக்கமோ, ஐநூறு பக்கமோ முதலில் எண்ணத்தின் வேகத்துக்கு ஈடுதர மாட்டா தவிப்போடு கிறுக்கிக் கொண்டே போவேன். என் எழுத்து எனக்கே புரியாத கிறுக்கல். அதைத் திருத்தமாக எழுதும்போதுதான், எனக்கு அசாத்தியமான concentration தேவைப்படுகிறது. எந்தக் கதையையும் இரண்டு முறை எழுத வேண்டிய நிர்பந்தம் எனக்கு. மூன்று, நாலு, ஏன் சில சமயம் பத்து இருபது முறை திருத்திய கதைகள் உண்டு. கதையோ நடையோ மாறாது. ஆனால் சொற்களும் தொனிகளும் மாறும்.

'மூட்' வந்தால்தான் முன்பு எழுத முடிந்தது. இப்போது அப்படி இல்லை. எந்த நேரமும் எழுத முடியும், ஓரளவு தனிமையும் நிசப்தமும் தேவை.

படிப்பகம்

www.padippakam.com



என் நாவல்கள் எல்லாவற்றையும் நான் விரும்புகிறேன். அவற்றிலும் நான் விரும்புவது 'அரும்பு' இந்த நாவலில் கதையம்சம் மிகவும் குறைவு. பாத்திரங்களின் அகவினைகளே mental activities நாவலை நடத்துகின்றன. உலகம் இப்படித்தானே இயங்குகிறது?

கே: உங்கள் மகன் ஒரு படைப்பு, உங்கள் நாவலும் ஒரு படைப்பா?

ப: மகன் என்று ஒருமையில் பேசாதீர்கள்! என் இலக்கியம் போலவே என் மக்களும் என் பெயரை சாசுவதம் ஆக்குவார்கள்.

கே: மக்கள் செல்வம் அதிகம் படைத்த நீங்கள் ஏன் குடும்பக் கட்டுபாடு செய்து கொள்ளவில்லை? இதெல்லாம் உங்கள் இலக்கியத்துக்குப் பாதிப்பு தந்திருக்கிறதா?

ப: நான் திருமணம் செய்துகொண்ட காலத்தில் 'போய்க்கொண்டே இருங்கள்' என்று வாழ்த்தினார்களே தவிர 'நிறுத்துங்கள்' என்று யாரும் என்னை எச்சரிக்கவில்லை. எனக்கு நிறுத்தவும் தெரியவில்லை. முடியவுமில்லை. என் குடும்ப வாழ்க்கை என் இலக்கியத்தை பாதிக்காமல் இருக்குமா? என் இலக்கியத்தில் நான் நிர்குணமாக நிறைந்திருப்பது மட்டும் அல்ல. சகுணமாய், நாமரூபத்தோடு நடமாடுகிறேனே நீங்கள் கவனிக்கவில்லையா?

கே: (சிரித்தவாறு) நீங்கள் மணிக்கொடி கோஷ்டியைச் சேர்ந்தவர். அன்றைய இளைஞராகிய உங்கள் எழுத்துக்கும் இன்று எழுதிக் கொண்டிருக்கும் துணிச்சலான இளைஞர்களின் எழுத்துக்கும் என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?



படிப்பகம்

www.padippakam.com



ப: பரப்பு விரிவடைந்துள்ளது. உருவங்கள் பெருகி யுள்ளன. ஆழம் அதிகரித்துள்ளதாய் எனக்குத் தோன்ற வில்லை. சிலசமயம் அநாகரீகமானதையும் துணிச்சல் என்று சாதிக்கிறீர்கள் இன்றையத் துணிச்சல்களுக்கும் வழிகாட்டியாக அமைந்ததுதானே மணிக்கொடி கோஷ்டியின் பெருமை? உங்களுடைய துணிச்சல்களை ஏற்கிறவன், வரவேற்கிறவன் என்பது உங்களுக்குத் தெரியுமே.

கே: சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தின் அடிமை இந்தியாவில் எழுத்தாளனாக இருந்திருக் கிறீர்கள். சோசலிசம் நோக்கி நடந்து கொண்டிருக்கிற இன்றைய சுதந்திர பாரதத்திலும் எழுத்தாளனாக இருக்கிறீர்கள். இவைகளில் நீங்கள் காணும் சுகம், துக்கம், சுதந்திரம், அடிமைத்தனம், பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்...

ப: அப்போது சுதந்திரம் என்பது தெளிவான லட்சியம். அடிமைத்தனத்தை எதிர்க்க வேண்டும் என்பது பற்றி இலக்கியப் படைப்பாளிகளுக்கும் சந்தேகம் இருந்ததில்லை. ஆங்கிலேயரைப் பரிகாசம் செய்தும், மேலை நாகரிகத்தின் ஆட்சியால் பாரதப் பண்பாடு காயமுறுவதைப் பற்றியும் சில கதைகள் எழுதினேன். மிகவும் கொஞ்சம். அதிகம் எழுதுவதற்கு வாய்ப்பும் இல்லை என்பதை மறந்துவிடாதீர்கள்.

இப்போது சோசலிசம் என்ன என்பது தெரியவில்லை. ஆனால் சுதந்திர பாரதம் சோசலிசம் நோக்கி நடை போடுவதாய்ச் சொல்கிறார்கள். அடிமை இந்தியாவில் இருந்ததைவிட சுதந்திர பாரதத்தில் பிரச்சினைகள், தேவைகள், கஷ்டங்கள், பண்பாட்டுச் சேதம், அதிகம் ஆகியுள்ளன. சுதந்திரத்துக்கு இவ்வளவு குரூரமான விலை இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அடிமை இந்தியாவில் காந்தீயவாதியாக இருந்த நான்

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திர பாரதத்தில் பலாத்காரவாதியாக மாறிக் கொண்டிருக்கிறேன்.

கே: உலக இலக்கியங்களை நீங்கள் படிக்கிறீர்களா? படைப்பாசிரியனாக இருப்பவனுக்கு படிப்பு அவசியமா? அவசியமில்லையா? 'தான் படிப்பதே இல்லை' என்று சில எழுத்தாளர்கள் சொல்கிறார்களே...

ப: உலக இலக்கியங்களை நாம் கரை காண முடியாது. ஆனால் அதன் போக்கை நாம் கட்டாயம் அறிய வேண்டும். ஒவ்வொரு தொழிலுக்கும் கலைக்கும் பயிற்சி உண்டு. புது இலக்கியம் படைக்க விரும்புகிறவன் இலக்கியப் பயிற்சி இல்லாதிருந்துவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன். என்னால் படிக்காமல் இருக்க முடிவதில்லை. 'படிப்பதே இல்லை' என்று சொல்லும் எழுத்தாளர்கள் பிறவி மேதைகளாக இருக்க வேண்டும். (சிரிப்பு)

கே: இலக்கியத்துக்கு விமர்சனம் வேண்டுமா? விமர்சனம் உங்களைப் படிக்கத் தூண்டியதுண்டா? அல்லது எப்போதாவது எழுதத் தூண்டியதுண்டா?

ப: விமர்சனம் வேண்டுமா என்பது காலமான கேள்வி. இலக்கியப் படைப்போடு விமர்சனத் தோற்றம் இருக்கவே செய்யும். ஆனால், இலக்கியம் விமர்சனங்களால் வாழ்வதில்லை. ரசிகர்களால் தான் வாழ்கிறது. விமர்சனம் என்னைப் படிக்கவோ, எழுதவோ தூண்டியதில்லை.

என்னைப் பொருத்தமட்டில்—நான் என்றைக்கும் விமர்சனத்தை வெறுத்தவன். என்னைவிட—படைப்பாளியைவிடக் கெட்டிக்காரன் போல் விமர்சகன் நடிப்பதை என்னால் சகிக்க முடிவதில்லை.

எனக்கு உற்றமும் சுற்றமும் என் ரசிகர்களே. என்னைப் புரிந்து கொண்டு பாராட்டும் கனிந்த ரசிகனைக் காணும்போது நான் பரவசமாகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



கே: அமானுஷ்யமான பல கதைகள் எழுதியிருக்கிறீர்கள். புதுமைப்பித்தனுக்குப் பிறகு இந்த வகையை யாரும் தொடரவில்லை—உங்களைத் தவிர. பேய், பிசாசு, ஆவியுலகம் பற்றி இலக்கியபூர்வமான படைப்புகளை வேறு யாரும் தந்ததில்லை. இவைகளோடு நேரடியான தொடர்புகளும் அனுபவங்களும் உங்களுக்கு உண்டா? நம்பிக்கை உண்டா?

ப: உங்களுடைய கேள்வியில் ஒரு திருத்தம்; பேய், பிசாசுகள், ஆவியுலகம் பற்றி நான் இன்னும் எழுதவில்லை. என் கதைகளில் வருபவை—வேறுவகை சக்திகள். இந்தப் பேதங்கள் பற்றி இந்தச் சந்திப்பில் நாம் பேச வேண்டாம்.

கே: இப்போது எழுதுகிற இளைஞர்களுக்கு நீங்கள் சொல்வது...

ப: என்னிடம் உபதேசம் கேட்பது போல் கேட்டு **condemn** செய்து ரேழியில் தூக்கிப் போட சூழ்ச்சி செய்கிறீர்களா?

கே: இல்லை சார்... உங்களுக்கு எங்களைவிட வயது அதிகம் தானே...

ப: வருஷக்கணக்கில் வயதைக் கணிக்கும் மரபுவாதிகளான உங்களுக்குச் சொல்கிறேன். நானும் நீங்களும் நாளையக் கிழவர்கள் என்பதை மறக்காமல் பொறுப்புணர்ச்சியோடு எழுதுவோம்.

கே: (சிரித்து) உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

ப: உங்களைப் போலவே எனக்கு முன்னால் நீண்ட எதிர்காலம் பரந்து கிடக்கிறது. இந்த உடல் இருக்கும் வரை, சிருஷ்டிக் கலையை நான் பயில்று கொண்டேயிருப்பேன்.

பேட்டியாளர்கள் : வணக்கம். வருகிறோம்.

எம். வி. வி. : வணக்கம். போய் வாருங்கள்.

www.padippakam.com

**மௌனி அவர்களை**

**பேட்டி கண்டவர் :**

**துர்வாஸ ஜே. வி. நாதன்**

மறுபதிப்பு

**கணையாழி**

*டிசம்பர்—1991*

படிப்பகம்

www.padippakam.com

# மௌனியின் மௌனம் கலைகிறது

சுறுசுறுப்பு நிறைந்த, 68 வயது இளைஞரான மௌனியைச் சமீபத்தில் சிதம்பரத்தில், அவர் இல்லத்தில் சந்தித்தேன். எழுத்துக்களைப் போலவே அவருடைய பேச்சும் ஒரு உன்னதமான அனுபவமாக மிளிர்கிறது. "உங்களுக்காக நான் பேசவில்லை. என்னையே நான் clarify பண்ணிக்கிறேன்" என்று கூறிக்கொண்டு அவர் பேசுகையில்... எனக்குப் பிரமிப்புத்தான்.

படைப்பவனுக்கும் (கலைஞன்) அவனது படைப்புக்கும் உள்ள சம்பந்தம்பற்றி மௌனி கூறினார் : ஒருவன் தன் பிள்ளை கலெக்டராகப் போக வேண்டும் என்று நினைத்து பிள்ளை பெற்றெடுக்கலாம். அவன் வளர்ந்த பின் ஜெயிலில் இருக்கலாம். தகப்பன் எவ்வளவு தூரம் தன் எண்ணம் ஈடேறாததைக் குறித்து நொந்து கொள்ள முடியும், எந்த விதத்தில் கொள்ள வேண்டும்: பிறந்த பிள்ளை தனி object. தனி உயிர் பெற்றது. அது நன்றாக இருக்குமானால் படைப்பாளி தன் மார்பை எப்படி பெருமிதத்துடன் உயர்த்திக் கொள்ள வேண்டும்! அல்லது ஆனந்தவிகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளுக்கு உயரிய கதை எழுதி அனுப்பி திரும்பப் பெற்றால் எந்த மனோபாவம் கொள்ள வேண்டும் psychological mistake என்று சொல்லக் கூடிய - தரமற்ற பத்திரிகைகள் அவை என்று தூற்றுவது rational ஆகுமா? அவை அப்படி இருக்கலாம். ஆனால் இவன் இந்த முடிவிற்கு இந்தக் காரணம் முன்னிட்டுக் கொள்வது logical? தற்போது அநேக குழுவினரையும்... ஒரு reaction விளைவாகத்தான் தான் காண முடிகிறது.

நான் இப்பல்லாம் ஏன் எழுதறதில்லைன்னு எல்லோரும் கேட்கிறார்கள். எழுத நிறைய விஷயம் இருக்கு. I am a writer and artist always. எனக்கு சுய விமர்சனம் (self criticism) அதிகம். வரவர விமர்சனப் பார்வை அதிகமாவதால் முன்பு எழுதியவதைவிட இப்போது எழுதினால் இன்னும் புரியாமல்தான் போகும் என நினைக்கிறேன். கலை வெளியீட்டுக்கு (expression) தமிழ் மொழி இப்போதுள்ள நிலையில் செயல்பட முடியாது. 40 ஆண்டுகளுக்கு முன்னால் நான் எழுதத் தொடங்கிய போது இருந்ததைப்போலவே, விருத்தியடையாமல் தமிழ் இருக்கிறது. எல்லாவற்றையும் in and through words சொல்லியாக வேண்டியிருக்கு. என் மூளை எழுதிப் பார்க்கிற சில அபூத impression களை express செய்ய மிகவும் சிரமமாக இருக்கிறது.

**கலை என்பது என்ன?**

அனுபவ வெளியீட்டை அழகாகச் செய்தால் கலை ஆகும். அனுபவம் என்பது வார்த்தையற்றது: உணர்வால் பெறப்படுவது. Experience should be aesthetic. பிரம்மத்தின் manifestationதான் நாமெல்லோரும். அரூப பிரம்மத்தின் குணங்கள் சொல்லப்படும்போது பல்வகைப்படும். முக்கியமாக, சத் (exists) சித் (consciousness) ஆனந்தம் (enjoyment) மாயை என்பது சம்பந்தப்படும்போது நாமரூபங்கள் 5 வித குணமுடையதாக ஏற்படுகின்றன. நாமரூப பேதமே உலகை விதம் விதமாகக் காட்டுகின்றது. அதனால்தான் அனுபவங்களும் விதம் விதமாக ஏற்பட இருக்கின்றன. பிரத்யட்ச அனுபவத்தில் நான்கு வகையாகப் பிரித்து தனியெனக் காண வகையுண்டு. *(1)* Cognetive mode of experience, *(2)* Moral code, *(3)* Religious mode and *(4)* Aesthetic mode. இதன் அடிப்படையில் பிரத்யட்ச ஞானம் இல்லாத போதும் பழைய அனுபவ ஞாபகத்திலிருந்து images தோன்ற முடியும் - imagination

www.padippakam.com



sublimate ஆகி, symbolical ஆக எழுத்து மூலம் படைப்பாக வெளிவரலாம்... இப்படியாக வெளி வியாபகத்திற்கு ஒரு passion மிகத் தேவை. Passion இல்லாத அனேக பெரிய artists அரிய aesthetic experienceஐ அனுபவிக்க முடியும், எழுதாமலே. அநேகமாக இப்படித்தான் என் காலம் இப்போது போய்க்கொண்டிருக்கிறது. அச்சமயம் யாருடனாவது பேசினால் நான் எதை எதையோ, வார்த்தைக்கு அப்பாலிருந்து வார்த்தை மூலம் ஒரு அனுபவத்தைக் கொடுப்பதாகிறது... யார் எவரிடம் என்பதன்றி - அவர்கள் மனோபாவத்தை, விசாலத்தைப் பொறுத்து - எதையும் நினைக்க இருக்கலாம்...

Aesthetive mode of experience என்கிற போது subjective-objetive மறைந்துபோய் mystic levelல் self contained ஆக சஞ்சாரம் பண்ணின்டு, universal ஆக- place, time எல்லாம் மறைந்து போய்விடுகிற இடம்- அதுவே spontaneoius overflow ஆக மாறிவிடுகிறது. உண்மையான கலைஞனுக்கு அனுபவம் வெளியீடு ஆகும் போதும் வார்த்தைகள் தாமாகவே வந்து விழுகின்றன. நாயைக் கட்டியிழுப்பது போல் வார்த்தைககளைக் கட்டி இழுப்பதெல்லாம் timeல் அடிபட்டு போய்விடக்கூடியவை.

ஒரு எழுத்தாளனுக்கு எதை எழுத வேண்டும் என்று தெரிந்திருப்பதை விட, எதை எழுதக்கூடாது என்று அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இந்த artistic restraintதான் அவனைக் கலைஞன் அளவுக்கு உயர்த்த முடியும் (consciousness proposes-Id disposes)

என் சிறுகதைகளில் சில வரிகளைப் பாருங்கள் :

"விட்டில் பூச்சிகள் போன்று விளக்கை வட்டமிட்டே அழிவதுதானா ஆடவர் வாழ்க்கை? கிட்டே நெருங்க கவர்ச்சி கொடுக்காது இருக்க எப்படி முடியும் பெண்களால்? இருட்சுடரைக் கொண்டு விளக்காக முடியுமா?" (சாவில் பிறந்த சிருஷ்டி)

படிப்பகம்

www.padippakam.com



"நாம் சாயைகள்தானா? எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?" (அழியாச்சுடர்)

"ஆதாரமற்று நினைப்பதிலும் அதிர்ந்து இடிய, வடிவாகும் கற்பனைக் கோட்டை" (மனக்கோலம்)

நினைப்பதால் உருவாகிற கோட்டை, நினைப்பதால் இடிகிறது. இரண்டுக்கும் நினைவே காரணமாகிறது.

இந்த வரிகள் யாவுமே subjective-objective இரண்டும் ஒன்றாகிக் கலந்து symbolicalஆக மேல் நிலைக்குப் போகிற constructions. வலிந்து கட்டிக் கொண்டு, வார்த்தைகளைக் கோர்த்து இவற்றை உருவாக்கிவிட முடியாது. தானாக, அர்த்த அழுத்தத்துடன் தோன்றி உதிர்ந்தவை இவை.

வார்த்தைகளை வலிந்து அடுக்கி, சுழற்றி மேற்பூச்சு நகாசு வேலை செய்பவன் artist ஆகமாட்டான். அவன் ஒரு artisan அவ்வளவுதான். அதிலும் மொழியின் இலக்கியப் பிரயோகத்தைப் புரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ள முடியாமல், மேற்போக்கு நகாசுக்கான pliable medium தான் மொழி என நினைப்பவன், (பொற்கொல்லனுக்குத் தங்கம் மாதிரியாக) மொழி மூலமாக creative process எப்படி இயங்குகிறது (symbolical ஆக) என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவன் கலைஞனாவது முடியாத காரியம்.

**'நனவோடை எழுத்தாளர்' என்று**
**சிலரைக் குறிப்பது பற்றி...?**

Stream of consciousness என்பது unorganised primary data of experience or perception from an artist. பளீர் பளீரென்று artistஐக் வாட்டக்கூடியது. நமக்கு ஒரு aesthetic satisfactionஐ கொடுக்கக் கூடியது. புரியாததை தான் தெரிந்தவன் எனக் காட்டத் தெரிந்ததென இரண்டொரு வார்த்தை பிரயோகங்களை தனக்கு இஷ்ட

படிப்பகம்

www.padippakam.com



தேவதையான சில கதாசிரியர்களுக்கு சேர்த்து அடிக்கடி உபயோகப்படுத்துவதால் நிகழும் அபத்தங்களில் ஒன்று இது.

**எழுதுவதற்கு, experience பண்ண வேண்டும் என்பது அவசியத் தேவையா?**

மனைவி செத்துப்போன ஒருவனின் மனநிலையை 'மாறுதல்' சிறுகதையில் எழுதியிருக்கிறேன். இதோ என் மனைவி உயிருடன் இருக்கிறாள். அனுபவத்தால்தான் எழுத வேண்டுமா என்பது இருக்கட்டும்; experience பண்ணுகிறபோது எழுதமுடியுமா...?

குடிகாரன் மாதிரி ஒருவன் நடிக்கிறான். குடித்து விட்டு ஒருவன் மண்ணில் விழுந்து கிடக்கிறான். முன்னது 'குடிகாரனது நிலை' வெளியீடு; பின்னது 'குடிகாரனின்' வெளியீடு. என் 'காதல் சாலை' சிறுகதையில் ஒரு குடிகாரன் வருகிறான். அது Drunken stateன் aesthetic experience ஆகும் - இது ஒரு paradox.

'கண்ணதாசன்' (செப்டம்பர்-73) எம்.வி.வி. பேட்டியில் என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தவைகளில் சில தவறுகள் நேர்ந்துள்ளன. 'தேனீ'யில் வெளிவந்த என் இரண்டு சிறுகதைகள் எந்தச் சூழ்நிலையில் எழுதப் பட்டவை, தரப்பட்டவை என்பதைச் சொல்கிறேன்.

'மனக்கோலம்' (1948) கதையை என் வழக்கப்படி திருப்தியின்றி வெவ்வேறு script ஆக பதினைந்து தடவைக்கு மேல் எழுதிக் கிழித்தும், கடைசியாக நான் பக்கம் பக்கமாக எழுதிப்போட, கரிச்சான்குஞ்சு அருகிலிருந்து வாங்கிக் கொள்ள - மகளின் திருமணம் முடிந்த அன்று நள்ளிரவு ரயிலில் சிதம்பரம் திரும்பியாகவேண்டிய அவசரத்தில் - கரிச்சான்குஞ்சு, கதையின் கடைசிப் பக்கத்தை இன்னொரு தடவை படித்துவிட்டு, வேறு எழுதக் கோரியபோது "அவ்வளவுதான்-அதைத் திருப்பிப் பார்த்தால்-எல்லாமே எனக்குத் திருப்தி தராமல் கிழித்துப்

www.padippakam.com



போட்டுவிட்டு வேறு எழுதத் தோன்றிவிடும்... நான் ஊருக்குக் கிளம்பியாக வேண்டும்" என்று கிளம்பி விட்டேன்.

எம். வி. வி. தன் பேட்டியில் 'முதல் கதையை நேரில் கொண்டு வந்து தந்தார். திருத்திப் போடு என்று சொல்லி விட்டுப் போனார், என்று கூறியிருப்பதற்காக இதனைக் கூறுகிறேன்.

இரண்டாவது சிறுகதையை நான் 'தேனீ'க்குத் தந்த கதை இது: அப்போது க. நா. சு. பொறுப்பேற்று நடத்திய 'சந்திரோதயம்' பத்திரிகையின் ஆண்டும் மலர் ஒன்று கொண்டு வரப் போவதால் என் கதை வேண்டு மெனக் கேட்க நான் எழுதிக் கொடுத்த கதை: நினைவுச் சுவடு (1948). சந்திரோதயத்தில் அப்போது உதவி ஆசிரியராக சி. சு. செல்லப்பாவும், ஓவியராக சாரதியும் இருந்தார்கள். 'சந்திரோதயம்' மலர் வெளியிடும் முன்பே நின்று விட்டது. அச்சமயத்தில் எம்.வி.வி. 'தேனீ' பத்திரிகைக்கு என் கதை அவசியம் தேவையென்று கேட்க நான் க.நா.சு.விடம் வெளியிடாமல் வைக்கப்பட்டிருக் கும் என் கதையைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளச் சொன்னேன். க. நா. சு. அந்தக் கதைத் தாள்களை கறையான் அரித்துவிட்டதாகக் கூறியதால், மறுபடியும் எம்.வி.வி. என்னை வந்து துளைத்தார். 'நினைவுச் சுவடு' கதையைத் திருப்தியின்றி மாற்றி மாற்றி எழுதிய கடைசி versionக்கு முந்திய பிரதி தற்செயலாக அகப்பட, அதை அவருக்குக் கொடுத்தேன். அதுவே 'தேனீ'யில் வெளிவந்த எனது இரண்டாவது சிறுகதை.

நான் கதை எழுதுவது என்பதே நாள் கணக்கில் ஏற்படுகிற - சிரமமான விஷயமாக இருக்க, 'கதை எழுதி வைத்திருந்து விகடனுக்கும் குமுதத்துக்கும் அனுப்பி திரும்ப வந்துவிட்டது' என்று நான் வருத்தப்பட்டதாக(!) எம்.வி.வி. தன் பேட்டியில் கூறியிருப்பது உண்மையில்லாத விஷயம்.

www.padippakam.com



மேலும் அவர் கூறியிருந்தார் : "மௌனி ஒரு கதைக்கான plot இருப்பதாகவும், எழுதப்போவதாகவும் சொன்னார். plot ஐயும் சொல்லிக்கொண்டே வந்தார். அது எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. 'சொல்லாதீர்கள். நானே எழுதிவிடுவேன் போலிருக்கிறது' என்று தடுத்தேன். 'எழுதேன், அதனால் என்ன? நானும் எழுதுகிறேன்' என்றார். அவர் சொன்ன கதைக் கருவிலிருந்துதான் 'கருகாத மொட்டு' என்ற என் கதை தோன்றியது. அவர் அதே பிளாட்டைப் பயன்படுத்திக் கதை எழுதுகிறாரா என்று எனக்குத் தெரியாது"

எம். வி. வி.க்கு நான் கூறிய பிளாட்டை வைத்துத்தான் 'பிரக்ஞை வெளியில்' (சரஸ்வதி-1960) என்ற என் சிறுகதை எழுதப்பட்டது.

கருகாத மொட்டு, பிரக்ஞை வெளியில் - இவ்விரு கதைகளுடன் ஜெயகாந்தனின் 'உடன்கட்டை' சிறுகதையையும் சேர்த்துப் படியுங்கள்!

அதே போல, என் 'எங்கிருந்தோ வந்தான்' கதையைப் படித்துவிட்டு, புதுமைப்பித்தனின் 'காலனும் கிழவியும்' கதையைப் படியுங்கள். 'எங்கிருந்தோ வந்தான்' சிறுகதையின் இரண்டு வரிகளைக் கொண்டு மிகவும் புத்திசாலித்தனமாக அக்கதையை புதுமைப்பித்தன் எழுதியிருக்கிறார். உண்மையிலேயே அது நல்ல கதையாக அமைந்துவிட்டது.

'ஹிந்து' உள்பட முக்கியமான தினசரிகளில் 'மௌனியைச் சந்தியுங்கள்' என்று எம்.வி.வி. விளம்பரம் கொடுத்தது, 'கண்ணதாசன்' இதழைப் பார்க்கிறவரை எனக்குத் தெரியாது.

**விமர்சகன் யார் ?**

(1) விமர்சகன் என்பவன், தன் மனச்சாயையினைத் தவிர்த்து objective ஆகப் பார்க்கக் கூடியவனே. object என்பது தனித்து எதிரில் உள்ளது. அதுபற்றி விமர்சகன்

www.padippakam.com



objective validity கொடுத்து value judgement பண்ண வேணுமே தவிர, முன்னதாகக் கொண்ட அபிப்ராயங்கள், தன் மனச்சாயை போன்றவைகளை அளவுகோல்களாகக் கொள்வது அறவே கூடாது. (factual judgementக்கு objective validity இருப்பது போன்று value judgementக்கு objective basis உண்டா என்பது ஒரு நிரடான பிரச்சினை...) அந்தக் காலத்தில் நாங்கள் இலக்கியம் பற்றிய விஷயங்களைக் காரசாரமாக விவாதிப்போம். ஒருவர் கதை சரியில்லை என்றால் முகத்துக்கெதிரே சொல்வதில் தயக்கமோ, கேட்பதில் அவருக்குக் கோபமோ வராது.

ஒரு தடவை ந. முத்துசாமி பத்திரிகை ஆரம்பிப்பது பற்றிப் பேசியபோது நான் சொன்னேன்: எந்த articleஐ யார் எழுதிய போதிலும், அதில் ஒரு வார்த்தைகூட அனாவசியம் - சரியல்ல எனில் அந்த articleஐ தூக்கி எறிந்துவிட்டு - தரமான விஷயம் கிடைக்கவில்லையானால் பக்கங்களை வெள்ளையாக விட்டுவிடும் தைரியம் இருந்தால் ஆரம்பிக்கலாம்."

நான் சிறுகதை எழுதுகிற process ரொம்ப சிரமம் தருவது, ஒரு தடவை எழுதி முடித்த முழு versionஐ மறுபடியும் மாற்றி எழுதுவேன். திரும்பத் திரும்பப் பலமுறை எழுதுகையில் ஒவ்வொரு தடவையும் கதையின் version புதிதாக மாறியிருக்கும். எப்படி - எத்தனை தடவைகள் எழுதிய போதிலும் திருப்தி ஏற்படுவதில்லை. பத்திரிகையில் வந்த பிறகும், இதைவிட நன்றாக எழுதியிருக்கலாம் என்ற தோற்றம் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏதோ ஒரு versionஐ கேட்டவருக்கு அனுப்பி வைத்துவிடுவேன். என் கதைகள் ஒன்றுக்குக் கூடத் தலைப்பு நான் வைத்ததில்லை. எழுதிய கைப் பிரதிகளையோ, அச்சில் வந்தவைகளையோ பாதுகாத்து வைக்கிற பழக்கம் எனக்கில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இப்போதெல்லாம் என்னைத் தெரிந்த நிறையப் பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன - என் பழைய விலாசத்திற்கு. எப்படியோ அவை என் புது முகவரிக்கு வந்து சேர்கின்றன. அநேகம் வராமலும் இருக்கலாம். பத்திரிகைகளில் கவிதைகள் அதிகம் வெளிவருவதாகத் தெரிகிறது. என் கண்களில் cataractக்கும் Retina detachmentக்கும் ஆபரேஷன் செய்த பிறகு படிப்பது ரொம்ப ரொம்பச் சிரமமான விஷயம். எழுதுவது அதைவிட. சேர்ந்தாற்போல் 10 நிமிஷங்கள் படித்து முடித்து 10 நிமிஷம் கண்களுக்கு ஓய்வு கொடுத்துத் திரும்பவும்... இப்படித்தான் இப்போதும் நாளைக்கு இரண்டு மணிக்குக் குறையாமல் ஏதாவது செய்கிறேன்.

**எது கவிதை?**

என் சிறுகதைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றும் ஒரு கவிதையே. poem is a linguistic artifact whose function is to organise the primary data of experience that can be exhibited in and through words.

**சிறுகதை எழுதுவதன் குறிக்கோள் என்ன?**

நான் இதற்கு என்ன பதில் கூறவேண்டுமென்று விரும்புகிறீர்கள்? காசுக்காக—புகழுக்காக—கலை, கலைக்காக—என்றெல்லாமா? இதே கேள்வியைச் சற்று மாற்றி ஆல்பர்ட் ஃப்ராங்க்ளின் எ ு னைக் கேட்டார். "why do you write?" என்று. அவருக்குக் கூறிய பதிலையே கூறுகிறேன் "என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை—அதனால் எழுதுகிறேன்..."

நான் நிறைய எழுத வேண்டும். சிறுகதைகளாக—என் இலக்கியக் கொள்கைகளைக் கட்டுரையாக—என்றெல்லாம் வற்புறுத்துகிறார்கள். எழுத வேண்டும் என்ற வேகமும் எனக்கு இருக்கிறது. இப்போதுள்ள

www.padippakam.com



தமிழ், வெளியீட்டுக்கு சரியான அளவில் துணை புரிய முடிவதில்லை, சிரமப்பட வேண்டியிருக்கிறது - எப்படியும் எழுதுவேன்.

'தீபம்' பட்டிமன்றத்தில் 'தனக்கும் புரியாமல் பிறருக்கும் புரிந்துவிடக் கூடாது என்று எழுதுபவர்' என்று என்னைப் பற்றி ஒருவர் குறிப்பிட்டார். 'ஞானரதம்' பத்திரிகையில் 'சுயதரிசனம்' என்று நான் பேசியதைத் தொகுத்து எழுதினார்கள். அக்கட்டுரையில் பல பிழைகள்... என் எழுத்தே எனக்குப் புரியாததை பிறருக்குப் புரியாத வகையில் இருப்பதாக இருக்கிறதே! நான் பேசுவது புரிந்தவர்கள் பிறருக்குப் புரிய எழுதுவது எப்படியிருக்க முடியும்? இப்போது நான் பேசியதைப் புரிந்து நீங்கள் எழுதி வெளியிடப் போவதாகச் சொல்கிறீர்கள்...?!

நான் பெயரளவில்தான் மௌனி எனவும், ஓயாமல் பேசுவேன் என்றும் எம். வி. வி. தன் 'கண்ணதாசன்' பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். உண்மைதான். நான் நிறைய பேசுவேன். பேசுகிறேன். பேசுவது எதிரில் இருப்பவர்களுக்காக அல்ல. என்னால் சுவற்றுடன் பேச முடியவில்லை. வார்த்தைகள் மூலமாக self clarification பெறும் நோக்கமே என் ஓயாத பேச்சுக்குக் காரணம். என் சிறுகதைகளை நான் பலமுறை ஏன் எழுதிப் பார்க்கிறேனோ, அதே காரணம்தான் என் பேச்சுக்கும். எதிரில் இருப்பவர்களுக்குப் புரிய வைப்பது என் வேலையென்று நான் நினைக்கவில்லை. In and through wordsல் எல்லாவற்றையும் சொல்லியாக வேண்டியிருக்கிறது. பேச்சில், எழுத்தில் என் impressionகளை, experienceகளை சரியாக express செய்ய நான் பெரிதும் பாடுபடுகிறேன்.

அதனாலேயே நான் பெரிதும் நம்புகிறேன்: "My works will live, so long as Tamil lives".

△ △ △

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்